# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 2020

**www.tnpscthervupettagam.com**




















SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 10
தமிழ்நாடு செய்திகள் ........ 16
ஒரு தேசம், ஒரு குடும்ப அட்டைத் திட்டம் - தொடக்கம் ........ 16
சென்னை திடக் கழிவு மேலாண்மை ........ 16
இந்தியாவின் முதலாவது மேம்படுத்தப்பட்ட உற்பத்தி மையம் ........ 17
ஐ.நா. குளோபல் காம்பாக்ட் விருது (Global Compact award ) ........ 17
சரத்து 162ன் கீழ் நிர்வாக வழி உத்தரவு ........ 17
தேசியச் செய்திகள் ........ 18
மாநிலங்களால் பயன்படுத்தப்படும் SDRF–ன் வரம்பு அதிகரிப்பு ........ 18
கம்பிவட தாங்குப் பாலம் ........ 19
இந்தியாவின் மகிழ்ச்சி அறிக்கை ........ 19
நமாமி கங்கைத் திட்டங்களின் கீழ் 6 திட்டங்கள் ........ 19
ஓட்டுநர் உரிமம், RC ஆகியவற்றின் மின்னணு நகல் சரிபார்ப்பு ........ 20
குறிப்பிட்ட காலத்திற்குள் இனிப்புக்கான பயன்படுத்துதலைக் காட்சிப் படுத்துதல் ........ 20
இரண்டாவது தேசிய செரோ ஆய்வு ........ 20
சாத்தி செயலி ........ 21
கடுகு எண்ணெய் கலப்பு மீதான தடை ........ 21
NIA-ன் கூடுதல் கிளைகள் ........ 22
பாப்ரி மஸ்ஜித் இடிப்பு வழக்கு ........ 22
300வது மேம்படுத்தப்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் ........ 23
சம்வேத்னா முயற்சி ........ 23
ஆபரேஷன் மை சஹேலி (Operation My Saheli) ........ 24
அம்பேத்கர் சமூகப் புத்தாக்கம் மற்றும் தொடக்க நிறுவனங்களைக் காக்கும் திட்டம் ........ 24
சீரழிந்த மற்றும் காடுகள் அழிக்கப்பட்ட நிலங்களை மீட்டெடுத்தல் ........ 25
மிகமிக முக்கியமான நபர்களின் (VVIPs) பிரத்தியேகப் பயன்பாட்டிற்கான முதலாவது விமானம் 25
பழங்குடியினர் இந்தியா இ-சந்தையிடல் ........ 26
பிரதான் மந்திரி சுவாநிதித் திட்டம் ........ 26
முதலாவது 2 கரிம நறுமணப் பொருள் விதைப் பூங்காக்கள் ........ 26
தூய்மையாக்கப்பட்ட சீரம் எதிர்ப்பு (Antisera) சிகிக்சை ........ 26
அடல் சுரங்கப் பாதை ........ 27
வைபவ் (VAIBHAV) மாநாடு 2020 ........ 28
“SUNIDHI” முன்னெடுப்பு ........ 28
ஆரோக்கியமான முதுமையின் பத்தாண்டு காலம் ........ 28
ஜவுளிப் பாரம்பரியங்கள் குறித்த முதலாவது சர்வதேச இணையவழிக் கருத்தரங்கு ........ 28
RAISE - மாநாடு ........ 29
இந்தியாவின் முதலாவது விலங்குப் பாலங்கள் ........ 29
நமஸ்தே டிஜிட்டல் - கூகுள் ........ 30
“சிறியதை வலுவாக மாற்றுதல்” பிரச்சாரம் ........ 30

இந்தியா பிவி முனை 2020 ..... 31
இந்தியப் பருத்திக்கான முதல் நிறுவன அடையாளம் மற்றும் சின்னம் ..... 31
ஆழ்கடல் ரோந்துக் கப்பல் விக்ரகா ..... 32
கியான் சுழற்சி முன்முயற்சிகள் ..... 32
சாகர் கவச் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சி ..... 32
மட்லா அபியான் பயிற்சி ..... 33
"ஸ்வமித்வா" (SVAMITVA) திட்டத்தின் கீழ் சொத்து அட்டைகள் ..... 33
8 கடற்கரைகளுக்கான நீலக் கொடி சான்றளிப்பு ..... 34
காமதேனு தீபாவளி அபியான் ..... 34
இந்திய ஆற்றல் மாதிரி மன்றம் ..... 35
கப்பல்களின் மறு சுழற்சிக்கான தேசிய ஆணையம் ..... 35
குளிர்சாதன வசதியற்ற பெட்டிகளை மேம்படுத்தல் ..... 36
சரல் ஜீவன் பீமா ..... 36
பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுக்கான ஆதார் அட்டை ..... 36
நீளமான இரு திசைப்பட்ட சுரங்கப் பாதை – ஆசியா ..... 36
ஸ்டார்ஸ் (STARS) திட்டம் ..... 37
கபிலா (KAPILA) திட்டம் ..... 37
தாளடி எரிப்பைத் தடுப்பதற்கான குழு ..... 37
குருதியழிவுக் சோகை (தாலசீமியா) பால் சேவா யோஜனாவின் இரண்டாம் கட்டம் ..... 38
குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் ..... 38
சிறப்பு கிசான் இரயில் நாக்பூர் – புது தில்லி ..... 38
கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல் – மியான்மர் கடற்படை ..... 39
மின்னணுத் தடுப்பு மருந்து நுண்ணறிவு அமைப்பு (EVIN) ..... 39
புல்தானா மாதிரி (Buldhana Pattern) ..... 40
தேர்தல் பிரச்சாரச் செலவினம் அதிகரிப்பு ..... 40
இஸ்ரேலிடமிருந்து நீர் இணைப்பு ..... 40
சிபிஐ விசாரணைக்கான 'பொது ஒப்புதல்' ரத்து – மகாராஷ்டிரா ..... 40
நுண்ணோவியத்தில் வாழ்க்கை எனும் திட்டம் ..... 41
தேர்தல் செலவுக் குழு ..... 41
ஆயுஷ்மான் சஹாகர் ..... 41
ஹீங் சாகுபடி ..... 41
ஊரக இந்தியாவில் ஊட்டச்சத்து உணவைப் பெறும் நிலை ..... 41
முதலாவது தொகுதி பெண் விமானிகள் ..... 42
இ-தார்த்தி புவியியல் தளம் ..... 42
இந்தியச் சுற்றுலாப் புள்ளிவிவரம் ..... 42
இந்தியாவில் சராசரி வாழ்நாள் கால அளவு ..... 43
நான்காவது இந்திய ஆற்றல் மன்றம் ..... 43
தில்லி பல்கலைக்கழகத் துணைவேந்தர் இடைநீக்கம் ..... 43
ஜம்மு காஷ்மீரில் நிலம் ..... 43
அருணாச்சல பிரதேசத்தில் அரசுக் காப்பீட்டுத் திட்டம் ..... 44
பால் உற்பத்தியின் மீதான சான்றுகள் ..... 44
**சர்வதேசச் செய்திகள் ..... 45**

பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த அமைச்சரவை வட்டமேசை சந்திப்பு ........ 45
பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த ஐக்கிய நாடுகள் சந்திப்பு ........ 45
SCO வெளியுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பு ........ 45
உலகளாவிய பாலின எதிர்வினைக் கண்காணிப்பகம் ........ 46
சர்வதேச ஆற்றல் பாதுகாப்புக் கருத்தரங்கு 2020 ........ 46
பசு வதை மீதான தடை ........ 46
ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 75வது அமர்வு ........ 46
ஆர்மீனியா – அசர்பைஜான் பிரச்சினை ........ 47
போங்கோசாகர் மற்றும் கார்பெட் கடற்படைப் பயிற்சி ........ 48
பெண்கள் குறித்த 4வது உலகக் கருத்தரங்கின் 25வது நினைவு தினம் ........ 48
நியூ கலிடோனியா வாக்கெடுப்பு ........ 49
கோவிட் – 19 நோய்த் தடுப்பு மருந்து சோதனைக்காக வேண்டி இந்தியா + 5 ........ 50
சிட்வி துறைமுகம் – மியான்மர் ........ 50
ஒரு நாள் பிரதமர் ........ 51
“சாம்பல்” நிறப் பட்டியலில் பாகிஸ்தான் ........ 51
“சிறந்த ஆய்வக நடைமுறையின்” (GLP) துணைத் தலைவர் பதவி ........ 51
பன்னாட்டு சூரிய சக்திக் கூட்டணியின் மூன்றாவது கூட்டம் ........ 51
ரஷ்யா மற்றும் பெலாரஸ் மீது தடை ........ 52
இரண்டாம் உலகப் போர் குண்டு “Tall boy” ........ 52
இரண்டாவது கோவிட் – 19 தடுப்பு மருந்து – ரஷ்யா ........ 53
கற்பழிப்பு வழக்குகளுக்கான மரண தண்டனை குறித்த அவசரச் சட்டம் ........ 53
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தில் இடங்கள் ........ 53
மறைகுறியாக்கப்பட்ட சமூக ஊடகச் செய்திகளுக்கு எதிரான பிரச்சாரம் ........ 53
ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ் என்பதன் மீதான கட்டமைப்பு ........ 54
ஜி20 Y20 மாநாடு ........ 54
SCO அமைப்பின் தலைமை வழக்குரைஞர்களின் 18வது சந்திப்பு ........ 54
இலங்கையின் 20வது சட்டத்திருத்தம் ........ 55
ஊழல் தடுப்புச் செயற்குழு ........ 55
இந்தியா மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு ........ 55
SLINEX 20 ........ 56
சூடான் மற்றும் இஸ்ரேல் ........ 56
எதிர்காலப் பணிகள் அறிக்கை – 2020 ........ 56
44வது OECD சர்வதேச இடப்பெயர்வு கண்ணோட்ட அறிக்கை ........ 57
உணவுத் தட்டின் விலை 2020 ........ 57
தொழிலாளர் சந்தையில் பாலின இடைவெளி குறித்த ஐக்கிய நாடுகள் அறிக்கை ........ 57
நிதியியல் வறுமையில் உள்ள குழந்தைகளின் மீதான உலகளாவிய கணிப்பு : ஒரு தகவல் புதுப்பிப்பு ........ 58
உலக செல்வவள அறிக்கை 2020 ........ 58
ஆசிய வலிமைக் குறியீடு 2020 ........ 58
மனித இயக்கம், பகிரப்பட்ட வாய்ப்புகள் ........ 59
சகாரோவ் பரிசு 2020 ........ 59
பெனி பாலம் ........ 59
சாம்சங் நிறுவனத்தின் தலைவர் லீ குன்-ஹீ ........ 60

ஐக்கிய நாடுகள் உலக காலநிலை நடவடிக்கை விருது ..... 60
ஐக்கிய நாடுகள் 75வது ஆண்டின் நினைவாக நினைவு அஞ்சல் தலை ..... 61
2020 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த பணியில் அமர்த்துபவர் ..... 61
அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஐ.நா.வின் ஒப்பந்தம் ..... 61
பொருளாதாரச் செய்திகள் ..... 62
இந்தியாவின் முதலாவது கிடங்குப் பொருட்கள் நிதிச் செயலி ..... 62
காசோலைக்கான நேர்மறை செலுத்து முறை ..... 62
நேரடித் தொடர்பற்ற பற்று (Debit) அட்டையை அடிப்படையாகக் கொண்ட பணம் செலுத்தும் வசதி ..... 62
இந்தியாவின் நடப்புக் கணக்கு உபரி ..... 62
நிதியியல் கொள்கை குழு உறுப்பினர்கள் ..... 63
42வது ஜிஎஸ்டி ஆணையச் சந்திப்பு ..... 63
இந்தியாவின் முதலாவது நிதியியல் கட்டுப்பாட்டு மையம் ..... 64
சிறப்புத் திருவிழாக் காலக் கடன் சலுகை ..... 64
உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2020 ..... 64
புதிய சிபிஜ-ஐடபிள்யூ தொடர் ..... 65
திறந்த நிலை சந்தைச் செயல்பாடுகள் ..... 65
பிரதம மந்திரி சுவாநிதித் திட்டம் ..... 65
100 புதிய வன கரிமப் பொருட்கள் ..... 66
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 66
இமயமலை சந்திரா தொலைநோக்கியின் 20 ஆண்டுகள் ..... 66
ஆஸ்ட்ரோசாட்டின் 5 ஆண்டுகள் (ASTROSAT) ..... 67
இஸ்ரோவின் வெள்ளிக் கிரக திட்டம் ..... 67
கேட் கியூ தீநுண்மி ..... 68
உலகின் முதலாவது குறுங்கோள் சுரங்க இயந்திர மனிதன் ..... 69
பரம் சித்தி (PARAM Siddhi) மீத்திறன் கணினி ..... 69
சவுரியா ஏவுகணை சோதனை ..... 69
SMART ஆயுத அமைப்பு ..... 70
iMedix – தொலைதூர மருத்துவ முறை ..... 70
ருத்ரம் – முதலாவது கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணை ..... 70
ரஸ்டம் II ஆளில்லா விமானச் சோதனை ..... 71
தமிழக மாணவர்களின் நானோ செயற்கைக்கோள் ..... 72
சோயுஸ் எம்எஸ் – 17 விண்கலம் ..... 72
பிரித்வி – II ஏவுகணையின் இரவு நேரச் சோதனை ..... 73
கோதுமைத் தவிடு கடல்சார் பாக்டீரியக் கூட்டமைப்பு ..... 73
பெபிகொலம்போ விண்வெளிக் கலம் வெள்ளியைக் கடந்தது ..... 73
குறுங்கோள் பெனுவில் மாதிரிகள் சேகரிப்பு ..... 74
புதிய விண்வெளி மையம் – நேட்டோ ..... 75
நாக் ஏவுகணை ..... 75
IOWave 20 பயிற்சி ..... 75
குழாய் உமிழ்நீர் சுரப்பிகள் (Tubarial salivary glands) ..... 76
ஐ.என்.எஸ் கவரட்டி ..... 76

"SANT" ஏவுகணை ....... 77
பிரம்மோஸ் ஏவுகணை ....... 77
மாறுபக்க கொழுப்பு நீக்குதல் ....... 77
முதலாவது அறை வெப்பநிலை மீக்கடத்தி ....... 78
நிலவில் (சந்திரன்) நீர் ....... 78
குறைந்த செலவு கொண்ட வயது மூப்பிற்கு எதிரான கலவைத் தொழில்நுட்பம் ....... 79
**சுற்றுச்சூழல் செய்திகள் ....... 79**
"என்னுடைய கங்கை, என்னுடைய ஓங்கில்" (டால்பின்) பிரச்சாரம் ....... 79
ஈரநிலத் தாவரத்தின் 2 புதிய இனங்கள் ....... 79
2030 ஆம் ஆண்டிற்குள் 60% உமிழ்வுக் குறைப்பு ....... 80
7 கரிம மாசுபடுத்திகளின் உறுதிப்படுத்துதல் ....... 80
கடல் தளத்தில் நுண் நெகிழித் துண்டுகள் ....... 81
விலங்குகள் மற்றும் தாவரங்கள் கண்டுபிடிப்புகள் – 2019 ....... 81
போலார்ஸ்டெர்ன் திட்டம் – திரும்பி வருதல் ....... 81
சிலம் (SILAM) மற்றும் என்பியூசர் (ENFUSER) மாதிரிகள் – காற்றின் தரம் கண்காணிப்பு ....... 82
விலங்குகளின் வலசைப் பாதை மீதான உரிமை ....... 83
சீனாவின் இளஞ்சிவப்பு ஓங்கில் (டால்பின்) ....... 83
2020 ஆம் ஆண்டின் உலகளாவிய காற்றின் நிலை குறித்த அறிக்கை ....... 84
இந்தியாவின் அரணைகள் ....... 84
ஆசான் பாதுகாப்பு காப்பகம் ....... 85
வல்லூறுகள் பாதுகாப்பிற்கான தேசிய செயல் திட்டம் – 2020/2025 ....... 85
இமயமலை பழுப்பு நிறக் கரடிகள் ....... 86
ஐரோப்பிய ஒன்றியத்தில் காலநிலை மாற்றச் சட்டம் ....... 87
**மாநிலச் செய்திகள் ....... 87**
வன உரிமைகள் சட்டத்தின் மாற்றங்கள் ....... 87
பல்லுயிர்ப் பெருக்கத்தின் வரைபடம் ....... 87
பெண்களுக்குப் புதிய பொது விநியோக முறை கடைகள் ....... 88
பாதஸ்ரீ அபிஜன் – மேற்கு வங்காளம் ....... 88
காங்கோ காய்ச்சல் மீதான எச்சரிக்கை ....... 88
சிக்கிமின் மிளகாய்க்குப் புவிசார் குறியீடு ....... 89
டிஜிட்டல் சேவா சேது திட்டம் ....... 89
விவசாயிகள் நல நிதி வாரியம் – கேரளா ....... 90
மரங்கள் மாற்றி நடுதல் கொள்கை – தில்லி ....... 90
ஜெகனண்ணா வித்யா கனுகா திட்டம் – ஆந்திரப் பிரதேசம் ....... 91
முக்கிய மந்திரி சவுர் ஸ்வரோஜ்கர் யோஜனா - உத்தரகாண்ட் ....... 91
100% குழாய் நீர் இணைப்புகள் ....... 91
பிரதான் மந்திரி கிஷான் திட்டத்திற்காக இந்திய அஞ்சல் துறையுடன் இணைதல் ....... 91
உலகின் இரண்டாவது பனிப்புகைக் கோபுரம் ....... 91
பொதுக் கல்வியில் டிஜிட்டல்மயமாகும் முதலாவது மாநிலம் ....... 92
50வது ஸ்கல் சர்வதேச ஆசியப் பகுதி (SIAA) மாநாடு – 2021 ....... 93
குஜராத் பாதிக்கப்பட்ட பகுதிகள் சட்டம் (திருத்த) மசோதா ....... 93
குப்கார் பிரகடனம் II ....... 93

"பழங்குடியினருக்கு கற்றுக் கொடுத்தல்" முன்னெடுப்பு ..... 93
"எனது நகரம் எனது பெருமை" முன்னெடுப்பு ..... 94
செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மையம் - ஹைதராபாத் ..... 94
"ரெட் லைட் ஆன் காடி ஆப்" - தில்லி ..... 94
உலகின் மிகப்பெரிய துத்தநாக உருக்கு உலைத் திட்டம் ..... 95
நெச்சிபூ சுரங்கப் பாதை ..... 95
சக்தி திட்டம் – உத்தரப் பிரதேசம் ..... 95
காருண்யா ஆரோக்கியா சுரக்சா பாதாடி – கேரளா ..... 95
கடல் வானூர்தித் திட்டம் – முதலாவது சேவை ..... 96
முகக் கவசங்களின் விலை மீதான உச்ச வரம்பு ..... 96
இரத்த சோகை முக்த் பாரத் (AMB) குறியீடு ..... 97
தார் பாலைவனத்தில் ஆற்றின் தடயம் ..... 97
நாட்டின் முதல் பன்முனைய தளவாடப் பூங்கா ..... 97
PMGSY திட்டத்தைச் செயல்படுத்துதல் குறித்த அறிக்கை ..... 98
காலேஷ்வரம் நீரேற்றுப் பாசனத் திட்டம் ..... 98
அசாம்-மிசோரம் எல்லைத் தகராறு ..... 99
கிர்னார் மலை ..... 100

**பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 100**

முன்னாள் மத்திய அமைச்சர் ஜஸ்வந்த் சிங் மறைவு ..... 100
சாந்தி ஸ்வரூப் பட்னாகர் விருது 2020 ..... 101
குவைத்தின் அமீர் மறைவு ..... 101
சிட்டிசன் டிப்ளமசி விருது ..... 102
சையதா அன்வாரா தைமூர் மறைவு ..... 102
2020 ஆம் ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசு ..... 103
சுவச் பாரத் விருதுகள், 2020 ..... 104
சரியான வாழ்வாதார விருது 2020 ..... 104
UNSDG செயல்திட்ட நடவடிக்கை விருது 2020 ..... 105
2020 ஆம் ஆண்டின் காந்தி விருது ..... 105
அமைதிக்கான நோபல் பரிசு 2020 ..... 105
வேதியியலுக்கான நோபல் பரிசு ..... 106
தேசிய ஸ்டார்ட் அப் விருதுகளின் முதலாவது பதிப்பு ..... 107
மருத்துவம் அல்லது உடலியலுக்கான நோபல் பரிசு ..... 107
2020 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு ..... 108
உலக வர்த்தக அமைப்பிற்கான (WTO) முதலாவது பெண் இயக்குநர் ..... 109
ராம் விலாஸ் பஸ்வான் மறைவு ..... 109
பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு ..... 110
"பூமியைச் சரி செய்தல்" (Earthshot Prize) என்ற விருது ..... 110
ப்ளீட் விருது 2020 ..... 111
விஜய ராஜே சிந்தியாவின் நினைவாக புதிய ரூ.100 மதிப்புள்ள நாணயம் ..... 111
அமெரிக்காவில் வாழ்நாள் சாதனையாளர் விருது ..... 112
2020 ஆம் ஆண்டின் வனவுயிர் புகைப்படக் கலைஞர் விருது ..... 112
50 மிகவும் செல்வாக்கு மிக்க இந்தியர்கள் 2020 ..... 113

செசல்ஸ்ஸின் புதிய அதிபர் ............ 113
**விளையாட்டுச் செய்திகள் ............ 114**
2020 ரஷ்ய கிராண்ட் பிரிக்ஸ் ............ 114
பிரெஞ்சு ஓபன் 2020 ............ 114
லீவிஸ் ஹாமில்டனின் சாதனை ............ 114
**முக்கிய தினங்கள் ............ 115**
சர்வதேச மூத்த குடிமக்கள் தினம் – அக்டோபர் 01 ............ 115
தேசிய போதை மருந்து அடிமை எதிர்ப்பு தினம் – அக்டோபர் 02 ............ 115
உலக விண்வெளி வாரம் - அக்டோபர் 4 முதல் 10 வரை ............ 115
உலக ஆசிரியர்கள் தினம் – அக்டோபர் 05 ............ 116
உலகக் கட்டிடக் கலை தினம் – அக்டோபர் 05 ............ 116
உலக வேளாண் விலங்குகள் தினம் – அக்டோபர் 02 ............ 117
உலக பார்வை தினம் – அக்டோபர் 08 ............ 117
இந்திய விமானப் படை தினம் – அக்டோபர் 08 ............ 117
அதி விரைவுப் படை எழுச்சி தினம் – அக்டோபர் 09 ............ 118
உலக முட்டை தினம் – அக்டோபர் 09 ............ 118
உலக அஞ்சல் தினம் – அக்டோபர் 09 ............ 119
மரண தண்டனைக்கெதிரான உலக தினம் – அக்டோபர் 10 ............ 120
உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07 ............ 120
உலக மன நல தினம் – அக்டோபர் 10 ............ 121
உலக வலசை போகும் (இடப் பெயர்வு) பறவைகள் தினம் – அக்டோபர் 10 ............ 121
சர்வதேச பெண் குழந்தைகள் தினம் – அக்டோபர் 11 ............ 122
உலக மூட்டு வீக்க (மூட்டு அழற்சி) தினம் – அக்டோபர் 12 ............ 122
சர்வதேசப் பேரிடர் அபாயக் குறைப்பு தினம் – அக்டோபர் 13 ............ 122
உலகத் தரங்கள் தினம் – அக்டோபர் 14, 2020 ............ 123
சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் – அக்டோபர் 15 ............ 123
உலக மாணவர்கள் தினம் – அக்டோபர் 15 ............ 124
உலக உணவு தினம் – அக்டோபர் 16 ............ 124
உலக கைகழுவுதல் தினம் – அக்டோபர் 15 ............ 125
சர்வதேச மின்னணுக் கழிவு தினம் – அக்டோபர் 15 ............ 125
ராஷ்டிரிய மகிளா கிஷான் திவாஸ் – அக்டோபர் 15 ............ 125
உலக ஒவ்வாமை விழிப்புணர்வு நாள் - அக்டோபர் 16 ............ 126
வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினம் - அக்டோபர் 17 ............ 126
தேசியப் பாதுகாப்புப் படை (NSG) நிறுவன தினம் – அக்டோபர் 15 ............ 126
அறிவுசார் சொத்துரிமைக் கல்வி வாரம் – அக்டோபர் 15 முதல் 23 ............ 127
14வது இந்திய-சர்வதேச உணவு மற்றும் வேளாண் வாரம் ............ 127
3வது உலகப் புள்ளியியல் தினம் – அக்டோபர் 20 ............ 127
தேசிய ஒற்றுமை தினம் – அக்டோபர் 20 ............ 128
உலக எலும்புத் துளை நோய் தினம் – அக்டோபர் 20 ............ 128
சர்வதேச தலைமைச் சமையல்காரர்கள் தினம் – அக்டோபர் 20 ............ 129
தேசியக் குடற்புழு நீக்கல் தினம் – அக்டோபர் 20 ............ 129
அயோடின் குறைபாட்டு (பற்றாக்குறை) பிரச்சினைகள் தினம் – அக்டோபர் 21 ............ 129

காவல் துறை நினைவு தினம் – அக்டோபர் 21 ..... 130
உலக ஆற்றல் நாள் - அக்டோபர் 22 ..... 130
பன்னாட்டுத் திக்குவாய் விழிப்புணர்வு நாள் - அக்டோபர் 22 ..... 130
தேசிய மோல் தினம் - அக்டோபர் 23 ..... 131
சர்வதேசப் பனிச் சிறுத்தை நாள் - அக்டோபர் 23 ..... 131
ஐக்கிய நாடுகள் தினம் – அக்டோபர் 24 ..... 132
ஒலி ஒளிப் பாரம்பரியத்திற்கான உலக தினம் – அக்டோபர் 27 ..... 133
காலாட் படை தினம் – அக்டோபர் 27 ..... 133
உலக போலியோ (இளம்பிள்ளை வாதம்) தினம் - அக்டோபர் 24 ..... 134
ஜம்மு காஷ்மீர் இணைப்பின் 73வது நினைவு தினம் – அக்டோபர் 26 ..... 134
உலக ஆயுதப் பரவல் குறைப்பு வாரம் ..... 135
லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் – 2020 ..... 135
59வது ITBPயின் உருவாக்க தினம் – அக்டோபர் 24 ..... 135
சர்வதேச தூதர்கள் தினம் – அக்டோபர் 24 ..... 136
உலக பக்கவாத தினம் – அக்டோபர் 29 ..... 136
சர்வதேச இணைய தினம் - அக்டோபர் 29 ..... 136
உலக சிக்கன தினம் / சேமிப்பு தினம் – அக்டோபர்30 ..... 136
உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31 ..... 137
தேசிய ஒற்றுமை தினம் - அக்டோபர் 31 ..... 137
**இதரச் செய்திகள் ..... 138**
உலக அபாய அறிக்கை 2020 ..... 138
என்எஸ்ஓ நேரப் பயன்பாட்டுக் கள ஆய்வு 2019 ..... 138
இந்தியாவில் குற்றங்கள் குறித்த அறிக்கை ..... 139
இந்தியாவில் சுகாதாரம் குறித்த ஆய்வு ..... 140
CPCB-யின் 46வது நிறுவன தினம் ..... 141
மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் 2020 – அக்டோபர் 1 – 30 ..... 141
கார்பன் சமத்துவமின்மையை எதிர்கொள்தல் அறிக்கை ..... 141
“இந்தியா என்ன உணவு உட்கொள்கின்றது” அறிக்கை ..... 142
தரவு ஆளுகை தரக் குறியீட்டு ஆய்வு ..... 143
இந்தியர்களின் உடல் எடைக் குறிப்பு ..... 143
வனவிலங்கு வாரம் - அக்டோபர் 02/08 ..... 143
வறுமை மற்றும் பகிரப்பட்ட அபிவிருத்தி அறிக்கை 2020 ..... 143
ஐக்கிய நாடுகளின் “குழந்தை இறந்து பிறத்தல்” அறிக்கை ..... 144
ஆக்ஸ்பேம் அமைப்பின் “சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான பொறுப்புடைமை” (CRI) என்ற குறியீடு ..... 145
சுகாதாரச் செலவிடல் குறியீடு ..... 146
பேரிடர்களின் மனித விலை 2000-2019 அறிக்கை ..... 146
ஆரோக்கிய வாழ்வுத் திட்டம் ..... 147
காலநிலைச் சேவைகளின் நிலை அறிக்கை - 2020 ..... 147
ஊழல் குறித்த டிரான்ஸ்பரென்சி சர்வதேச நிறுவனத்தின் அறிக்கை ..... 148
உலகப் பட்டினிக் குறியீடு 2020 ..... 148
அர்டான் கேபிடலின் கடவுச் சீட்டுக் குறியீடு ..... 149
உலக காச நோய் (TB) அறிக்கை 2020 ..... 150

**இந்திய அறிவுசார் சொத்து அறிக்கை 2018-19 .......... 150**
**நாஸ்கா வரி பூனை – வரைபடம் .......... 151**

# TNPSC துளிகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது வாடிக்கையாளர் விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்காக அமிதாப் பச்சனை ஒரு பிரச்சாரகராக நியமித்துள்ளது.
  - இந்தப் பிரச்சாரமானது மோசடியாளர்களிடமிருந்து வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகம் முழுவதும் உலக சைவ தினமானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 01 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- கேரள சுற்றுலாத் துறையானது தனது "இயற்கை அச்சுப் பிரச்சாரத்தின் மூலம் மனிதன்" (Human by Nature Print Campaign) என்பதின் சந்தைப்படுத்தலுக்காக "2020 ஆம் ஆண்டின் புகழ்பெற்ற பசிபிக் ஆசிய பயணக் கூட்டமைப்பு கிராண்ட் தலைமைப் பட்டத்தை" வென்றுள்ளது.
- ரிலையன்ஸ் தொழிற் துறையின் தலைவரான முகேஷ் அம்பானி அவர்கள் தொடர்ந்து 9வது முறையாக ஐஐஎப்எல் செல்வ ஹூருன் இந்திய வளப் பட்டியலில் (Wealth Hurun India Rich List) முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான டாக்டர் பி.டி. வஹேலா என்பவர் இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார். இவர் அடுத்த 3 ஆண்டுகளுக்கு அப்பதவியில் நீடிப்பார்.
- சேகர் கபூர் அவர்கள் புனேவில் உள்ள இந்தியச் சமூகத்தின் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி மையத்தின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் அவர்கள் எழுத்தாளர் டாக்டர் கிருஷ்ணா சக்சேனா என்பவரால் எழுதப்பட்ட "மலர்களைக் கொண்ட ஒரு பூங்கொத்து" என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
  - 1955 ஆம் ஆண்டில் பிஎச்டி பட்டத்தைப் பெற்ற லக்னோவைச் சேர்ந்த முதலாவது பெண் இவராவார்.
- சர்வதேச விமானப் போக்குவரத்துக் கூட்டமைப்பானது ஐக்கிய நாடுகள் தீவிரவாத எதிர்ப்புப் பயணத் திட்டத்துடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக முதலாவது அரசு சாராத பங்காளராக ஐக்கிய நாடுகள் தீவிரவாத எதிர்ப்பு அலுவலகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்திய தேசிய அணியின் கோல்-கீப்பரான குர்பிரீத் சிங் சாந்து மற்றும் சஞ்சு யாதவ் ஆகியோர் முறையே 2019-20 ஆண்டிற்கான AIFF-ன் சிறந்த ஆண் கால்பந்து வீரர் விருது மற்றும் AIFF-ன் சிறந்த பெண் கால்பந்து வீரர் விருது என்ற விருதுகளின் வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- நிதி ஆயோக் மற்றும் நெதர்லாந்து ஆகியவை தூய்மையான மற்றும் அதிக அளவிலான ஆற்றலை உற்பத்தி செய்வதற்காக கார்பன் நீக்கம் மற்றும் ஆற்றல் மாற்ற இலக்கிற்கு உதவுவதற்காக நோக்க ஆவணம் ஒன்றில் கையெழுத்திட்டு உள்ளன.
- ஆஸ்திரேலியாவின் விக்கெட் கீப்பரான பேட் அலைசா ஹியாலே 20 ஓவர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விக்கெட் கீப்பராக அதிக வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து, எம் எஸ் தோனியின் சாதனையை முறியடித்துள்ளார்.
- 2015 ஆம் ஆண்டிலிருந்து காபியை ஒரு பானமாக அனுசரிப்பதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் வேண்டி அக்டோபர் 01 அன்று சர்வதேச காபி தினமானது அனுசரிக்கப் படுகின்றது.

- அமைதி மற்றும் அகிம்சை ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்டவரான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் பிறந்த தினமானது சர்வதேச அகிம்சை தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப்படுகின்றது.
- உலகப் புன்னகை தினமாது 1999 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதலாவது வெள்ளியன்று அனுசரிக்கப்படுகின்றது.
    - இந்த ஆண்டு இது அக்டோபர் 02 அன்று அனுசரிக்கப்பட்டது.
- உலக விலங்குகள் தினமானது உலகம் முழுவதும் உள்ள விலங்குகளின் நலம் சார்ந்த தரங்களை மேம்படுத்துவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 04 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- குவைத்தின் பட்டத்து இளவரசரான ஷேக் நவாப் அல் அகமது அல் சபாஹ் அவர்கள் அந்நாட்டின் புதிய மன்னராக உருவெடுத்துள்ளார்.
- கங்கை நதி டால்பின் ஆனது 2010 ஆம் ஆண்டில் தேசிய நீர்வாழ் விலங்காக அறிவிக்கப் பட்டது. அதன் காரணமாக இந்தியாவானது கங்கை நதி ஓங்கில் (டால்பின்) தினத்தை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 05 அன்று அனுசரிக்கின்றது..
- முதலாவது உலக அஞ்சல் அட்டை தினமானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
    - இந்த வருடம் அதன் 150வது நினைவு தினம் ஆகும்.
- இந்திய - அமெரிக்க வர்த்தகக் கூட்டமைப்பானது ரத்தன் டாடா அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கியுள்ளது. இந்திய - அமெரிக்க வர்த்தக உறவுகளில் அவரின் முன்னோடியான பங்களிப்புகளுக்காகவும் உலகளாவிய தலைமைத்துவச் செயல்பாட்டில் அவரின் வாழ்நாள் சாதனைக்காகவும் வேண்டி அவருக்கு இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- முழுவதும் சூரிய ஒளியால் செயல்படுத்தப்படும் முதலாவது விமான நிலையமாக இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் (AAI - Airports Authority of India) புதுச்சேரி விமான நிலையம் உருவெடுத்துள்ளது.
- பெரு நகர மும்பை மாநகராட்சியின் மாநகராட்சி ஆணையரான இக்பால் சிங் சஹல் என்பவர் "2020 ஆம் ஆண்டின் உலகளாவிய கோவிட் மீது போர் தொடுப்பவர்" என்ற விருதால் கௌரவிக்கப்பட்டார்.
- தில்லியின் துணை முதல்வரான மணிஷ் சிசோடியா அவர்கள் வரவேற்பறை அல்லது காபி-மேசைப் புத்தகமான "பாபு : மறக்க முடியாதவர்" (coffee-table book titled "Babu – The Unforgettable") என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- இந்தியாவைச் சேர்ந்த 16 வயது நிரம்பிய விஷ்ணு சிவராஜ் பாண்டியன் என்பவர் சர்வதேச ஆன்லைன் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பின் 5வது பதிப்பில் 10 மீட்டர் துப்பாக்கி சுடுதலில் வெற்றி பெற்றுள்ளார்.
- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI - Securities and Exchange Board of India) ஒரு முழு நேர உறுப்பினராக இருக்கும் மாதாபி பூரி பச் என்பவரின் பதவிக் காலமானது மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
    - SEBI-யின் முழு நேர உறுப்பினராக இருக்கும் முதலாவது பெண் இவராவார். மேலும் செபியின் வாரிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள தனியார் துறையைச் சேர்ந்த முதலாவது நபரும் இவராவார்.
- மத்திய இரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் அவர்கள் நொவ்கர் இரயில் நிலையத்தை சித்தார்த்நகர் இரயில் நிலையம் என்று பெயர் மாற்றியுள்ளார்.
    - உத்தரப் பிரதேசத்தின் சித்தார்த்நகர் மாவட்டத்தில் இது அமைந்துள்ளது.
- மூத்த வங்கியாளர் தினேஷ்குமார் காராவை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் தலைவராக அரசு நியமித்துள்ளது.

- இவர் ரஜ்னிஷ் குமாருக்குப் பதிலாக பணியமர்கிறார்.

❖ ரிசர்வ் வங்கியின் மூத்த நிர்வாக இயக்குனரான எம்.ராஜேஸ்வர் ராவை அந்த வங்கியின் துணை ஆளுநராக மத்திய அரசு நியமித்துள்ளது.

- அவர் என்.எஸ். விஸ்வநாதன் அவர்களை அடுத்து அந்தப் பதவியில் அமர்கிறார்.

❖ அமேசான் இந்தியா நிறுவனமானது அமேசான் தளத்தில் இரயில் பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்யும் வசதியை தனது வாடிக்கையாளர்களுக்கு அளிப்பதற்காக வேண்டி இந்திய இரயில்வே உணவுப் பரிமாறல் மற்றும் சுற்றுலாக் கழகத்துடன் இணைந்துள்ளது.

❖ இளம் இந்திய விளையாட்டு வீரரான நிகல் சரின் என்பவர் செஸ்.காம்-ன் 2020 ஆம் ஆண்டு இளையோர் விரைவு ஆன்லைன் செஸ் சாம்பியன்ஷிப்பில் ரஷ்யாவின் உலக இளையோரான அலெக்சி சரானா என்பவரை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

❖ இந்தியாவின் கால்பந்து விளையாட்டிற்கான தலைமை அமைப்பான அகில இந்திய கால்பந்துக் கூட்டமைப்பானது "இந்தியக் கால்பந்து. முன்னோக்கிச் செல்வதற்கு வேண்டி ஒன்றிணைதல்" என்ற தனது புதிய நிறுவனக் குறிக்கோளை வெளியிட்டு உள்ளது.

❖ போலந்தின் கால்பந்து விளையாட்டு வீரரான ராபர்ட் லெவன்டோவஸ்கி என்பவர் 2019-20 ஆம் ஆண்டிற்கான யுஇஎப்ஏ சிறந்த ஆண்கள் விளையாட்டு வீரராக (UEFA Men's Player of the Year for 2019-20) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ உலக உணர்வுநீக்கு மருத்துவர்கள் (Anaesthesiologists) தினம் அல்லது உலக மயக்க மருந்து தினமானது 1846 ஆம் ஆண்டு அக்டோபர் 16 அன்று மேற்கொள்ளப்பட்ட டை-எத்தைல் ஈத்தர் மயக்க மருந்தின் முதலாவது வெற்றிகரமான சோதனையை நினைவுபடுத்துவதற்காக அக்டோபர் 16 அன்று அனுசரிக்கப்படுகின்றது.

❖ ராஷ்டிரிய காமதேனு ஆயோக்கின் தலைவரான வல்லப பாய் கத்திரியா அவர்கள் "கௌசத்வா கவச்" என்ற சில்லு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

- இது மாட்டுச் சாணத்திலிருந்துத் தயாரிக்கப் பட்டதாகும். மேலும் இது கைபேசியிலிருந்து வரும் கதிரியக்கத்தைக் குறைப்பதாகக் கூறப் படுகின்றது.

❖ இந்தியாவின் டாடா கன்சல்டன்சி நிறுவனமானது முதன்முறையாக ஒரு ஆண்டில் உலகின் மிகவும் மதிப்புமிக்க தகவல் தொழில்நுட்ப நிறுவனமாக உருவெடுத்து, அக்சென்ஞ்ர் நிறுவனத்தை முந்தியுள்ளது.

❖ கோடக் பரஸ்பர நிதி நிறுவனத்தின் மேலாண் இயக்குநரான நிலேஷ் ஷா அவர்கள் இந்தியாவின் பரஸ்பர நிதியக் கூட்டமைப்பின் (Association of Mutual Funds) தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

❖ மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் அவர்கள் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 7வது நீதி அமைச்சர்கள் (சட்டம்) சந்திப்பைக் காணொலி வாயிலாக நடத்தினார்.

❖ உணவு மற்றும் வேளாண் அமைப்பின் 75வது நினைவு தினத்தை முன்னிட்டு, இந்தியப் பிரதமர் அவர்கள் ரூ.75 மதிப்புடைய ஒரு நினைவு நாணயத்தை வெளியிட்டுள்ளார்.

❖ இந்திய அரசு தொலைத் தொடர்பு அலைவரிசை ஒதுக்கீட்டை முறைப்படுத்துவதற்காக கேபினெட் செயலாளரான ராஜீவ் கவ்பா தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.

- இந்தக் குழுவானது இரயில்வே, பாதுகாப்பு, உள்துறை, தொலைத் தொடர்பு, விண்வெளித் துறை, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை ஆகிய துறைகளின் செயலாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

❖ உலகெங்கிலும் அதிகரித்து வரும் விபத்துகள் மற்றும் காயங்களின் விகிதத்தை எடுத்துக்காட்டும் வகையில் அக்டோபர் 17 அன்று உலக உடற்காய தினமானது அனுசரிக்கப் படுகிறது.

  - உடற்காயம் என்பது உடலுக்கு ஏற்படும் எந்த விதமான காயத்தையும் குறிக்கும்.

- மூத்த காங்கிரஸ் தலைவரான சசி தரூர் அவர்கள் "உரிமையுடையவர்களின் போராட்டம்" ('The Battle of Belonging) என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.

- இந்தியாவானது 1 மில்லியன் டாலரை பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரணம் மற்றும் சேவைகள் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

- மத்திய அரசானது தமிழ்நாடு தலைமைச் செயலாளரான K. சண்முகம் அவர்களின் பணிக் காலத்தை அடுத்த 3 மாதங்களுக்கு, அதாவது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

- மலையாளக் கவிஞர் மற்றும் 2019 ஆம் ஆண்டின் ஞானபீட விருதைப் பெற்றவரான அக்கிதம் அச்சுதன் நம்பூத்ரி அவர்கள் சமீபத்தில் காலமானார்.
  - இவருக்கு 2017 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- சர்வதேச விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் தினமானது 1961 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சர்வதேச விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் கூட்டமைப்பின் நினைவைக் குறிப்பதற்காக அக்டோபர் 10 அன்று அனுசரிக்கப் பட்டது.

- ஆடை வடிவமைப்பாளர் மற்றும் இந்தியாவின் முதலாவது ஆஸ்கர் விருது பெற்றவரான பானு அதாயா சமீபத்தில் காலமானார்.
  - இவர் 1982 ஆம் ஆண்டு வெளியான "காந்தி" என்ற திரைப்படத்தில் தமது பணிக்காக 1983 ஆம் ஆண்டில் சிறந்த ஆடை வடிவமைப்பிற்கான ஆஸ்கர் விருதைப் பெற்றுள்ளார்.

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையமானது இணைய வழியில் தரமான பொறுப்புடைமை கொண்ட காப்பீட்டுப் பொருட்களின் தேவை குறித்து ஆய்வு செய்வதற்காக P.உமேஷ் என்பவரது தலைமையில் 9 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.

- நிதி ஆயோக் ஆனது அமேசான் இணையச் சேவைகளுடன் இணைந்து முன்னிலைத் தொழில்நுட்ப அடிப்படையில் மேகக் கணினி புத்தாக்க மையத்தை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
  - இது டிஜிட்டல் புத்தாக்கத்தின் மூலம் சமூக சவால்களைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது முயற்சி இதுவேயாகும்.

- வங்க தேச துப்பாக்கி சுடுதல் போட்டிக்கான கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டு ஷேக் ரஸ்ஸல் சர்வதேச துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவைச் சேர்ந்த இளவேனில் வாலறிவன் தங்கப் பதக்கத்தையும் சாகு துஷார் மானே வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

- விண்வெளியில் முதலாவது எல்டிஇ/நான்காம் தலைமுறை தகவல் தொடர்பு அமைப்புகளை ஏற்படுத்தும் வகையில் சந்திரனில் முதலாவது செல்லுலார் வலையமைப்பைக் கட்டமைப்பதற்காக நாசாவினால் நோக்கியா ஒய்ஜ் (Nokia Oyj) என்ற நிறுவனமானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது அதன் வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்தினை முன்னிட்டு தனது முதல் புத்தாக்க தொடக்க மன்றத்தைத் (Start-up Forum) ஆரம்பிக்க உள்ளது.

- நடப்பு நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களில் (2020 ஏப்ரல் - ஆகஸ்ட் மாதங்களில்) இந்தியா தனது மிக அதிகமான வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெற்றதாக வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- டெல்லி கேபிட்டல்ஸ் அணியின் தொடக்க பேட்ஸ்மேன் ஷிகர் தவான், இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) வரலாற்றில் தொடர்ச்சியாக அடுத்தடுத்து சதம் அடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- மத்திய சுகாதார அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்கள் CuRED (CSIR Ushered Repurposed Drugs) என்ற ஒரு இணைய தளத்தை அறிமுகப் படுத்தி உள்ளார்.
- பாகிஸ்தான் நாடானது "சாம்பல் நிறப் பட்டியலில்" (grey list) நீடிக்க நிதி நடவடிக்கை பணிக் குழுவானது வாக்களித்துள்ளது.
- நகர்ப்புற திட்டமிட்டக் கல்வி முறையில் சீர்திருத்தம் செய்ய நிதி ஆயோக் சமீபத்தில் 14 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
  - இந்தக் குழுவிற்கு நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் அவர்கள் தலைமை தாங்க உள்ளார்.
- இந்திய வானிலை ஆய்வு மையமானது தெற்கு ஆசியாவில் திடீர் வெள்ளப் பெருக்கு வழிகாட்டுச் சேவையைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது.
  - இந்தச் சேவை தெற்கு ஆசியப் பகுதிக்கான அதன் இதே வகையைச் சேர்ந்த முதலாவது சேவையாகும்.
- தமிழ்நாடு மாநில அரசானது 80,000ற்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் திறன்மிகு கரும்பலகைத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.
  - இந்தத் திட்டமானது டிஜிட்டல் வகுப்பறைகளுடன் சேர்த்து ஒருங்கிணைந்த காட்சிசார் கற்பித்தல் பொருளின் பயன்பாட்டை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையமானது நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்சார உற்பத்தி ஆலைகளுக்கான அபராதம் மற்றும் ஊக்கத் தொகை மீதான செயல்முறை குறித்த உமிழ்வு விதிகளைப் பூர்த்தி செய்தலுக்கான பணி ஆவணம் என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தேசிய அடையாளம் காணுதல் தரவுத் தளத்தில் முகம்சார் அடையாளம் காணல் முறையை இணைக்கும் முதலாவது நாடு சிங்கப்பூர் ஆகும்.
- 1962 ஆம் ஆண்டின் இந்திய-சீனப் போர் குறித்த ஜோஹிந்தர் போர் நினைவகமானது அருணாச்சலப் பிரதேசத்தில் பும் லாவில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.
- 108 கிலோ மீட்டர் நீளத்திற்குத் தொடரமைப்பு கொண்ட மிகவும் நீளமான பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பைக் கொண்ட இந்தியாவின் ஒரே நகரம் சூரத் ஆகும்.
- 2020 ஆம் ஆண்டின் சர்வதேச அறிவியல் திருவிழாவின் 6வது பதிப்பானது காணொலி வாயிலாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 முதல் 25 வரை நடத்தப்படும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.
- அண்டோராவின் முதன்மைப் பிராந்தியமானது சர்வதேச நாணய நிதியத்தின் 190வது உறுப்பினராக இணைந்துள்ளது.
  - இது பிரான்சு மற்றும் ஸ்பெயினுக்கு இடையே அமைந்த ஒரு சிறு பகுதியாகும்.
- இங்கிலாந்து வங்கியின் ஆளுநரான மார்க் கார்னே என்பவர் 2020 ஆம் ஆண்டிற்கான 7வது வருடாந்திர சிறந்த மத்திய வங்கிக்கான விருது வழங்கும் நிகழ்வில் இந்த ஆண்டின் சிறந்த ஆளுநர் என்ற விருதை வென்றுள்ளார்.
  - கானா மத்திய வங்கியானது 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர சிறந்த மத்திய வங்கி என்ற விருதினை வென்றுள்ளது.
- 1972 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அக்டோபர் 24 அன்று ஐக்கிய நாடுகளை ஏற்படுத்திய தினத்துடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் உலக மேம்பாட்டுத்

தகவல் தினத்தை ஏற்படுத்த முடிவு செய்தது.

- இரா.பார்த்திபனின் ஒத்த செருப்பு அளவு 7 மற்றும் லட்சுமி ராமகிருஷ்ணனின் ஹவுஸ் ஓனர் ஆகிய படங்கள் மத்திய அரசின் 'சிறப்பானவை' என்ற அடையாள வகையின் கீழ் கௌரவிக்க தேர்வு செய்யப் பட்டுள்ளன.
  - இந்தியப் பனோரமா பிரிவின் கீழ் 2020 ஆண்டின் கோவா சர்வதேசத் திரைப்பட விழாவிலும் இவை திரையிடப்பட உள்ளன.
- மேற்கு வங்கத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவானது ஜார்க்கண்டில் உள்ள லதேஹர் என்ற மாவட்டத்தில் இந்தியாவின் முதல் தட்டாம் பூச்சியின் (டிராகன்ஃபிளை) புதைபடிவத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- நியூசிலாந்துப் பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்னின் தொழிலாளர் கட்சியானது அந்நாட்டின் பொதுத் தேர்தலில் மற்றுமொரு மகத்தான வெற்றியைப் பதிவு செய்துள்ளது.
- உத்தரப் பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் உ.பி.யின் லக்னோவில் பெண்களுக்கான ஒரு பாதுகாப்புப் பிரச்சாரமான "பாதுகாப்பான நகரத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - இது உள்துறை அமைச்சகத்தின் திட்டவடிவமான ஒரு முன்னெடுப்பாகும்.
- கிசான் சூர்யோதய் யோஜனா என்ற ஒரு திட்டத்தை குஜராத்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்துள்ளார்.
  - நீர்ப்பாசனத்திற்காக வேண்டி பகல் நேரத்தில் மின்சாரம் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் ஒரு நேரடி நுழைவு வசதியானது மத்தியக் கப்பல் போக்குவரத்திற்கான இணை அமைச்சர் மற்றும் இரசாயனங்கள் – உரங்களுக்கான மத்திய இணை அமைச்சரான மன்சுக் மான்டவியா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- சத்தீஸ்கர் மாநிலச் சட்டமன்றமானது மத்திய அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட வேளாண் சட்டங்களை நிராகரிக்கும் வகையில் மசோதா ஒன்றை நிறைவேற்றி உள்ளது.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் அவர்கள் பரம்பரா தொடர் 2020 – தேசிய இசை மற்றும் நடனத் திருவிழாவின் மெய்நிகர் பதிப்பைத் தொடங்கி வைத்தார்.
  - இது ஐக்கிய நாடுகளுடன் இணைந்து நாட்டியத் தரங்கினி என்ற அமைப்பால் ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தேசியத் தலைநகர்ப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் காற்றுத் தரத்தின் சிறந்த மேலாண்மைக்காக வேண்டி ஒரு காற்றுத் தர ஆணையத்தை அமைப்பதற்காக அவசரச் சட்டம் ஒன்றை பிரகடனம் செய்து உள்ளார்.
- புதுச்சேரி அரசானது அந்த ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 10 சதவீதம் உள் இட ஒதுக்கீடு வழங்க முன் மொழிந்துள்ளது.
- 'என் தோழி' என்ற ஒரு திட்டமானது அதிவேக (எக்ஸ்பிரஸ்) இரயில்களில் தனியாக பயணிக்கும் பெண்களுக்காக தெற்கு இரயில்வே மண்டலத்தின் சென்னைப் பிரிவில் இரயில்வே பாதுகாப்புப் படையால் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
- கோவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட வேண்டி வங்க தேச அரசானது 'முகமூடி இல்லையேல் சேவை இல்லை' (no mask, no service) என்ற கொள்கையை அறிமுகப் படுத்தியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஒரு தேசம், ஒரு குடும்ப அட்டைத் திட்டம் - தொடக்கம்

- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அக்டோபர் 01 அன்று தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் "ஒரு தேசம், ஒரு குடும்ப அட்டை" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டம் மதுரை, ராமநாதபுரம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அக்டோபர் 16 ஆம் தேதி முதல் செயல்படுத்தப் படவுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலிருந்து முன்னுரிமை குடும்ப அட்டைகள் மற்றும் அந்த்யோயா அன்ன யோஜனா குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் இதர மாநிலங்களுக்குச் சென்றிருந்தாலும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 என்பதின் கீழ் உயிர்த் தரவு அங்கீகாரத்தின் மூலம் மாதாந்திரப் பொருட்களைப் பெற முடியும்.
- மேலும், இந்த அட்டைகளை வைத்துள்ள மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்தவர்கள் உயிர்த் தரவு சரிபார்ப்பிற்குப் பின்னர் தங்கள் குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள நியாய விலைக் கடைகளில் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருட்களைப் பெற முடியும்.
- தங்களத மாதாந்திரப் பொருட்களைப் பெற முடியாத முதியவர்கள் மற்றும் உடல் நலக் குறைவுள்ளவர்கள் தங்கள் சார்பாக ஒரு நபரை நியமித்து, அவரின் மூலம் மாதாந்திரப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## சென்னை திடக் கழிவு மேலாண்மை



- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய திடக் கழிவு மேலாண்மையைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தப் புதிய திடக் கழிவு மேலாண்மை முறையானது ஸ்பெயின்-இந்தியா கூட்டு முயற்சி மற்றும் அர்பேசர் எஸ்ஏ, சுமீத் வசதிகள் நிறுவனம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப் படவுள்ளது.
- இது 8 ஆண்டுகளுக்கு கழிவுகளைச் சேகரித்து, பின் அவற்றை அகற்றி அதனை மேலாண்மை செய்யும்.
- இது முதல் நிலை சேகரிப்பு, இரண்டாம் நிலைச் சேகரிப்பு, போக்குவரத்து, தெருக்களைத் தூய்மை செய்தல், குப்பைகளைச் சேகரித்தல், சரியான முறையில் பராமரித்தல், குறைகளைக் களைதல் மற்றும் IEC (Information, education, and communication - தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு) ஆகியவற்றின் கீழ், 34 முக்கியச் செயல்பாட்டுக் குறிகாட்டிகளின் அடிப்படையில் கட்டணம் செலுத்தப்பட உள்ளது.

## இந்தியாவின் முதலாவது மேம்படுத்தப்பட்ட உற்பத்தி மையம்

- உலகப் பொருளாதார மன்றம் மற்றும் கைடன்ஸ் நிறுவனம் ஆகியவை இணைந்து தமிழ்நாட்டில் ஏஎம்எச்யூபி (AMHUB) என்பதனை ஏற்படுத்தவுள்ளன.
- ஏம்எம்எச்யூபி - AMHUB என்பது மேம்படுத்தப்பட்ட உற்பத்தி மையம் (AMHUB - Advanced Manufacturing hub) என்பதனைக் குறிக்கின்றது. இது நாட்டில் தொடங்கப்பட்டு உள்ள இதே வகையைச் சேர்ந்த முன்முயற்சிகளில் முதலாவதாகும்.
- கைடன்ஸ் நிறுவனம் என்பது தமிழ்நாடு மாநிலத்தின் தலைமை முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாகும்.
- AMHUB ஆனது சூரிய ஒளி ஆற்றல், மின்னணு, மின்சாரப் போக்குவரத்து மற்றும் ஜவுளி ஆகிய துறைகளில் தமிழ்நாடு மாநிலத்திற்கு உதவ இருக்கின்றது.
- இது 4வது தொழிற் புரட்சியினால் கொண்டு வரப்பட்டுள்ள பிராந்திய வாய்ப்புகளை அடையாளம் காணுவதன் மூலம் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையை வலுப்படுத்த உதவ இருக்கின்றது.
- செயற்கை நுண்ணறிவு, இணையப் பொருட்கள், மேகக் கணினி போன்றவை 4வது தொழிற்துறைப் புரட்சி வாய்ப்புகளாகும்.

## ஐ.நா. குளோபல் காம்பாக்ட் விருது (Global Compact award )

- இந்த விருதைப் பெற்ற முதல் இந்தியர் கலையரசன் ஆவார்.
- இவர் தமிழக அரசின் கலைத் தூதராகவும் உள்ளார்.
- இவர் கோவையில் 'கிராமியப் புதல்வன்' எனும் அமைப்பை நிறுவியவர் ஆவார்.
- ஐ.நா தனது 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இத்தகைய கலைஞர்களைக் கௌரவித்துள்ளது.

## சரத்து 162ன் கீழ் நிர்வாக வழி உத்தரவு

- ஒரு அரிய நடவடிக்கையாக, தமிழக அரசானது ஒரு அரசாங்க உத்தரவை (Government Order) ஒரு நிர்வாக வழி உத்தரவாக பிறப்பித்துள்ளது.
- இளங்கலை மருத்துவப் படிப்பிற்கானச் சேர்க்கைகளில் நீட் தேர்வில் தகுதி பெற்ற மாநில அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு இது 7.5% என்ற அளவில் கிடைமட்ட இட ஒதுக்கீட்டை அளிக்கிறது.

- 2020-2021 கல்வியாண்டில் இருந்து 69% இடஒதுக்கீட்டிற்குள் தமிழக மாநிலத்தில் பின்பற்றப்படும் செங்குத்து இடஒதுக்கீட்டின் ஒவ்வொரு பிரிவிலும் மேற்கண்ட கிடைமட்ட இட ஒதுக்கீடு வழங்கப் படும்.
- மாநில அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கும்.
- எனினும் இந்த ஒதுக்கீட்டிற்கான மசோதா ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தின் முன்பு அவரது ஒப்புதலுக்காக நிலுவையில் இருந்தது.
- இந்த மசோதா செப்டம்பர் 15 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- எனினும் மாநில அரசாங்கத்தால் அரசாங்க உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் ஆளுநர் அந்த மசோதாவுக்குத் தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.
- 162வது சரத்தின் கீழ், ஆளுநரின் முடிவு ஒரு விவகாரத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில் நிர்வாக அதிகாரமானது சட்டமன்ற அதிகாரத்துடன் இணைந்துச் செயல்படுவதாக மாநில அரசு குறிப்பிட்டுள்ளது.
- அரசாங்க ஒதுக்கீடானது அரசியலமைப்பின் 14 மற்றும் 15வது சரத்துகளை மீறவில்லை என்று மாநில அரசானது தனது அரசாங்க உத்தரவில் கூறி உள்ளது.
- ஓய்வு பெற்ற மதராஸ் உயர்நீதிமன்ற நீதிபதி கலையரசன் அவர்களின் தலைமையிலான ஒரு குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த இட ஒதுக்கீட்டு முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## மாநிலங்களால் பயன்படுத்தப்படும் SDRF–ன் வரம்பு அதிகரிப்பு

- இந்தியப் பிரதமர் ஏழு மாநிலங்களுக்கு மாநிலப் பேரிடர் மீட்பு நிதியின் (SDRF - State Disaster Response Fund) பயன்பாட்டு வரம்பை 35% என்ற அளவிலிருந்து 50% ஆக அதிகரிக்கப் படுவதாக அறிவித்துள்ளார்.
- தமிழ்நாடு, பஞ்சாப், மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தில்லி, உத்தரப் பிரதேசம் ஆகியவை அந்த 7 மாநிலங்களாகும்.
- இது கோவிட் – 19 தொடர்பான கட்டமைப்புகளை மேம்படுத்த அந்த மாநிலங்களுக்கு உதவ இருக்கின்றது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றின் 63%ற்கும் மேற்பட்ட பாதிப்புகள் இந்த 7 மாநிலங்களில் நிகழ்கின்றன.

### *SDRF*

- இது 13வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 என்ற சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.
- இந்திய அரசானது வருடாந்திர அடிப்படையில் மாநிலங்களுக்கு SDRF-ன் ஒரு பகுதியாக 75% நிதியை அளிக்கின்றது.
- மத்திய அரசானது சிறப்புப் பிரிவு மாநிலங்களுக்கு 90% நிதியை அளிக்கின்றது.
- இது ஒவ்வொரு ஆண்டும் இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரால் தணிக்கை செய்யப் படுகின்றது.

## கம்பிவட தாங்குப் பாலம்

- சமீபத்தில் துர்காம் செருவு ஏரியிடையே கட்டப்பட்டுள்ள கம்பிவட தாங்குப் பாலமானது ஹைதராபாத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.
- இந்தப் பாலமானது உலகின் நீளமான கான்கிரீட் தளம் கொண்டு விரிவாக்கப்பட்ட கம்பிவட தாங்குப் பாலம் என்று அறியப்படுகின்றது.
- இந்தப் பாலமானது 52 தாங்கு கம்பி வடங்களுடன் 426 மீட்டர் உயரமுடையது.



## இந்தியாவின் மகிழ்ச்சி அறிக்கை

- நாட்டில் உள்ள 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மகிழ்ச்சியை அளவிடும் முதலாவது அகில இந்திய மகிழ்ச்சி அறிக்கை இதுவாகும்.
- இந்த மகிழ்ச்சி அறிக்கையில் மிசோரம், பஞ்சாப், அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் முதல் 3 இடத்தைப் பிடித்துள்ளன.
- இதில் பெரிய மாநிலங்கள் பிரிவில் பஞ்சாப், குஜராத் மற்றும் தெலுங்கானா ஆகியவை முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.
- இந்த மகிழ்ச்சித் தரவரிசையில் சிறிய மாநிலங்கள் பிரிவில் மிசோரம், சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம் ஆகியவை முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.
- இதில் ஒன்றியப் பிரதேசங்களான அந்தமான் நிக்கோபர் தீவுகள், புதுச்சேரி மற்றும் லட்சத்தீவு ஆகியவை முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.
- இதில் தமிழ்நாடு 29வது இடத்திலும் சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை கடைசி இடங்களிலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

## நமாமி கங்கைத் திட்டங்களின் கீழ் 6 திட்டங்கள்

- இந்தியப் பிரதமர் நமாமி கங்கைத் திட்டத்தின் கீழ் 6 திட்டங்களை காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.
- அந்த திட்டங்கள் பின்வருமாறு:
  - ஒரு நாளைக்கு 68 மில்லியன் லிட்டர் அளவு (MLD - Million litres per day) கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைக் கட்டமைப்பு (STP - Sewage treatment plant)
  - ஜக்ஜீத்பூர், ஹரித்துவார் ஆகிய இடங்களில் 27 அளவு MLD ஆலையை மேம்படுத்துதல்.
  - 68 அளவு MLD ஜக்ஜீத்பூர் திட்டத்தைக் கட்டமைத்தல்.
  - ரிஷிகேஷில் 26 அளவு MLD ஆலையைத் திறந்து வைத்தல்.

- ஹரித்துவாரின் தராயில் 18 அளவு MLD STPயைக் கட்டமைத்தல்
- சிர்பானியில் 5 அளவு MLD STPஐத் திறந்து வைத்தல்.
- மேலும், பத்ரிநாத்தில் 2 STPகள்.

❖ இவர் தேசியத் தூய்மை கங்கைத் திட்டம் மற்றும் இந்திய வனவிலங்கு மையம் ஆகியவற்றினால் இணைந்து பிரசுரிக்கப்பட்ட "வழிந்தோடும் கங்கை" என்ற ஒரு புத்தகத்தையும் வெளியிட்டுள்ளார்.

## ஓட்டுநர் உரிமம், RC ஆகியவற்றின் மின்னணு நகல் சரிபார்ப்பு

❖ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது மத்திய மோட்டார் வாகனங்கள் சட்டம், 1989-ன் பிரிவு 139-ன் கீழ் ஒரு புதிய விதிமுறையைத் திருத்தியுள்ளது.

❖ இது நாடு முழுவதும் உள்ள வாகன உரிமையாளர்கள் தங்களது ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழை மின்னணு முறையில் பயன்படுத்த அனுமதிக்கின்றது.

❖ திருத்தப்பட்ட இந்த விதிமுறையின் படி, போக்குவரத்து தொடர்பாக தேவைப்படும் பதிவு, காப்பீடு, தகுதி மற்றும் அனுமதி, ஓட்டுநர் உரிமம், சோதனை செய்யப்பட்ட மாசு தொடர்பான சான்றிதழ் மற்றும் அது தொடர்பான இதர சான்றிதழ்கள் போன்றவற்றை அசல் மற்றும் மின்னணு வடிவில் (physical or electronic form) குடிமக்கள் பயன்படுத்த அனுமதிக்கின்றது.

## குறிப்பிட்ட காலத்திற்குள் இனிப்புக்கான பயன்படுத்துதலைக் காட்சிப் படுத்துதல்

❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது பொட்டலங்களில் விற்கப் படும் இனிப்புகளின் விற்பனை குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டு உள்ளது.

***மேற்கோள்கள்***

❖ விற்பனைக்கு உள்ள பொட்டலம் கட்டப்படாத / பாக்கெட்டுகளில் உள்ள இனிப்புகள் வைக்கப் பட்டிருக்கும் கொள்கலன் / குப்பிகளின் மேல் "குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்துதல்" (Best Before Date) என்ற ஒன்றைக் கட்டாயம் காட்சிப் படுத்த வேண்டும். இது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 01 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

❖ உணவு வணிகச் செயல்பாட்டாளர்கள் (FBO - Food business operators) இனிப்பு தயாரித்த தேதியையும் காட்சிப் படுத்தலாம். ஆனால் இது கட்டாயமல்ல.

❖ FBO-கள் பொருட்களின் தன்மை மற்றும் உள்ளூர் நிலைமையைப் பொறுத்து இனிப்புகளின் மீது "குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்துதல்" என்ற கூற்றைக் காட்சிப்படுத்த முடிவு செய்யலாம்.

## இரண்டாவது தேசிய செரோ ஆய்வு

❖ இரண்டாவது தேசிய செரோ ஆய்வானது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தினால் (ICMR - Indian Council of Medical Research) வெளியிடப்பட்டுள்ளது.

❖ இது இரத்த மாதிரிகளை எடுப்பதன் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. இது நோய்த் தொற்று ஏற்பட்டு 2 வாரத்திற்குள் காணப்படும் ஐஜிஜி (IgG) எனப்படும் சிறப்பு நோய் எதிர்ப்புப் பொருளின் ஒரு பிரிவைச் சோதனை செய்கின்றது.

❖ ஏனெனில் நமது உடலில் அதற்கான நோய் எதிர்ப்புப் பொருள் எவ்வளவு காலம் இருக்கும் என்பது சரியாகத் தெரியவில்லை. அதன் இருப்பு வைரஸ் இல்லாததை

அல்லது கடந்த காலங்களில் வைரஸ் தொற்று ஏற்பட்டதை மட்டுமே உறுதி செய்கின்றது.

***மேற்கோள்கள்***

- ஆகஸ்ட் மாதத்தின் கடைசி 2 வாரங்கள் வரை ஏறத்தாழ 7% இந்தியப் பதின்ம வயது பருவத்தினர் கொரானா வைரஸ் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.
- முதலாவது ஆய்வின் போது, இது ஒவ்வொரு உறுதி செய்யப்பட்ட கோவிட் – 19 பாதிப்பிற்கும் 82 – 130 என்ற அளவில் தொற்று இருந்தது. தற்பொழுது இது 26-32 என்ற அளவில் குறைந்துள்ளது.
- நாடு முழுவதும் கொரானா வைரஸ் பரவலானது அமெரிக்காவில் காணப்படும் அளவான 9.3% என்ற அளவில் உள்ளதைப் போன்றே காணப்படுகின்றது.
- பிரேசில் மற்றும் ஸ்பெயின் ஆகியவை முறையே 2.2% மற்றும் 4.6% என்ற அளவில் கொரானா வைரஸ் நோய் பரவலைக் கொண்டுள்ளன.




## சாத்தி செயலி

- மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகமானது சுற்றுலா (விருந்தோம்பல்) தொழிற்துறைக்காக சாத்தி என்ற செயலியைத் தொடங்கியுள்ளது.
- இது உணவகங்கள் மற்றும் அதன் அலகுகளின் பாதுகாப்பு குறித்து பணியாளர்கள், உணவக முதலாளிகள் மற்றும் விருந்தினர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவும் பாதுகாப்பான முறையில் செயல்படுவதற்காகவும் வேண்டி சுற்றுலாத் தொழிற்துறைக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியத் தர நிர்ணய ஆணையத்துடன் இணைந்து சுற்றுலாத் துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.

## கடுகு எண்ணெய் கலப்பு மீதான தடை

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI - Food Safety and Standards Authority of India) இதர சமையல் எண்ணெய்யுடன் கடுகு எண்ணெய்யைக் கலப்பதற்குத் தடை விதித்துள்ளது. இது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 01 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- இதற்கு முன்பு, FSSAI-ன் விதிமுறைகளின் படி, 2 உண்ணத்தக்க எண்ணெய்களின் கலப்பானது அனுமதிக்கப்பட்டது.

- கலப்புச் செயல்முறையில் பயன்படுத்தப்படும் எந்தவொரு உண்ணத்தக்க எண்ணெய்யின் எடை விகிதமானது 20 சதவீதத்திற்கும் குறையாமல் இருக்க வேண்டும் என்று இது எடுத்து உரைக்கிறது.




## NIA-ன் கூடுதல் கிளைகள்

- மத்திய உள்துறை அமைச்சகமானது தேசியப் புலனாய்வு அமைப்பின் (NIA - National Investigation Agency) 3 கூடுதல் கிளைகளை (சென்னை, இம்பால், ராஞ்சி) அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது தீவிரவாதம் தொடர்பான வழக்குகள் குறித்தும் தேசியப் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்தும் விசாரணை நடத்துவதில் NIA-ன் திறனை வலுப்படுத்த இருக்கின்றது.
- தற்பொழுது 9 நகரங்களில் NIA-ன் கிளைகள் உள்ளன
- அவை குவஹாத்தி, ஜம்மு, கொல்கத்தா, கொச்சி, ஹைதராபாத், ராய்ப்பூர், லக்னோ, சண்டிகர் ஆகிய இடங்களில் அமைந்து உள்ளன.

### *NIA*

- இது இந்தியாவில் எந்தவொரு தீவிரவாத நடவடிக்கைகளை எதிர்ப்பதற்காகவும் கையாளுவதற்காகவும் வேண்டி இந்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மத்திய நிறுவனமாகும்.
- இது 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று இந்தியப் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட தேசியப் புலனாய்வு ஆணையச் சட்டம், 2008 என்ற சட்டத்துடன் சேர்த்து நடைமுறைக்கு வந்தது.
- இது மும்பையில் நடத்தப்பட்ட 26/11 தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு நிறைவேற்றப் பட்டது.
- NIA ஆனது மாநில அரசுகளிடமிருந்து எந்தவொரு சிறப்பு அனுமதியைப் பெறாமலும் அனைத்து மாநிலங்களிலும் தீவிரவாதம் தொடர்பான குற்றங்கள் குறித்து விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

## பாப்ரி மஸ்ஜித் இடிப்பு வழக்கு

- 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 06 அன்று நிகழ்ந்த பாப்ரி மஸ்ஜித் இடிப்பு குறித்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட அனைவரும் (32 நபர்களும்) விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.
- சிபிஐ நீதிபதியான சுரேந்திர குமார் யாதவ் இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.
- இந்த 2000 பக்கங்கள் கொண்ட தீர்ப்பானது லக்னோவில் உள்ள சிறப்பு சிபிஐ நீதிமன்றத்தில் 28 ஆண்டு காலப் பழமையான பாப்ரி மஸ்ஜித் இடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்தது.

- இந்த விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்ட 17 நபர்கள் காலமாகினர்.
- குற்றம் சுமத்தப் பட்டவர்கள் 153 ஏ (பல்வேறு குழுவினரிடையே பகைமையை வளர்த்தல்), 153 பி மற்றும் 505 (தவறான செய்திகளைப் பரப்புதல்) & பிரிவு 147 (கலவரத்தில் ஈடுபடுதல்) உள்ளிட்ட ஐபிசி பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப் பட்டிருந்தனர்.



## 300வது மேம்படுத்தப்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்

- இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனமானது 300வது துருவா பல்பயன்பாட்டு மேம்படுத்தப்பட்ட இலகுரக ஹெலிகாப்டரை வெளியிட்டுள்ளது.
- துருவாவின் இராணுவ வகையானது இந்திய விமானப் படை, இந்திய தரைப்படை, இந்தியக் கப்பற் படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படையினால் செயல்படுத்தப் படுகின்றது.
- துருவாவின் முக்கியப் பிரிவுகள் துருவா எம்கே-I, எம்கே-II, எம்கே-III & எம்கே-IV ஆக வகைப்படுத்தப் பட்டுள்ளது.



## சம்வேத்னா முயற்சி

- சம்வேத்னா (உணர்ச்சி மேம்பாடு மற்றும் தேவையான ஏற்பு மூலம் மனநல பாதிப்பு குறித்த உணர்திறன் நடவடிக்கை) ஒரு கட்டணமில்லாத தொலைபேசி ஆலோசனைச் சேவையாகும்.
- கோவிட்-19 தொற்றின் போது பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கருத்துரை வழங்கல் மற்றும் உள-சமூக ஆதரவை வழங்குவதற்காக வேண்டி கட்டணமில்லாத தொலைபேசி ஆலோசனை உதவி எண்ணை தேசிய குழந்தைகள் உரிமைகளுக்கான தேசிய ஆணையமானது அறிமுகப்படுத்தியுள்ளது.
- அந்த கட்டணமில்லாத தொலைபேசி ஆலோசனை உதவி எண்ணானது 1800-121-2830 ஆகும்.

- இது இந்தியா முழுவதிலும் உள்ள குழந்தைகளுக்குப் பல்வேறு பிராந்திய மொழிகளிலும் தனது சேவையை (ஆதரவு) அளிக்கும்.




## ஆபரேஷன் மை சஹேலி (Operation My Saheli)

- தென்கிழக்கு இரயில்வேயானது "ஆபரேஷன் மை சஹேலி" என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இரயிலில் பெண் பயணிகள் ஏறுமிடத்திலிருந்து இறங்குமிடம் வரை அவர்களது பாதுகாப்பை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 18, முதல் 3 இரயில்களில் "ஆபரேஷன் மை சஹேலி" திட்டத்தின் சோதனைப் பதிப்பானது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அவை
  - ஹவுரா - யஸ்வந்த்பூர் துரந்தோ சிறப்பு இரயில்,
  - ஹவுரா - அகமதாபாத் சிறப்பு இரயில் மற்றும்
  - ஹவுரா - மும்பை சிறப்பு இரயில்.
- இது "நிர்பயா நிதியத்தின்" கட்டமைப்பின் கீழ் செயல்படுத்தப்படுகிறது, இதற்காக கூடுதல் செலவுகள் எதுவும் இரயில்வேயின் தலைமை நிர்வாகத்தால் வழங்கப் படவில்லை.




## அம்பேத்கர் சமூகப் புத்தாக்கம் மற்றும் தொடக்க நிறுவனங்களைக் காக்கும் திட்டம்

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது அம்பேத்கர் சமூகப் புத்தாக்கம் மற்றும் தொடக்க நிறுவனங்களைக் காக்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது பட்டியல் சாதியினருக்கான துணிகர மூலதன நிதியை அமல்படுத்தும் (Venture Capital Fund for Scheduled Castes).

- குறிக்கோள்கள்:
    - பட்டியல் இனத்தைச் சேர்ந்த தொழில்முனையும் இளைஞர்களை அதிலும் மாற்றுத் திறனாளிகளை அதிக முன்னுரிமையுடன் ஊக்குவித்தல்.
    - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப வணிக தொடக்க நிறுவனங்களுடன் (தொடக்க நிறுவனங்களைக் காப்பது) இணைந்து ஓர் ஒருங்கிணைந்த பணி மூலம் 2024 ஆம் ஆண்டு வரை (1,000) புதுமையான யோசனைகளை ஆதரித்தல்.
- இதன் கீழ், 1,000 பட்டியல் இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அடுத்த 4 ஆண்டுகளில் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்ப வணிக தொடக்க நிறுவனங்கள் (Technology Business Incubators) மூலம் புத்தாக்க யோசனைகளுடன் அடையாளம் காணப் படுவார்கள்.




## சீரழிந்த மற்றும் காடுகள் அழிக்கப்பட்ட நிலங்களை மீட்டெடுத்தல்

- பாலைவனமாதலை எதிர்த்தலுக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் 14வது பங்காளர்கள் கருத்தரங்கானது உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- இந்தியாவானது சீரழிந்த மற்றும் காடுகள் அழிக்கப்பட்ட நிலத்தின் 26 மில்லியன் ஹெக்டேர்களை மீட்டெடுப்பதையும் 2030 ஆம் ஆண்டில் நிலச் சீரழிவு மீதான சமநிலையை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மிகமிக முக்கியமான நபர்களின் (VVIPs) பிரத்தியேகப் பயன்பாட்டிற்கான முதலாவது விமானம்

- நாட்டின் முதலாவது VVIP விமானமான போயிங் 777-300 இஆர் (Boeing 777-300 ER) ஆனது டெல்லியில் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்து தரை இறங்கியது.
- குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோருக்காக வாங்கப் பட்டுள்ள இந்த 2 போயிங் விமானங்கள் ஏர் இந்தியா ஒன் எனப்படும்.
- இது தகவலைத் திருடுதல் போன்ற எந்தவொரு இடர்ப்பாடும் இல்லாமல் நடுவானில் ஆடியோ மற்றும் காணொலி தகவல் தொடர்பை அனுமதிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான தகவல் அமைப்பைக் கொண்டு உள்ளது.



## பழங்குடியினர் இந்தியா இ-சந்தையிடல்

- ❖ மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா அவர்கள் இந்தியாவின் மிகப்பெரிய கைவினைப் பொருட்கள் மற்றும் கரிமப் பொருட்கள் சந்தையான பழங்குடியினர் இந்தியா-இ-சந்தையிடல் என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ இது அவர்களது பொருட்களை நேரடியாகச் சந்தைப்படுத்த வேண்டி அவர்களுக்கு உதவ இருக்கின்றது. மேலும் இது ஆன்லைன் வர்த்தகத்தின் உடனடிப் பயன்களை அவர்களுக்கு அளிக்கின்றது.
- ❖ இது பழங்குடியினர் வர்த்தகத்தின் டிஜிட்டல்மயமாக்கலை நோக்கிய ஒரு முக்கிய நடவடிக்கையாக விளங்குகின்றது.

## பிரதான் மந்திரி சுவாநிதித் திட்டம்

- ❖ மத்திய அரசானது தெரு உணவு விற்பனையாளர்களை ஆன்லைன் மார்க்கத்தில் கொண்டு செல்ல வேண்டி சுவிகியுடன் (Swiggy) இணைந்துள்ளது.
- ❖ இந்தத் திட்டத்தின் கீழ், இந்த நடவடிக்கையானது தெருவோர விற்பனையாளர்கள் ஆயிரக்கணக்கான நுகர்வோர்களை அணுகுவதற்கு உதவ இருக்கின்றது. இது அவர்களின் வர்த்தகத்தை வளர்ச்சியடையச் செய்யும்.
- ❖ இதன் தொடக்க முயற்சியின் ஒரு பகுதியாக, இது அகமதாபாத், சென்னை, தில்லி, இந்தூர், வாரணாசி ஆகிய 5 நகரங்கள் முழுவதும் 250 விற்பனையாளர்களைக் கொண்டு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது.

## முதலாவது 2 கரிம நறுமணப் பொருள் விதைப் பூங்காக்கள்

- ❖ குஜராத் மாநிலமானது பனஸ்கந்தா மற்றும் பட்டன் ஆகிய மாவட்டங்களில் 2 கரிம நறுமணப் பொருட்கள் விதைப் பூங்காக்களைப் (organic spices seed parks) பெற இருக்கின்றது.
- ❖ இது பெருஞ்சீரகம் மற்றும் சீரகம் (fennel and cumin) ஆகியவற்றின் கரிம விதை மதிப்புக் கூட்டுச் சங்கிலியை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினால் ஆதரவளிக்கப்பட இருக்கின்றது.

## தூய்மையாக்கப்பட்ட சீரம் எதிர்ப்பு (Antisera) சிகிச்சை

- ❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது ஹைதராபாத்தில் உள்ள பயோலாஜிக்கல் E என்ற நிறுவனத்துடன் உடன் இணைந்து "தூய்மையாக்கப்பட்ட சீரம் எதிர்ப்பை" மேம்படுத்தியுள்ளது.

- தூய்மையாக்கப்பட்ட சீரம் எதிர்ப்பானது விலங்குகளிடமிருந்துப் பெறப்பட்டுள்ளது.
- இது ப்ரோபைலாக்ஸிஸ் ஆகப் பயன்படுத்தப் படுகின்றது. மேலும் இது கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கான சிகிச்சையாகவும் பயன்படுத்தப்படுகின்றது.
- இந்தப் புதிய சிகிச்சையானது பிளாஸ்மா சிகிச்சையைப் போன்றே செயல்பட உள்ளது.
- ஆனால் இங்கு பிளாஸ்மா ஆனது விலங்குகளிடமிருந்துப் பெறப்படுகின்றது.
- சீரம் எதிர்ப்பு என்பது வைரஸ்களுக்கு எதிரான நோய் எதிர்ப்புப் பொருட்களைக் கொண்டுள்ள இரத்தத்தில் உள்ள சீரம் ஆகும்.
- இந்தப் புதிய சிகிச்சை முறையில், சீரம் ஆனது வைரஸ் நோய்த் தொற்றிலிருந்து மீண்ட குதிரைகளிடமிருந்துப் பெறப்படுகின்றது. குதிரைகளின் உடல் அமைப்பில் வைரஸிற்கு எதிரான நோய் எதிர்ப்புப் பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டு உள்ளது.
- குதிரைகளிடம் உள்ள நோய் எதிர்ப்புப் பொருட்கள் "ஈக்குவைன் சீரம் எதிர்ப்பு" (Equine Antisera) என்று அழைக்கப் படுகின்றது.

## அடல் சுரங்கப் பாதை

- இந்தியப் பிரதமர் அவர்கள் இமாச்சலப் பிரதேசத்தின் ரோஹடாங்கில் அடல் சுரங்கப் பாதையைத் திறந்து வைத்துள்ளார்.
- இது மணாலியின் அருகில் உள்ள சோலாங் பள்ளத்தாக்கையும் லாஹூல் மற்றும் ஸ்பிட்டி மாவட்டத்தில் உள்ள சிசுவையும் இணைக்கின்றது.
- இது 9.02 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட சுரங்கப் பாதையாகும்.
- இது 3,000 மீட்டர்களுக்கு மேலே அமைந்த உலகில் மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கப் பாதையாகும்.
- எல்லைச் சாலைகள் அமைப்பினால் கட்டமைக்கப்பட்ட இந்தச் சுரங்கப் பாதையானது, மணாலி மற்றும் லேஹ் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட தொலைவை 46 கிலோ மீட்டர் என்ற அளவில் குறைக்கும்.
- முன்னாள் பிரதமரான அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் 2000 ஆம் ஆண்டு ஜூன் 03 அன்று அடல் சுரங்கப் பாதையைக் கட்டமைக்க முடிவு செய்தார்.
- இந்தச் சுரங்கப் பாதைக்கான அடிக்கல் ஆனது 2002 ஆம் ஆண்டு மே 26 அன்று போடப்பட்டது.






## வைபவ் (VAIBHAV) மாநாடு 2020

- இந்தியப் பிரதமர் "வைஷ்விக் பாரதிய வைக்யானிக் மாநாடு 2020" என்று பெயர் கொண்ட வெளிநாடு வாழ் மற்றும் வெளிநாட்டில் குடியிருக்கும் இந்திய ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்களின் காணொலி முறையிலான மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
- இது உலகம் முழுவதும் இருக்கும் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி & வளர்ச்சி அமைப்புகளில் உள்ள வெளிநாடு வாழ் இந்திய வல்லுநர்களை உலகளாவிய வளர்ச்சிக்காக வேண்டி இந்தியாவில் உள்ள கல்வி மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் தளத்தை வலுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு நடைமுறைகள் குறித்து விவாதிப்பதற்காக அனைவரையும் ஒரே தளத்தில் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## "SUNIDHI" முன்னெடுப்பு

- நிலக்கரிச் சுரங்க வைப்பு நிதி அமைப்பானது (CMPFC - Coal Mines Provident Fund Organisation) தகவல் தொழில்நுட்பத் திட்டமான "மேம்பட்ட புதிய தலைமுறை தகவல் மற்றும் கையாளும் முன்னெடுப்பு" (SUNIDHI - Superior New-generation Information and Data Handling Initiative) என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது வைப்புநிதி மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தனது நடவடிக்கைகள் முழுவதையும் டிஜிட்டல் மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- CMPFC என்பது நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்கான வைப்பு நிதி, ஓய்வூதியம் மற்றும் வைப்புடன் தொடர்புடைய காப்பீடு போன்ற பல்வேறு திட்டங்களை நிர்வகிக்கும் மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.

## ஆரோக்கியமான முதுமையின் பத்தாண்டு காலம்

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் சர்வதேச மூத்த குடிமக்கள் தினத்தன்று (அக்டோபர் 01) இந்தியாவில் ஆரோக்கியமான முதுமையின் பத்தாண்டு காலம் (2020-2030) என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளார்.
- இது மூத்த குடிமக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக அடுத்த 10 ஆண்டு காலத்திற்கு வேண்டிய சிறப்பான செயல்பாடுகளுக்காக அரசாங்கங்கள், பொதுச் சமூகம் போன்றவற்றை ஒரே தளத்தில் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மூத்த குடிமக்களின் (60 அல்லது அதற்கு மேற்பட்ட வயது) மொத்த எண்ணிக்கையானது 10.36 கோடியாக உள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகையில் 8.57% மூத்த குடிமக்களாக உள்ளனர்.

## ஜவுளிப் பாரம்பரியங்கள் குறித்த முதலாவது சர்வதேச இணையவழிக் கருத்தரங்கு

- இந்தியப் பிரதமர் அவர்கள் ஜவுளிப் பாரம்பரியங்கள் குறித்த ஒரு சர்வதேச இணையவழிக் கருத்தரங்கில் உரையாற்றினார்.
- இந்த இணையவழிக் கருத்தரங்கை இந்தியக் கலாச்சார உறவுகள் கழகம் மற்றும் உத்தரப் பிரதேச வடிவமைப்பு பயிற்சி நிறுவனம் ஆகியவை ஒருங்கிணைத்தன.

- இந்த இணையவழிக் கருத்தரங்கின் கருத்துரு, "நெய்தல் தொடர்புகள் : ஜவுளிப் பாரம்பரியங்கள்" என்பதாகும்.

| பிராந்தியங்களில் புகழ்பெற்ற ஜவுளிகள் | |
|---|---|
| **ஆந்திரப் பிரதேசம்** | கலம்காரி |
| **அசாம்** | முகா பட்டு |
| **காஷ்மீர்** | பஷ்மினா |
| **பஞ்சாப்** | புலாக்ரி |
| **குஜராத்** | படோலாஸ் |
| **பானரஸ்** | பட்டு சேலைகள் |
| **மத்தியப் பிரதேசம்** | சந்தேரி துணி |
| **ஒடிசா** | சம்பல்புரி துணி |

## RAISE - மாநாடு

- பிரதமர் அவர்கள் செயற்கை நுண்ணறிவு குறித்த RAISE 2020 (2020 ஆம் ஆண்டின் சமூக மேம்பாட்டிற்காக செயற்கை நுண்ணறிவின் பங்கு) என்ற ஒரு மிகப்பெரிய காணொலி முறையிலான மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
- இந்தக் காணொலி முறையிலான மாநாடானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இதற்கு முன்பு இளைஞர்களுக்கான செயற்கை நுண்ணறிவுப் பொறுப்பு என்ற ஒரு திட்டமானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப் பட்டுள்ளது.




## இந்தியாவின் முதலாவது விலங்குப் பாலங்கள்

- தில்லி-மும்பை விரைவுப் பாதையானது வனவிலங்குகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருப்பதற்காக வேண்டி இந்தியாவின் முதலாவது விலங்குப் பாலங்கள் அல்லது விலங்குகள் கடந்து செல்லும் நடைபாதையினைப் பெற இருக்கின்றது.
- ராஜஸ்தானில் உள்ள முகுந்தரா மற்றும் ரந்தம்போர் வனவிலங்குச் சரணாலயங்களை இணைக்கும் வகையில் உள்ள இந்த பரிந்துரைக்கப்பட்ட பெருவழிப் பாதையில் ரந்தம்போர் வனவிலங்குப் பெருவழிப் பாதையின் ஒரு பிரிவானது சேர்க்கப்பட இருக்கின்றது.

- இந்தப் பெருவழிப் பாதையானது இந்தியாவின் தலைநகரான தில்லியை இந்தியாவின் வணிகத் தலைநகரான மும்பையுடன் இணைக்க இருக்கின்றது.
- இந்தப் பெருவழிப் பாதையானது 2.5 கிலோ மீட்டருக்கு மேலான ஒட்டுமொத்த நீளத்துடன் விலங்குகள் கடந்துச் செல்லும் 5 நடைபாதையினைப் பெற இருக்கின்றது.
- விலங்குகள் ஒவ்வொரு 500 மீட்டர் இடைவெளியிலும் ஒரு நடைபாதை வழியைப் பெற இருக்கின்றன.
- மேலும் அவை அந்தப் பெருவழிப் பாதையில் 3-4 மீட்டர்கள் அளவில் ஒலித் தடுப்புச் சாதனங்களுடன் 8 மீட்டர்கள் அளவிற்கு ஒரு எல்லைச் சுவரைப் பெற இருக்கின்றன.




## நமஸ்தே டிஜிட்டல் - கூகுள்

- கூகுள் ஆனது தூர்தர்ஷனுடன் இணைந்து ஹலோ டிஜிட்டல் (நமஸ்தே டிஜிட்டல்) எனப்படும் ஒரு புதிய தொலைக்காட்சித் தொடரைத் தொடங்கவுள்ளது.
- இது சவால் நிரம்பிய பொருளாதாரச் சூழல்களை எதிர்கொள்வதற்காக சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தொடரானது வர்த்தகத்திற்கு டிஜிட்டல்மயமாக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கவுள்ளது.
- மேலும் அது இணையதளம் குறித்து தேவையான தகவலையும் வழங்கவுள்ளது.

## “சிறியதை வலுவாக மாற்றுதல்” பிரச்சாரம்

- கூகுள் இந்தியா நிறுவனமானது இந்தியாவில் சிறிய மற்றும் உள்ளூர் வர்த்தகத்திற்கு ஆதரவளிப்பதற்காக “சிறியதை வலுவாக மாற்றுதல்” என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இது சிறிய வர்த்தகங்களுக்காக வேண்டி குடிமக்களிடமிருந்து ஆதரவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடிமக்கள் உள்ளூர் பொருட்களை வாங்குதல், கருத்துகளைப் பதிவிடுதல், தரநிலைப் பற்றிக் கூறுதல் மற்றும் சமூக ஊடகத்தில் தங்களுக்குப் பிடித்த வர்த்தகர்களை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் சிறுவர்த்தகத்திற்கு உதவ முடியும்.

## இந்தியா பிவி முனை 2020

- நிதி ஆயோக், மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகம் மற்றும் இன்வெஸ்ட் இந்தியா ஆகியவை இணைந்து “இந்தியா பிவி முனை 2020” (India PV EDGE 2020) என்ற ஒரு உலகளாவிய கருத்தரங்கை காணொலி வாயிலாக நடத்தின.
- இது இந்தியாவில் சிறப்பு வாய்ந்த சூரிய ஒளி மின்னழுத்த உற்பத்தியைத் துரிதப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கருத்தரங்கானது, “தொகுதிகள் மற்றும் உற்பத்திச் சாதனம்” மற்றும் விநியோகச் சங்கிலி மீதான அமர்வுகளை உள்ளடக்கியுள்ளது.




## இந்தியப் பருத்திக்கான முதல் நிறுவன அடையாளம் மற்றும் சின்னம்

- மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்கள் இரண்டாம் உலகப் பருத்தி தினத்தன்று இந்தியப் பருத்திக்கான முதல் நிறுவன அடையாளம் மற்றும் சின்னத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இனி இந்தியாவின் உயர்வகைப் பருத்தியானது உலகப் பருத்தி வர்த்தகத்தில் ‘கஸ்தூரிப் பருத்தி’ என்று அழைக்கப்படும்.
- கஸ்தூரிப் பருத்தியானது வெண்மை, பிரகாசம், மென்மை, தூய்மை, மிளிர்வு, தனித்துவம் மற்றும் இந்தியத் தன்மை ஆகியவற்றை முன்னிறுத்தும்.
- இந்தியாவானது பருத்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது மற்றும் உலகில் மிகப்பெரிய பருத்தி நுகர்வோர் நாடாகவும் உள்ளது.

KASTURI COTTON INDIA

## ஆழ்கடல் ரோந்துக் கப்பல் விக்ரகா




- இந்தியக் கடலோரக் காவற் படையின் 7வது ஆழ்கடல் ரோந்துக் கப்பலான "விக்ரகா" ஆனது சென்னை அருகே உள்ள காட்டுப்பள்ளி துறைமுகத்தில் முறையாக அறிமுகப்படுத்தப் பட்டது.
- இது 2015 ஆம் ஆண்டில் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தினால் எல் & டி நிறுவனத்திற்கு ஒப்பந்தம் விடப்பட்ட 7 OPVகளில் கடைசிக் கப்பல் ஆகும்.
- OPV (Offshore Patrol Vehicle) வகுப்புக் கப்பல்களின் வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பை ஒரு தனியார் துறை கப்பல் கட்டுமான நிறுவனம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

## கியான் சுழற்சி முன்முயற்சிகள்

- மத்தியக் கல்வித் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் கியான் சுழற்சி என்ற ஒரு முன்முயற்சியைத் தொடங்கி வைத்தார்.
- இது ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள இந்தியத் தகவல் தொழில்நுட்ப மையத்தினால் மேம்படுத்தப்பட்டு, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தால் நிதியளிக்கப்படும் ஒரு தொழில்நுட்ப வர்த்தக புத்தாக்க மையம் ஆகும்.
- இந்த மையங்கள் நிறுவனங்களின் அறிவுசார் மூலதனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றின் தொழில்முனைவுத் திறனை மேம்படுத்த உள்ளன.
- இது செயற்கை நுண்ணறிவு, தொடரேடு (Block-chain), இணையவழி நேரடி அமைப்புகள், இணையவழிப் பாதுகாப்பு, இணையதளப் பொருட்கள் மற்றும் இயந்திர மனிதன் உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இளைஞர்களைத் தொழில் முனைவில் ஈடுபட ஊக்குவிக்கின்றது.

## சாகர் கவச் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சி

- இந்தியக் கடற்படையானது "சாகர் கவச்" எனும் 2 நாட்கள் நடைபெறும் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்தியுள்ளது.
- இந்தப் பயிற்சியானது இந்தியக் கடலோரக் காவல் படையுடன் இணைந்து இந்தியக் கடற்படையால் நடத்தப் பட்டது.
- இது கடலோரப் பாதுகாப்பு நடைமுறை மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறை ஆகியவற்றைச் சோதனை செய்து அதை பரிசோதித்துப் பார்ப்பதற்காக நடத்தப்படும் ஒரு அரையாண்டுப் பயிற்சியாகும்.

## மட்லா அபியான் பயிற்சி

- ❖ மட்லா அபியான் பயிற்சி என்பது மட்லா நதியில் இந்தியக் கடற்படையால் நடத்தப்பட்ட 5 நாட்கள் கால அளவுள்ள ஒரு கடலோரக் காவல் படைப் பயிற்சி ஆகும்.
- ❖ இந்தப் பயிற்சியின் போது சுந்தரவனக் கழிமுகப் பகுதியில் இரண்டு இந்தியக் கப்பல்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டன.
- ❖ அதிலிருந்த மாலுமிகள் கடலோரப் பாதுகாப்பு, கடலோரக் காவல் நிலையங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி உள்ளூர் மீனவர்களுடன் கலந்துரையாடினர்.
- ❖ அந்த நதி சுந்தரவனம் மற்றும் அதனைச் சுற்றிலும் ஒரு அகலமான நதி முகத்துவாரத்தை உருவாக்குகின்றது.




## "ஸ்வமித்வா" (SVAMITVA) திட்டத்தின் கீழ் சொத்து அட்டைகள்

- ❖ இந்தியப் பிரதமர் அவர்கள் "SVAMITVA" என்ற திட்டத்தின் கீழ் சொத்து அட்டைகளின் நேரடி விநியோகத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ "SVAMITVA" என்பது கிராமப்புறப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கிராமங்களின் கள ஆய்வு மற்றும் வரைபடமிடல் என்பதைக் குறிக்கின்றது.
- ❖ இது கடன் வாங்குவதற்காக அல்லது இதர நிதியியல் பயன்பாடுகளுக்காக வேண்டி கிராமப் புறத்தினரால் சொத்துக்களை நிதியியல் சொத்தாகப் பயன்படுத்த வழிவகை செய்கின்றது.
- ❖ இது நிலச் சொத்து மீதான பிரச்சினைகளைக் குறைக்கவும் உதவ இருக்கின்றது.

### *"SVAMITVA" திட்டம்*

- ❖ "SVAMITVA" (Survey of Villages and Mapping with Improvised Technology in Village Areas) திட்டமானது மத்தியப் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒரு மத்திய அரசுத் துறைத் திட்டமாகும்.
- ❖ இது தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினமான 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் 24 ஆம் தேதி அன்று பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ❖ இது கிராமப்புறப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு "உரிமை ஆவணங்களை" வழங்குவதையும் சொத்து அட்டைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## 8 கடற்கரைகளுக்கான நீலக் கொடி சான்றளிப்பு

- 8 இந்தியக் கடற்கரைகள் ஓர் அரசுசாரா நிறுவனமான சுற்றுச்சூழல் கல்வி நிறுவனம் என்ற அமைப்பிடமிருந்து "புகழ்பெற்ற நீலக் கொடி" சான்றிதழைப் பெற்று உள்ளன.
- குஜராத்தின் துவாரகாவில் உள்ள சிவராஜ்பூர் கடற்கரை, டையூவில் உள்ள கோஹ்லா கடற்கரை, கர்நாடகாவில் உள்ள காசர்கோடு மற்றும் பாடுபிட்ரி கடற்கரைகள், கேரளாவில் உள்ள கப்பட் கடற்கரை, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ருஷிகொண்டா, ஒடிசாவில் உள்ள தங்கக் கடற்கரை மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவில் உள்ள ராதாநகர் கடற்கரை ஆகியவை தற்பொழுது நீலக் கொடி சான்றிதழைப் பெற்றுள்ளன.




## காமதேனு தீபாவளி அபியான்

- ராஷ்டிரிய காமதேனு ஆயோக் ஆனது "காமதேனு தீபாவளி அபியான்" என்ற ஒன்றிற்காக தேசிய அளவிலான பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இது இந்த தீபாவளி கொண்டாட்டத்தில் மாட்டுச் சாணம்/ பஞ்சகவ்யப் பொருட்களின் பிரத்தியேக பயன்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்த ஆண்டின் தீபாவளி திருநாளின் போது 11 கோடி குடும்பங்கள் மாட்டுச் சாணத்தினால் உருவாக்கப் பட்ட 33 கோடி ஒளி விளக்குகளை ஏற்றுவது என்ற இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *ராஷ்டிரிய காமதேனு ஆயோக்*

- 2019 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த ஆயோக் ஆனது ஒரு உயர்மட்ட நிரந்தரத் தலைமை ஆலோசக அமைப்பாகும்.
- இது மத்திய மீன் வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.
- இது ராஷ்டிரிய கோகுல் திட்டத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகச் செயல்படவுள்ளது.

## இந்திய ஆற்றல் மாதிரி மன்றம்

- நிதி ஆயோக்கானது இந்திய ஆற்றல் மாதிரி மன்றத்தின் (IEMF - India Energy Modelling Forum) நிர்வாக அமைப்பை அறிவித்துள்ளது.
- IEMF-ன் நிர்வாக அமைப்பானது ஒரு அமைச்சகங்களுக்கிடையேயான குழு மற்றும் ஒரு வழிகாட்டுக் குழுவைக் கொண்டிருக்கும்.
- அமைச்சகங்களுக்கிடையேயான குழுவானது மாதிரிச் செயல்பாடுகளை ஆய்வு செய்யும் மற்றும் புதிய ஆராய்ச்சிப் பகுதிகள் குறித்து வழிகாட்டுதல்களை அளிக்கும்.
- வழிகாட்டும் குழுவானது கொள்கை சார் விவகாரங்களைத் தேர்ந்தெடுக்கும்.
- மகாராஷ்டிராவின் பிரயாஸ் குழுவானது வழிகாட்டுக் குழுவின் முதலாவது நடத்துநராக (ஒருங்கிணைப்பாளராக) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இது அமெரிக்கா-இந்தியா உத்திசார் ஆற்றல் பங்களிப்பின் கீழ் நிதி ஆயோக் மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனம் ஆகியவற்றால் கூட்டாக தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த மன்றமானது அறிவுசார் பங்காளர்கள், தரவு நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய அரசு அமைச்சகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## கப்பல்களின் மறு சுழற்சிக்கான தேசிய ஆணையம்

- மத்திய அரசானது கப்பலின் பொது இயக்குநரகத்தை (directorate general of shipping) கப்பல்களின் மறுசுழற்சிக்கான தேசிய ஆணையமாக அறிவிப்பதற்கு வேண்டி ஒரு அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிவிக்கையானது கப்பல்களின் மறுசுழற்சிச் சட்டம், 2019 என்ற சட்டத்தின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.
- இது நாட்டில் கப்பல் மறுசுழற்சி தொடர்பான அனைத்துவித நடவடிக்கைகளையும் நிர்வகித்து, மேற்பார்வையிடுகின்ற மற்றும் கண்காணிக்கும் அதிகாரம் கொண்ட ஒரு தலைமை அமைப்பாகும்.
- இது கப்பல் மறுசுழற்சி கள முதலாளிகள் மற்றும் மாநில அரசுகள் ஆகியோருக்குத் தேவைப்படும் பல்வேறு ஒப்புதல்களை அளிப்பதற்கான ஒரு உயர்மட்ட ஆணையமாக செயல்படவுள்ளது.
- உலகில் மிகப்பெரிய கப்பல் உடைப்பைக் கொண்டுள்ள நாடு இந்தியா ஆகும்.
- இநதியா ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 70 இலட்சம் டன் அளவில் மறுசுழற்சி செய்கின்றது. இதற்கு அடுத்து வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவை மிகப்பெரிய கப்பல் உடைப்பாளர் நாடாக விளங்குகின்றன.
- கப்பல் மறுசுழற்சிச் சட்டம், 2019 என்ற சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், கப்பல் மறுசுழற்சிக்கான ஹாங்காங் பிரகடனத்துடன் இந்தியா இணங்கியுள்ளது.

### *கப்பல் மறுசுழற்சி குறித்த ஒப்பந்தம்*

- சர்வதேச கடல்சார் அமைப்பானது (IMO - International Maritime Organization) 2009 ஆம் ஆண்டில் கப்பல்களின் பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மறுசுழற்சிக்கான ஹாங்காங் சர்வதேசப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- ஆனால் இந்தப் பிரகடனம் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. ஏனெனில் இது 15 நாடுகளினால் இன்னமும் அங்கீகரிக்கப் படவில்லை.

## குளிர்சாதன வசதியற்ற பெட்டிகளை மேம்படுத்தல்

- இந்திய இரயில்வேயானது அதிவேக இரயில்களுக்காக குளிர்சாதன வசதியற்ற படுக்கை வசதி கொண்ட பெட்டிகள் அனைத்தையும் குளிர்சாதன வசதி உள்ள பெட்டிகளாக மாற்ற முடிவு செய்துள்ளது.
- இந்திய இரயில்வேயானது மணிக்கு 130 கிலோ மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட வேகத்தில் செல்லும் மெயில் மற்றும் விரைவு இரயில்களில் படுக்கை வசதிகளை நீக்க உள்ளது.
- மணிக்கு 130 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் இது போன்ற இரயில்கள் குளிர்சாதன வசதிகளை மட்டும் கொண்டிருக்கும் வகையில் மேம்படுத்தப்பட உள்ளது.

## சரல் ஜீவன் பீமா

- இதைக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (Insurance Regulatory and Development Authority) வெளியிட்டு உள்ளது.
- இது ஒரு நிலையான தனிநபர் கால ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்பு (individual term life insurance product) ஆகும்.
- இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது தேர்விற்கான தகவல்களையும் மற்றும் தவறான விற்பனையைக் குறைக்கவும் உதவும்.
- இதில் குறைந்தபட்ச அளவில் உறுதியளிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகையானது ரூ.5 லட்சமாகவும், அதிகபட்ச காப்பீட்டுப் பாதுகாப்புத் தொகையானது ரூ.25 லட்சமாகவும் வைக்கப் பட்டு உள்ளது.
- 18 முதல் 65 அகவைக்கு உட்பட்ட எவரும் இந்தத் திட்டத்தில் இணையலாம்.
- காப்பீட்டை வழங்கும் நிறுவனம் எதுவாக இருப்பினும் அவர்கள் வாங்க இருக்கும் தயாரிப்பு (product) ஒரே மாதிரியாக இருப்பதால் ஆயுள் காப்பீட்டை முதன்முறையாக வாங்குபவர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

## பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுக்கான ஆதார் அட்டை

- பிறப்பு, இறப்புப் பதிவுக்கு ஆதார் அட்டை கட்டாயமில்லை என்று இந்தியத் தலைமைப் பதிவாளர் தெளிவுபடுத்தியுள்ளார்.
- மேலும் ஆதார் அட்டையானது மக்களால் தானாக முன்வந்து வழங்கப் பட்டால், அது எந்த ஆவணத்திலும் அச்சிடப்படக் கூடாது அல்லது பிறப்பு மற்றும் இறப்பு பற்றிய எந்த தரவுதளத்திலும் முழு வடிவத்தில் சேமிக்கப்படக் கூடாது என்றும் கூறப்பட்டு உள்ளது.
- மேலும், வங்கிக் கணக்கைத் திறப்பதற்கும், மொபைல் இணைப்புகளைப் பெறுவதற்கும், பள்ளிச் சேர்க்கைக்கும் ஆதார் அட்டையைக் கட்டாயமாக்க முடியாது.
- வருமான வரி அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டி ஆதார் மற்றும் நிரந்தரக் கணக்கு எண்ணை (Permanent Account Number - PAN) இணைப்பது கட்டாயமாகும்.
- தனியார் நிறுவனங்கள் ஆதார் அட்டையைக் கேட்க இயலாது.

## நீளமான இரு திசைப்பட்ட சுரங்கப் பாதை – ஆசியா

- ஜம்மு காஷ்மீரில் உள்ள 14.15 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஜோஜிலா சுரங்கப் பாதையானது ஆசியாவில் நீளமான இரு திசைப்பட்ட சுரங்கப் பாதையாக இருக்கும்.
- இது தேசிய நெடுஞ்சாலை – 1ன் மீது அமைந்து ஸ்ரீநகர் பள்ளத்தாக்கு மற்றும் லேஹ்

(லடாக் பீடபூமி) ஆகியவற்றிற்கு இடையே அனைத்து வானிலை சூழ்நிலைகளிலும் ஒரு இணைப்பு வசதியை வழங்க உள்ளது.

- இந்தத் திட்டமானது தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக நிறுவனத்தினால் செயல்படுத்தப்பட உள்ளது.

## ஸ்டார்ஸ் (STARS) திட்டம்

- மத்திய அமைச்சரவையானது உலக வங்கியினால் ஆதரவளிக்கப்படும் ஸ்டார்ஸ் (STARS - Strengthening Teaching-Learning and Results for States) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக நேரடி இணைப்புகளுடன் செயல்படுத்துதல், மேம்படுத்துதல், மதிப்பிடுதல் மற்றும் இடையீடுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் மாநிலங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஸ்டார்ஸ் என்பது "மாநிலங்களுக்கான கற்பித்தலை மேம்படுத்துதல் மற்றும் தேர்வு முடிவுகளை மேம்படுத்துதல்" என்பதைக் குறிக்கின்றது.
- இந்தத் திட்டமானது இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கவுள்ளது.

## கபிலா (KAPILA) திட்டம்

- "கபிலா" கலாம் என்ற ஒரு திட்டமானது இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் 89வது பிறந்த தினத்தன்று மத்தியக் கல்வித் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.
- கபிலா என்பது "அறிவுசார் சொத்துரிமைக் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கான கலாம் திட்டம்" (Program for Intellectual Property Literacy and Awareness campaign) என்பதைக் குறிக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் கீழ், உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் அவர்களது கண்டுபிடிப்பு குறித்த காப்புரிமைக்கான பயன்பாட்டுச் செயல்முறையின் சரியான வழிமுறை குறித்த தகவலைப் பெற முடியும். மேலும் இதன் மூலம் அவர்களின் உரிமைகள் குறித்தும் அவர்களால் அறிந்து கொள்ள முடியும்.

## தாளடி எரிப்பைத் தடுப்பதற்கான குழு

- இந்திய உச்ச நீதிமன்றமானது பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மேற்கொள்ளப் படும் தாளடி எரிப்பைத் தடுப்பதற்காக வேண்டி நீதியரசர் மதன் B. லோகுர் தலைமையில் ஒரு நபர் கண்காணிப்புக் குழுவை அமைத்து உள்ளது.
- தாளடி எரிப்பானது தேசியத் தலைநகரப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகரித்து வரும் மாசுபாட்டு நிலைக்குக் காரணமாக உள்ளது.
- இந்தப் புதிய குழுவானது தாளடி எரிப்பைக் கண்காணித்து, அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## குருதியழிவுக் சோகை (தாலசீமியா) பால் சேவா யோஜனாவின் இரண்டாம் கட்டம்

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது மிகவும் பின்தங்கிய தாலசீமியா நோயாளிகளுக்காக வேண்டி "குருதியழிவுச் சோகை" (தாலசீமியா) பால் சேவா யோஜனாவின் இரண்டாம் நிலையைத் தொடங்கியுள்ளது.
- இது பொருத்தமான குடும்ப நன்கொடையாளர்களைக் கொண்டுள்ள நோயாளிகளுக்காக குருதியழிவுச் சோகை மற்றும் அரிவாள் அணு நோய் (Sickle Cell Disease) போன்ற ஹீமோகுளோபினோபதிஸ்களுக்காக வேண்டி (Haemoglobinopathies) அவர்களுக்கு ஒரு முறை நோயினைக் குணப்படுத்தும் வாய்ப்பினை வழங்குகின்றது.

### *தாலசீமியா*

- இது நமது உடலானது வழக்கமான ஹீமோகுளோபினை விட குறைவான அளவில் ஹீமோகுளோபினைக் கொண்டிருக்கும் நிலையிலான ஒரு மரபியல் இரத்தப் பிரச்சினையாகும்.
- ஹீமோகுளோபின் ஆனது இரத்தச் சிவப்பு செல்கள் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்ல வழிவகை செய்கின்றது.
- தாலசீமியா ஆனது களைப்பை ஏற்படுத்தும் (சோம்பலை) இரத்தச் சோகைக்குக் காரணமாக விளங்குகின்றது.

## குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டம்

- இந்திய உச்ச நீதிமன்றமானது 2005 ஆம் ஆண்டின் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தை ஒரு "மைல்கல்லாக" அறிவித்துள்ளது.
- இந்தியாவில் பெண்களுக்கெதிரான இது போன்ற குற்றங்கள் பெருகிக் கிடப்பதாகவும் அவர்கள் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு வகையில் வன்முறையை எதிர்கொள்கின்றனர் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்தச் சட்டமானது அரசியலமைப்பின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள பெண்களது உரிமைகளின் மீது அதிக செயல்திறனுள்ள அளவில் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது குடும்பத்திற்குள் நிகழ்கின்ற அல்லது அது தொடர்பான விவகாரங்களினால் ஏற்படும் வன்முறையின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்குப் பாதுகாப்பை அளிக்கின்றது.
- இந்தியாவில் குடும்ப வன்முறையைத் "தண்டனைக்குரிய ஒரு குற்றமாக" அங்கீகரிக்கும் முதலாவது குறிப்பிடத்தக்க ஒரு முயற்சி இதுவாகும்.
- இது தனது அம்சங்களைத் திருமணமாகாமல் சேர்ந்து வாழ்பவர்களுக்கும், சட்ட நிவாரணங்களுடன் சேர்த்து பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும் வழிவகை செய்யும் வகையில் அமைத்துள்ளது.

## சிறப்பு கிசான் இரயில் நாக்பூர் – புது தில்லி

- மத்தியப் போக்குவரத்துத் துறை அமைச்சரான நிதின் கட்காரி அவர்கள் ஒரு சிறப்புக் கிசான் ரயிலான 'நாக்பூர் – ஆதர்ஷ் நகர் புதுதில்லி' என்ற இரயிலை நாக்பூரில் தொடங்கி வைத்தார்.
- இந்த இரயிலானது சிட்ரஸ் பழங்களை உற்பத்தி செய்யும் மகாராஷ்டிராவின் விதர்பா மாவட்டத்திலிருந்து 205 டன்கள் அளவிலான ஆரஞ்சு பழங்களின் முதல் சரக்குப் பெட்டகத்தை எடுத்துச் செல்லும்.



## கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல் – மியான்மர் கடற்படை

- இந்தியாவானது கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களில் (Kilo-class submarine) ஒன்றான “INS சிந்துவீர்” என்பதனை மியான்மர் கடற்படைக்கு விரைவில் வழங்க இருக்கின்றது.
- இது மியான்மர் கடற்படையின் முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் ஆகும். ஆதலால் இது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.
- இந்த நடவடிக்கையானது இந்தியாவின் சாகர் (பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) என்ற தொலைநோக்குப் பார்வையோடு ஒன்றிப் பொருந்துவதாக உள்ளது.

### *கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்*

- கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பலானது சோவியத் கடற்படைக்காக சோவியத் ஒன்றியத்தினால் வடிவமைக்கப்பட்டு மற்றும் கட்டமைக்கப்பட்ட டீசல் – மின்சாரம் ஆகியவற்றால் இயங்கும் ஒரு தாக்குதல் ரக நீர் மூழ்கிக் கப்பலாகும்.
- முதலாவது கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பலானது 1980 ஆம் ஆண்டில் சோவியத் கடற்படையில் பணியில் சேர்க்கப்பட்டது.
- இந்தியாவானது சிந்துகோஷ் வகுப்பு என்று நிர்ணயிக்கப் பட்டுள்ள 10 அசல் கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டுள்ளது.

## மின்னணுத் தடுப்பு மருந்து நுண்ணறிவு அமைப்பு (EVIN)

- இந்திய அரசானது கோவிட் – 19 நோய்த் தடுப்பு மருந்துகளைச் சேமித்து வைப்பதற்கு ஒரு மையத்தை உருவாக்குவதற்காக தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களை அடையாளம் காணத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவானது கோவிட் – 19 தொற்றிற்காக வேண்டி பல்வேறு தடுப்பு மருந்துகளை அறிமுகப் படுத்த திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.
- இந்திய அரசானது இந்தத் தடுப்பு மருந்தைச் சேமித்து வைப்பதற்காக EVIN அமைப்பைப் பயன்படுத்த இருக்கின்றது.
- EVIN (Electronic Vaccine Intelligence Network) ஆனது தற்பொழுது இந்தியாவில் நோய் தடுப்புத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.
- EVIN ஆனது தடுப்பு மருந்தின் நிகழ்நேரக் கண்காணிப்பை மேற்கொள்கின்றது.
- EVIN ஆனது தற்பொழுது கோவிட் – 19 எதிர்வினைப் பொருளில் விநியோகச் சங்கிலியைக் கண்காணிக்கப் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்த அமைப்பானது ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து தேசிய சுகாதாரத் திட்டத்தினால் செயல்படுத்தப்படுகின்றது.

## புல்தானா மாதிரி (Buldhana Pattern)

- மத்திய அமைச்சரான நிதின் கட்கரி அவர்கள் மகாராஷ்டிராவின் புல்தானா நீர்ப் பாதுகாப்பு மாதிரியானது தேசிய அங்கீகாரத்தை வென்றுள்ளதாக அறிவித்துள்ளார்.
- நிதி ஆயோக் ஆனது இதன் அடிப்படையில் நீர்ப் பாதுகாப்பு குறித்த தேசியக் கொள்கையை வடிவமைக்கும் செயலில் இறங்கியுள்ளது.
- இது தேசிய நெடுஞ்சாலைக் கட்டமைப்பு மற்றும் நீர்ப் பாதுகாப்பு ஆகியவற்றுடன் ஒன்றிப் பொருந்துதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- இது நீர் நிலைகள், மற்றும் நதிகளிலிருந்து வரும் மண்ணைப் பயன்படுத்தி வறட்சிப் பகுதியான விதர்பா பகுதியின் புல்தானா மாவட்டத்தில் முதன்முறையாக எட்டப் பட்டுள்ளது.
- இது புல்தானா மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளிடையே நீர் சேமிப்பின் திறனை அதிகரிக்க வழிவகுத்துள்ளது. அதனால் இது புல்தானா மாதிரி என்று அழைக்கப் படுகின்றது.

## தேர்தல் பிரச்சாரச் செலவினம் அதிகரிப்பு

- மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சகமானது மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கான செலவினத்தை 10% என்ற அளவில் அதிகரித்துள்ளது.
- இந்த அதிகரிப்பின் மூலம், அனைத்து மாநிலங்களும் 20 இலட்சம் செலவினம் என்ற வரம்பிலிருந்து 22 இலட்சம் செலவினம் என்ற வரம்பிற்குச் செல்ல இருக்கின்றன.
- தற்பொழுது ரூ.28 இலட்சம் என்ற செலவின வரம்பினைக் கொண்டுள்ள மாநிலங்கள் ரூ.30.8 இலட்ச செலவினம் என்ற வரம்பிற்கு மாற உள்ளன.
- நாடாளுமன்றத் தேர்தல்களில் பெரிய மாநிலங்களுக்கான செலவின வரம்பானது ரூ.70 இலட்சமாக உள்ளது.
- இது தற்பொழுது ரூ.77 இலட்சமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.
- சிறிய மாநிலங்களில், இந்த வரம்பானது ரூ.54 இலட்சத்திலிருந்து ரூ.59 இலட்சமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

## இஸ்ரேலிடமிருந்து நீர் இணைப்பு

- இஸ்ரேல் தூதரகமானது ஜனவரியிலிருந்து "நீர் இணைப்பு" என்ற ஒரு தனிப் பிரிவைக் கொண்டிருக்கும்.
- இது இந்தியாவின் நீர் மேலாண்மை மற்றும் வேளாண் துறைகளின் மேம்பாடுகளுக்கு வேண்டி அவற்றின் சிறந்த நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை அளிக்க உள்ளது.
- மேலும் இஸ்ரேல் ஆனது தனது இருப்பு மற்றும் ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் வட கிழக்குப் பகுதியில் ஒரு கௌரவத் தூதரை நியமிக்க உள்ளது.

## சிபிஐ விசாரணைக்கான 'பொது ஒப்புதல்' ரத்து – மகாராஷ்டிரா

- தனது மாநிலத்தில் வழக்குகளை விசாரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு (சிபிஐ) வழங்கப் பட்ட "பொது ஒப்புதலை" மகாராஷ்டிரா அரசானது திரும்பப் பெற்றுள்ளது.
- மத்திய புலனாய்வுப் பிரிவானது 'டெல்லி சிறப்புக் காவல் அமைப்புச் சட்டம் 1946' என்ற சட்டத்தால் நிர்வகிக்கப் படுகிறது.
- ஒரு மாநிலத்தில் விசாரணையை நடத்துவதற்கு இந்த சட்டம் அந்த மாநில அரசின் ஒப்புதலைக் கட்டாயமாக்குகிறது.

## நுண்ணோவியத்தில் வாழ்க்கை எனும் திட்டம்

- இது தேசிய அருங்காட்சியகம், புது தில்லி, கலாச்சார அமைச்சகம் மற்றும் கூகுள் கலை & கலாச்சாரம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- இதன் மூலம் புது தில்லியின் தேசிய அருங்காட்சியகத்தில் இருந்து பல நூறு நுண்ணோவியங்களை (மினியேச்சர்) இணைய வழியில் காணலாம்.

## தேர்தல் செலவுக் குழு

- தேர்தல் ஆணையமானது வாக்காளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு மற்றும் செலவுப் பணவீக்கக் குறியீட்டின் உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒரு வேட்பாளருக்கான பிரச்சார செலவு வரம்புகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவில் முன்னாள் இந்திய வருவாய்த் துறை அலுவலர் மற்றும் பொது இயக்குனர் (விசாரணைப் பிரிவு) ஹரிஷ்குமார் மற்றும் பொதுச் செயலாளர் மற்றும் பொது இயக்குனர் (செலவுப் பிரிவு) உமேஷ் சின்ஹா ஆகிய இரு உறுப்பினர்கள் உள்ளனர்.

## ஆயுஷ்மான் சஹாகர்

- இது நாட்டில் சுகாதார உள்கட்டமைப்பை உருவாக்குவதில் கூட்டுறவு நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்க உதவும் ஒரு திட்டமாகும்.
- வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி மேம்பாட்டு நிதி நிறுவனமான தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகமானது இதை அறிமுகப் படுத்தி உள்ளது.

## ஹீங் சாகுபடி

- சி.எஸ்.ஐ.ஆர்-இமாலய உயிரிமூலங்கள் பயிற்சி நிறுவனம் (பாலம்பூர்) என்ற ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், இந்திய இமயமலைப் பகுதியில் ஹீங்கை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
- லாஹூல் பள்ளத்தாக்கிலுள்ள இமாச்சலப் பிரதேசத்தின் குவாரிங் கிராமத்தில் இதன் முதல் செடி சமீபத்தில் நடப்பட்டது.
- அசாஃபோடிடா (Asafoetida) அல்லது ஹீங் செடியானது ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் வளரும் ஒரு தாவரமாகும்.
- ஹீங் ஆனது இந்தியாவில் பயிரிடப் படுவதில்லை.
- ஹீங் தற்போது உஸ்பெகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரானில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது.
- இது இந்தியாவில் மிகவும் பிரபலமானது. மேலும் இது இந்தியாவில் சமையலில் பயன்படுத்தப் படுகிறது.

## ஊரக இந்தியாவில் ஊட்டச்சத்து உணவைப் பெறும் நிலை

- இது சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி மையப் பொருளாதார அறிஞரான கல்யாணி ரகுநாதன் மற்றும் இன்ன பிறரால் மேற்கொள்ளப் பட்ட ஒரு ஆய்வாகும்.
- இந்த ஆய்வானது ஒரு நாளைய உணவின் மதிப்பு ரூ.45 (வயது வந்தோருக்கு ரூ.51) என்று கணக்கிடுகின்றது.

- இந்த ஆய்வின்படி, ஊரகப் பகுதியில் வாழும் 4 இந்தியர்களில் மூவர் ஊட்டச்சத்து மிக்க ஒரு உணவைப் பெறுவதில்லை.

## முதலாவது தொகுதி பெண் விமானிகள்

- இந்தியக் கடற்படையானது கொச்சியில் உள்ள டிரோனியர் விமானத்தில் முதலாவது பெண் விமானிக் குழுவைப் பணியில் சேர்த்துள்ளது.
- இது இந்தியக் கடற்படையின் தெற்குக் கடற்படைக் கட்டுப்பாட்டகத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- தளபதி திவ்யா சர்மா, தளபதி சிவரங்கி மற்றும் தளபதி சுபாங்கி சுவரூப் ஆகியோர் இந்த 3 பெண் விமானிகள் ஆவர்.
- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இந்திய வரலாற்றில் முதன்முறையாக, பெண் விமானிகள் இந்தியக் கடற்படையின் வானூர்திப் பிரிவில் பார்வையாளர்களாக பணி புரியத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இவர்களுக்கு கொச்சியில் உள்ள ஐஎன்எஸ் கருடா என்ற கப்பலில் "பார்வையாளர்களாக" பயிற்சி நிறைவு செய்த பின்பு "கிளை அலுவலர்" (Wings) என்ற பட்டம் வழங்கப் பட்டுள்ளது.

## இ-தார்த்தி புவியியல் தளம்

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அவர்கள் இந்தத் தளத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தத் தளமானது மேலாண்மைத் தகவல் அமைப்பின் வரைபடம் மற்றும் குத்தகைத் திட்டங்களை ஒருங்கிணைக்க உள்ளது.
- இது புவியியல் தகவல் அமைப்பைப் பயன்பாட்டில் இயலச் செய்திட வழிவகை செய்கின்றது.

## இந்தியச் சுற்றுலாப் புள்ளிவிவரம்

- சுற்றுலா அமைச்சகமானது சமீபத்தில் இந்தியச் சுற்றுலாப் புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது.
- அந்த அறிக்கையின்படி, உத்தரப் பிரதேசம் நாட்டிலேயே அதிக அளவில் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது.
- உத்தரப் பிரதேசத்தை அடுத்து தமிழ்நாடும் ஆந்திரப் பிரதேசமும் இதில் உள்ளன.
- தாஜ்மஹால் மற்றும் இந்தியா கேட் ஆகியவை உள்நாட்டுச் சுற்றுலாவிற்கான முக்கிய இடங்களாகும்.
- கேரளா, ராஜஸ்தான் மற்றும் ஜம்மு-காஷ்மீர் ஆகியவை அதிக எண்ணிக்கையிலான அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்த இதர மாநிலங்களாகும்.
- அதிக சுற்றுலாப் பயணிகளின் முதல் ஐந்து மூல நாடுகள் வங்கதேசம், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இலங்கை மற்றும் கனடா ஆகியவையாகும்.
- வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு இந்தப் பட்டியலில் முதலிடம் வகிக்கின்றது.
- தமிழ்நாட்டை அடுத்து மகாராஷ்டிராவும் உத்தரப் பிரதேசமும் உள்ளன.

## இந்தியாவில் சராசரி வாழ்நாள் கால அளவு

- இந்தியாவில் 1992 ஆம் ஆண்டில் 59.6 ஆக இருந்த சராசரி வாழ்நாள் கால அளவானது 2019 ஆம் ஆண்டில் 70.8 ஆக அதிகரித்துள்ளது.
- கேரளாவானது அதிக சராசரி வாழ்நாள் கால அளவைக் கொண்டுள்ளது.
- அம்மாநிலத்தில் சராசரி வாழ்நாள் கால அளவானது 77.3 ஆண்டுகளாக அதிகரித்து உள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் சராசரி வாழ்நாள் கால அளவு 66.9 ஆண்டுகளாகும்.
- இந்தியாவில் இறப்புகளுக்கான முதல் ஐந்து காரணிகள் காற்று மாசுபாடு, உயர் இரத்த அழுத்தம், புகையிலையின் பயன்பாடு, மோசமான உணவு மற்றும் உயர் இரத்த சர்க்கரையாகும்.
- சமீபத்தில் இது லான்செட் மருத்துவ அறிக்கையால் வெளியிடப் பட்டது.

## நான்காவது இந்திய ஆற்றல் மன்றம்

- "CERAWeek" என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்திய ஆற்றல் மன்றத்தை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ஐஎச்எஸ் மார்கிட் என்ற அமைப்பால் நடத்தப்படும் இந்த மன்றமானது 4வது ஆண்டாக நடத்தப் படுகின்றது.
- இது உலகம் முழுவதும் உள்ள ஆற்றல் தொழிற்துறைக்கு ஒரு தனித்துவ வாய்ப்பினை வழங்குகின்றது.
- இந்த மன்றமானது உலக அளவில் மற்றும் இந்திய அளவில் ஆற்றல் உலகிற்கு முன்பு என்ன உள்ளது என்பது குறித்து விவாதிக்கின்றது.

## தில்லி பல்கலைக்கழகத் துணைவேந்தர் இடைநீக்கம்

- தில்லிப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரான யோகேஷ் தியாகி அவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கிய ஒரு ஆணையின் மூலம் இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளார்.
- மேலும் குடியரசுத் தலைவர் அவர்கள், கல்வித் துறை அமைச்சகத்தினால் இவர் மீது சுமத்தப்பட்ட "தவறான நடத்தை" மற்றும் "பணியில் கடமை தவறுதல்" ஆகியவை குறித்து இவர் மீது விசாரணை நடத்த அனுமதியும் வழங்கியுள்ளார்.
- யோகேஷ் தியாகி அவர்கள் 2016 ஆம் ஆண்டு மார்ச் 10 அன்று தில்லி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப் பட்டார்.

## ஜம்மு காஷ்மீரில் நிலம்

- மத்திய உள்துறை அமைச்சகமானது ஜம்மு காஷ்மீரில் வேளாண் நிலத்தைத் தவிர எந்தவொரு நிலத்தையும் இந்தியக் குடிமக்கள் வாங்க அனுமதிக்கும் ஒரு புதிய விதிமுறையை அறிவித்துள்ளது.
- இந்தப் புதிய அறிவிக்கையின் கீழ், முதல் முறையாக ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவரின் மனைவி தற்பொழுது ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவராகவே கருதப் படுவார்.
- இதற்கு முன்பு, நிரந்தரக் குடியிருப்பு அட்டை வைத்துள்ளவர்களின் மனைவிமார்கள், அவருக்கு நிகராக கருதப் பட்டனர், ஆனால் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவர்களாக அவர்கள் கருதப்பட வில்லை.
- ஜம்மு காஷ்மீரில் 10 ஆண்டுகளாகப் பணியாற்றும் மத்திய அரசு அதிகாரிகளின் குழந்தைகள் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவர்களாகவே கருதப் படுவார்கள்.

- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 அன்று, ஜம்மு காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து அளிக்கும் இந்திய அரசியலமைப்பின் சரத்து 370 நீக்கப்பட்ட பின்பு, மறுசீரமைப்புச் சட்டமானது அப்போதைய ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை “ஜம்மு காஷ்மீர்” மற்றும் “லடாக்” என்ற இரு ஒன்றியப் பிரதேசங்களாகப் பிரித்துள்ளது.
- பழங்குடியினர் அல்லாத மக்கள் அல்லது வெளியாட்கள் 6வது அட்டவணைப் பகுதியின் கீழ் எந்தவொரு நிலப்பகுதியையும் வாங்க முடியாது.
- 6வது அட்டவணையானது இந்திய அரசியலமைப்பின் சரத்து 244ன் கீழ் அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகியவற்றில் வசிக்கும் பழங்குடியினப் பகுதிகளின் மீதான நிர்வாகத்திற்காக சில விதிமுறைகளைக் கொண்டுள்ளது.

## அருணாச்சல பிரதேசத்தில் அரசுக் காப்பீட்டுத் திட்டம்

- மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது அரசுக் காப்பீட்டுத் திட்டத்தை முதன்முறையாக அருணாச்சலப் பிரதேசத்திற்கு நீட்டித்துள்ளது. இது நவம்பர் 1, 2020 முதல் அமலுக்கு வருகிறது.
- இந்தத் திட்டத்தில், 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை வேலைக்கு அமர்த்தும் அருணாச்சலப் பிரதேசத்தின் பாபம் பரே என்ற பகுதியில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளும், அரசு காப்பீட்டுச் சட்டம் 1948 என்ற சட்டத்தின் கீழ் பயனை அடைவதற்குத் தகுதி பெறும்.
- மாதத்திற்கு ரூ.21,000 ஊதியம் பெறும் நபர்கள் மற்றும் ரூ.25,000 வரை ஊதியம் பெறும் மாற்றுத் திறனாளிகள் அனைவரும் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைவர்.

## பால் உற்பத்தியின் மீதான சான்றுகள்

- கிமு 2500 ஆம் ஆண்டில் சிந்து சமவெளி நாகரிகத்தில் பால் உற்பத்தி நடைமுறையில் இருந்தது என்பது முதல் முறையாக அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளது.
- இதுவே பால் உற்பத்தியைப் பற்றிய ஒரு தொன்மையான ஆதாரமாகும்.
- குஜராத்தில் அமைந்துள்ள கோட்டாடா பட்லியின் தொல்பொருள் தளத்தில் கண்டெடுக்கப் பட்ட மட்பாண்டங்களின் எச்சங்களை மூலக்கூறு வேதியியல் பகுப்பாய்வின் அடிப்படையில் ஆய்வு செய்த பின்னர் இந்த முடிவுகள் கிடைத்து உள்ளன.
- 2020 ஆம் ஆண்டானது சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப் பட்ட 100 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கிறது.



# சர்வதேசச் செய்திகள்

## பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த அமைச்சரவை வட்டமேசை சந்திப்பு

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் காணொலி முறையில் நடத்தப்பட்ட பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த அமைச்சரவை வட்டமேசை சந்திப்பில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.
- இந்தச் சந்திப்பானது சீனாவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தச் சந்திப்பானது "2020 ஆம் ஆண்டிற்கு அப்பால் பல்லுயிர்ப் பெருக்கம் : பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்குமான பகிர்ந்தளிக்கப்பட்ட எதிர்காலத்தைக் கட்டமைத்தல்" என்பது குறித்து நடத்தப்பட்டது.
- உயிரியல் பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த ஒப்பந்தத்தின் 15வது பங்காளர்கள் மாநாடானது 2021 ஆம் ஆண்டில் சீனாவின் குன்மிங்கில் நடத்தப்பட உள்ளது.

## பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த ஐக்கிய நாடுகள் சந்திப்பு

- பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த ஐக்கிய நாடுகள் சந்திப்பானது செப்டம்பர் 30 ஆம் தேதியில் நடத்தப் பட்டது.
- இந்த ஆண்டு இந்தச் சந்திப்பானது 'நீடித்த வளர்ச்சிக்கான பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த விரைவு நடவடிக்கை' என்பது குறித்து நடத்தப்பட்டது.

## SCO வெளியுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பு

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO - Shanghai Cooperation Organization) வெளியுறவுத் துறை அமைச்சர்களின் சந்திப்பானது ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் நடத்தப் பட்டது.
- 8 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள SCO அமைப்பில் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பில் இந்தியா முழு உறுப்பினராக கலந்து கொள்வது இது மூன்றாவது முறையாகும்.
- SCO ஆனது ரஷ்யா, சீனா, கிர்கிஸ்தான் குடியரசு, கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிபர்களினால் 2001 ஆம் ஆண்டில் ஷாங்காய் நகரில் நடைபெற்ற மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் 2005 ஆம் ஆண்டில் இந்தக் குழுவில் பார்வையாளர்களாக சேர்க்கப்பட்டன.
- இந்த 2 நாடுகளும் 2017 ஆம் ஆண்டில் இந்தக் குழுவில் முழு உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டன.



## உலகளாவிய பாலின எதிர்வினைக் கண்காணிப்பகம்

- கோவிட் – 19 உலகளாவிய பாலின எதிர்வினைக் கண்காணிப்பகமானது ஐக்கிய நாடுகள் பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- இது நாடுகளின் பாலின அடிப்டையிலான வன்முறை, செலவற்றச் சுகாதார நலத்தைச் ஆதரித்தல் மற்றும் பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பு ஆகிய 3 பிரிவுகளின் கீழ் ஆய்வு நடத்தியுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 8 நாடுகளில் 1 நாடு மட்டுமே கோவிட் – 19 நோய்த் தொற்றுத் தாக்கத்திலிருந்து பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
- 135 நாடுகளில் 71% அளவு பாலின அடிப்படையிலான வன்முறையைக் கையாள்வது குறித்து கவனம் செலுத்துகின்றன.
- பாலின அடிப்படையிலான வன்முறையைக் களைவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் ஐரோப்பா முன்னணியில் உள்ளது. இங்கு 32% அனைத்து வன்முறைத் தடுப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளன.
- வட அமெரிக்கக் கண்டமானது பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட அதிக எண்ணிக்கையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்கு அடுத்து ஆப்பிரிக்கா இது குறித்து அதிக அளவிலான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.
- ஐரோப்பாவானது செலவற்ற சுகாதார நலத்தைச் செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ளது. இது இந்தக் கண்காணிப்பு அறிக்கையில் 49% அனைத்து செலவற்ற சுகாதார நலங்களைக் கொண்டுள்ளன.

## சர்வதேச ஆற்றல் பாதுகாப்புக் கருத்தரங்கு 2020

- சமீபத்தில் சர்வதேச ஆற்றல் பாதுகாப்புக் கருத்தரங்கு – 2020 ஆனது உலகத் தீவிரவாத எதிர்ப்பு ஆணையத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இது தீவிரவாதம் குறித்து தேசியப் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய மனச் சான்று ஆகிய விவகாரங்கள் மீதான விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக பொது நலன் சார்ந்த தனிநபர்களினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற கொள்கை வகுக்கும் நிறுவனமாகும்.

## பசு வதை மீதான தடை

- இலங்கை அரசானது அந்நாட்டில் பசு வதையைத் தடை செய்யும் பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- எனினும் அந்த நாட்டில் மாமிசம் உண்பவர்களுக்குப் பயனளிப்பதற்காக மாட்டு இறைச்சியை இறக்குமதி செய்ய அந்த நாடு முடிவு செய்துள்ளது.

## ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 75வது அமர்வு

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 75வது அமர்வானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 15-30 வரை காணொலி முறையில் நடத்தப்பட்டது.
- இது துருக்கியின் வோல்கன் போஸ்கிர் என்பவரின் தலைமையின் கீழ், நியூயார்க் நகரிலிருந்து அமெரிக்காவினால் நடத்தப்பட்டது.

- இந்த அமர்வின் கருத்துரு, "நமக்குத் தேவையான எதிர்காலம், நமக்குத் தேவையான ஐக்கிய நாடுகள், பல்தரப்பிற்கான நமது கூட்டு உறுதிப்பாடுகளை உறுதி செய்தல், திறன் வாய்ந்த பல்தரப்பு நடவடிக்கையின் மூலம் கோவிட் – 19 தொற்றை எதிர்கொள்தல்" என்பதாகும்.
- இந்த அமர்வின்போது, ஐக்கிய நாடுகளின் 75வது நினைவு தினத்தைக் குறிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 அன்று ஒரு சிறப்பு நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த நிகழ்வானது "நமக்குத் தேவையான எதிர்காலம், நமக்குத் தேவையான ஐக்கிய நாடுகள், பல்தரப்பிற்கான நம்முடைய கூட்டு உறுதிப்பாட்டை உறுதி செய்தல்" என்ற கருத்துருவின் கீழ் நடத்தப்பட்டது.
- ஐக்கிய நாடுகளின் 75வது நினைவு தினத்தைக் குறிப்பதற்கான ஒரு பிரகடனமானது தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுதல், பன்மைவாதத்தை சீர்திருத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, கோவிட் – 19 கொள்ளை நோய் போன்ற சவால்களை எதிர் கொள்வதற்கான தயார் நிலை ஆகியவற்றிற்கான நடைமுறைகளை வலுப்படுத்துவதற்காக வேண்டி நடத்தப்பட்ட உயர்மட்டக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

UN75 2020 AND BEYOND | SHAPING OUR FUTURE TOGETHER

## ஆர்மீனியா – அசர்பைஜான் பிரச்சினை

- நகோர்னோ-காராபாக் பகுதி மீதான ஆர்மீனியா-அசர்பைஜான் ஆகியவற்றிற்கிடையேயான நிலப் பிரச்சினையானது கடும் தாக்குதல்களுடன் மீண்டும் தொடங்கியுள்ளது.
- ஆர்மீனியா மற்றும் அசர்பைஜான் ஆகியவை டிரான்ஸ்காகசியா அல்லது தெற்கு காகசியாவின் ஒரு பகுதியாகும்.
- இது ஏறத்தாழ, கடந்த 40 ஆண்டுகளாக நகோர்னோ காராபாஹ் பகுதி மீதான நிலப் பிரச்சினை காரணமாக மூடப்பட்டுள்ளது.
- நகோர்னோ-காராபாஹ் பகுதியானது 95% மக்கள் தொகையாக ஆர்மீனிய இன குடிமக்களைக் கொண்டுள்ளது.
- இது அந்தக் குடிமக்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால் இது சர்வதேச அளவில் அசர்பைஜானின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தப் பிரச்சினையானது முதன்முதலில் 1988 ஆம் ஆண்டில் தொடங்கியது. அதற்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் மிகப்பெரிய அளவில் மனித உரிமை விதிமீறல்கள், கடுமையான அகதிப் பிரச்சினைகள் ஆகியவற்றை அது ஏற்படுத்தியது.
- இதனைத் தொடர்ந்து, ஆர்மீனியா நாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத நகோர்னோ – காராபாஹ் குடியரசு ஆகியோரினால் 1994 ஆம் ஆண்டில் பிஸ்கேக் நெறிமுறை எனப்படும் ஒரு தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தமானது கையெழுத்து இடப்பட்டது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை.
- பிஸ்கேக் நெறிமுறையானது கிர்கிஸ்தானின் தலைநகரான பிஸ்கேக்கில் 1994 ஆம் ஆண்டில் மே 05 அன்று கையெழுத்திடப்பட்டது.

- நாகோர்னோ – காராபாஹ் பகுதியானது சர்வதேச அளவில் அசர்பைஜானின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப் பட்டாலும் இது ஆர்மீனியா குடிமக்களால் கட்டுப்படுத்தப் படுவதன் காரணமாக பிரச்சினைக்குரியதாக உள்ளது.




## போங்கோசாகர் மற்றும் கார்பெட் கடற்படைப் பயிற்சி

- இந்தியக் கடற்படை மற்றும் வங்கதேசக் கடற்படை ஆகியவற்றிடையேயான இருதரப்புப் பயிற்சியின் 2வது பதிப்பான “போங்கோசாகர்” என்ற பயிற்சியானது வங்காள விரிகுடாவின் வடக்குப் பகுதியில் தொடங்கியது.
- போங்கோசாகர் பயிற்சியில், இரு நாடுகளைச் சேர்ந்த கப்பல்களும் கடற்படை வீரர்களின் பரிமாணங்கள் மற்றும் ஹெலிகாப்டர் நடவடிக்கைகள் போன்ற கடல் மேற்பரப்பு நடவடிக்கைகளில் கலந்து கொண்டன.
- போங்கோசாகர் பயிற்சியின் முதலாவது பதிப்பானது 2019 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- இந்தப் பயிற்சியின் இந்த வருடத்திய பதிப்பானது முஜிப் பார்சோ எனப்படுகின்ற அதாவது பங்கபந்து ஷேக் முஜிபுர் ரகுமானின் 100வது பிறந்த தினத்தின் போது நடத்தப் படுவதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.
- இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கு இடையேயான ஒருங்கிணைந்த கண்காணிப்புச் சேவையானது 2018 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இந்த 2 பிரிவுகளும் சர்வதேசக் கடல்சார் எல்லைக் கோட்டிற்கு அருகில் கூட்டுக் கண்காணிப்பை மேற்கொண்டன.

## பெண்கள் குறித்த 4வது உலகக் கருத்தரங்கின் 25வது நினைவு தினம்

- 2020 ஆம் ஆண்டில், உலக சமூகமானது பெண்கள் குறித்த 4வது உலகக் கருத்தரங்கின் 25வது நினைவு தினத்தையும் பெய்ஜிங் பிரகடனம் மற்றும் செயல்பாட்டுத் தளம் (1995) ஏற்றுக் கொள்ளப் பட்டதையும் குறிக்கின்றது.
- 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சீனாவின் பெய்ஜிங்கில் ஐக்கிய நாடுகளால் நடத்தப்பட்ட கருத்தரங்கிற்கான பெயர் “பெண்கள் குறித்த 4வது உலகக் கருத்தரங்கு : சமத்துவம், வளர்ச்சி மற்றும் அமைதிக்கான நடவடிக்கை” என்று வைக்கப் பட்டது.
- இந்தக் கருத்தரங்கில், உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்கள் செயல்திட்ட நடவடிக்கைக்கான பெய்ஜிங் தளம் எனப்படும் உலகளாவிய சட்டப்படியான சமத்துவத்தை அடைவதற்காக ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டன.

- பெண்கள் குறித்த முதலாவது உலகக் கருத்தரங்கானது 1975 ஆம் ஆண்டில் மெக்சிகோ நகரில் நடத்தப் பட்டது. இதற்கு அடுத்து இந்த கருத்தரங்கு கோப்பன்ஹேகன், நைரோபி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.




## நியூ கலிடோனியா வாக்கெடுப்பு

- சமீபத்தில் பிரெஞ்சுப் பிரதேசமான நியூ கலிடோனியா ஆனது பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காக வேண்டி நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் அதற்கு எதிராக வாக்களித்து உள்ளது.
- இந்த வாக்கெடுப்பானது நொவ்மியா ஒப்பந்தம் எனப்படும் 1998 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒரு காலணியாதிக்க நீக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- நியூ கலிடோனியா என்பது தென்மேற்கு பசிபிக் கடலில் அமைந்துள்ள பிரான்சின் ஒரு சிறப்புப் பிரதேசம் மற்றும் ஒரு தீவுக் கூட்டமாகும்.
- அங்கு கணக்ஸ் என்ற பூர்வ குடிமக்கள் மொத்த மக்கள் தொகையில் 39% ஆக உள்ளனர். மேலும் அங்கு ஐரோப்பியக் குடியிருப்பாளர்கள் (கேல்டோச்சஸ்) 27% என்ற அளவில் உள்ளனர்.
- நியூ கலிடோனியா ஆனது தனது பூர்வகுடி கணக்ஸ் மக்கள் மற்றும் ஐரோப்பியர்கள் ஆகியோருக்கிடையே மிகப்பெரிய பிளவைக் கொண்டுள்ளது. அங்கு கணக்ஸ் மக்கள் விடுதலைக்கு ஆதரவாகவும் ஐரோப்பியர்கள் அந்த விடுதலைக்கு எதிராகவும் உள்ளனர்.

***வரலாறு***

- நியூ கலிடோனியா பகுதியானது பிரிட்டனைச் சேர்ந்த கடற் பயணியான ஜேம்ஸ் குக் என்பவரால் 1774 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது 1853 ஆம் ஆண்டில் பிரான்சுடன் இணைக்கப்பட்டது.
- 1946 ஆம் ஆண்டில், நியூ கலிடோனியாவானது ஒரு அயல்நாட்டுப் பிரதேசமாக உருவெடுத்தது.
- 1953 ஆம் ஆண்டு வாக்கில், பிரெஞ்சுக் குடியுரிமையானது பூர்வ குடி என்ற பாகுபாடு இல்லாமல், அனைத்து நியூ கலிடோனியா மக்களுக்கும் வழங்கப் பட்டு உள்ளது.



## கோவிட் – 19 நோய்த் தடுப்பு மருந்து சோதனைக்காக வேண்டி இந்தியா + 5

- ❖ புத்தாக்கத்திற்கான கொள்ளை நோய்த் தடுப்புத் தயார் நிலையின் மீதான கூட்டிணைவின் (CEPI - Coalition of Epidemic Preparedness for Innovation) உலகளாவிய முன்னெடுப்பானது 6 ஆய்வகங்களை அடையாளம் கண்டுள்ளது.
- ❖ பிரிட்டன், நெதர்லாந்து, இத்தாலி, கனடா, வங்க தேசம் மற்றும் இந்தியா ஆகிய 6 நாடுகளில் இந்த ஆய்வகங்கள் உள்ளன.
- ❖ இந்தியாவின் THSTI ஆய்வகமானது CEPI-ன் உலகளாவிய அமைப்பின் கீழ் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- ❖ THSTI என்பது உருமாற்றம் கொண்ட சுகாதார அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையமாகும்.
- ❖ இது உயிரித் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி மையமாகும்.

***CEPI***

- ❖ இதன் தலைமையகம் நார்வேயில் அமைந்துள்ளது.
- ❖ இது புதிதுபுதிதாக அதிகரித்து வரும் தொற்று நோய்களுக்கு எதிராக ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் தடுப்பு மருந்துகளை மேம்படுத்துவதற்கு வேண்டிய நிதியினை அளிப்பதற்காக நன்கொடைகளைப் பெற்றுத் தரும் ஒரு அமைப்பாகும்.
- ❖ CEPI ஆனது உலக சுகாதார அமைப்பின் "முன்னுரிமைச் செயல்திட்ட நோய்களின்" (Blueprint Priority Diseases) மீது கவனம் செலுத்துகின்றது.

## சிட்வி துறைமுகம் – மியான்மர்

- ❖ இந்தியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மியான்மரில் உள்ள ரகைன் மாகாணத்தில் அமைந்துள்ள சிட்வி துறைமுகத்தைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு வேண்டிப் பணியாற்றி வருகின்றன.
- ❖ இந்தத் துறைமுகமானது தென்கிழக்கு ஆசியாவிற்கான இந்தியாவின் நுழைவு வாயிலாகப் பார்க்கப் படும் கலாடான் பல்முனையப் போக்குவரத்துத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ❖ இது ரகைன் மாகாணத்தின் தலைநகரான சிட்வியில் 2016 ஆம் ஆண்டில் இந்தியாவினால் கட்டப்பட்டுள்ள ஒரு ஆழ்கடல் நீர்த் துறைமுகமாகும்.
- ❖ இந்தத் துறைமுகமானது இந்தியாவின் நிலத்தால் சூழப்பட்டுள்ள வடகிழக்குப் பகுதியை மிசோரம் வழியாக வங்காள விரிகுடாவுடன் இணைக்கின்றது.



## ஒரு நாள் பிரதமர்

- 16 வயது நிரம்பிய அவா முர்டோ என்பவர் "பெண்கள் அதிகாரமளிப்பு" என்ற ஒரு திட்டத்திற்காக வேண்டி பின்லாந்து நாட்டின் ஒரு நாள் பிரதமராகப் பதவியேற்றார்.
- இது பாலினச் சமத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் அமைப்பின் சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தின் ஒரு பகுதி ஆகும்.
- சன்னா மரின் என்பவர் பின்லாந்து நாட்டின் தற்போதைய பிரதமர் ஆவார். உலகின் மிக இளம் வயதுப் பிரதமர்களில் ஒருவராகவும் இவர் திகழ்கிறார்.

## "சாம்பல்" நிறப் பட்டியலில் பாகிஸ்தான்

- உலகளாவிய தீவிரவாத நிதிக் கண்காணிப்பு அமைப்பான நிதியியல் நடவடிக்கை படைக் குழுவானது (FATF - The Financial Action Task Force) பாகிஸ்தான் நாட்டை "சாம்பல் நிறம்" என்ற பட்டியலில் வைக்க முடிவு செய்துள்ளது.
- இது அந்த நாடு எல்இடி (LeT) மற்றும் ஜெஇஎம் (JeM) போன்ற தீவிரவாதக் குழுக்களுக்கான நிதி ஓட்டத்தைச் சரிவர கண்காணிக்கத் தவறியுள்ளது என்று கூறி உள்ளது.
- இந்த முடிவானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக காணொலி வாயிலாக நடத்தப்பட்ட FATF-ன் மூன்றாவது மற்றும் இறுதி அமர்வின் போது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த முழு அமர்வானது சீனாவின் தலைமையில், அதாவது ஜியாங்மின் லியூ என்பவரது தலைமையில் நடைபெற்றது.
- FATF-ன் ஆசியப் பசிபிக் குழுவானது பாகிஸ்தானை அதன் "மேம்படுத்தப்பட்ட தொடர் கண்காணிப்பு" (Enhanced Follow-up) பட்டியலில் மீண்டும் வைத்துள்ளது.

## "சிறந்த ஆய்வக நடைமுறையின்" (GLP) துணைத் தலைவர் பதவி

- இந்தியாவானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பின் (OECD - Organisation for Economic Co-operation and Development) பணிக் குழுவின் "GLP" என்ற நடைமுறையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- GLP என்பது தொழிற்துறை இரசாயனங்கள், மருத்துவ-வேளாண் இரசாயனங்கள், ஒப்பனைப் பொருட்கள், உணவு / தீவனப் பொருட்கள் மற்றும் மருத்துவச் சாதனங்கள் போன்ற பல்வேறு இரசாயனங்கள் குறித்து ஏற்படுத்தப்படும் பாதுகாப்புத் தரவை உறுதி செய்வதற்காக OECDயினால் மேம்படுத்தப்பட்ட ஒரு தர அமைப்பாகும்.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று தேசிய GLP இணக்கக் கண்காணிப்பு ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பன்னாட்டு சூரிய சக்திக் கூட்டணியின் மூன்றாவது கூட்டம்

- சமீபத்தில் பன்னாட்டு சூரிய சக்திக் கூட்டணியின் மூன்றாவது கூட்டமானது இணைய வழியில் நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தில் இந்தியாவும் பிரான்சும் மீண்டும் தலைமையாகவும் இணைத் தலைமையாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டன.
- இதில் விஸ்வேஸ்வரய்யா விருதானது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் ஜப்பானுக்கும், ஐரோப்பா மற்றும் இதர பிற பிராந்தியங்களுள் நெதர்லாந்துக்கும் வழங்கப் பட்டது.

- பன்னாட்டு சூரிய சக்திக் கூட்டணியின் நான்கு பிராந்தியங்களில் ஒவ்வொன்றிலும் உள்ள அதிகபட்ச மிதக்கும் சூரிய சக்தித் திறன் கொண்ட நாடுகளை இது அங்கீகரிக்கிறது.
- கல்பனா சாவ்லா விருதுகள் சூரிய ஒளி ஆற்றல் துறையில் பணிபுரியும் விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கின்றன.
- திவாகர் விருதானது மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காகச் செயல்பட்டு வரும் நிறுவனங்கள் மற்றும் நாட்டில் சூரிய சக்தியின் பயன்பாட்டை அதிகப்படுத்தும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

## ரஷ்யா மற்றும் பெலாரஸ் மீது தடை

- எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு விஷம் கொடுத்ததற்காக ரஷ்யா மீது தடை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக் கொண்டுள்ளது.
- இத்தடை உத்தரவு பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியால் தொடங்கப் பட்டது.
- நவல்னி என்பவர் ரஷ்யாவில் ஒரு ஊழல் தடுப்புப் புலனாய்வாளராக இருந்தார்.
- ரஷ்ய அதிபரான விளாடிமிர் புடினின் முக்கிய அரசியல் எதிர்ப்பாளர் இவராவார்.
- வேதியியல் ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பானது, நவல்னி அவர்கள் நோவிசோக் நெர்வ் ஏஜென்ட் (Novichok nerve agent) என்பதன் மூலமாக தாக்கப் பட்டதாக உறுதிப் படுத்தியுள்ளது.
- நோவிசோக் நெர்வ் ஏஜென்டானது, நரம்புகள் உறுப்புகளுக்குச் செய்திகளை மடைமாற்றும் முறையை சீர்குலைக்கிறது.

## இரண்டாம் உலகப் போர் குண்டு "Tall boy"

- ஒரு மிகப்பெரிய இரண்டாம் உலகப் போர் குண்டானது போலந்து நாட்டின் கடற்படையினால் நடத்தப்பட்ட ஒரு பிரத்தியேகப் பயிற்சியின் போது நீருக்கடியில் வெடித்தது.
- 5 டன் எடை கொண்ட இந்த குண்டு "Tall boy" என்று பெயரிடப்பட்டுள்ளது. இது "நிலநடுக்க குண்டு" என்றும் அறியப்படுகின்றது.
- இது 1945 ஆம் ஆண்டில் நாஜி அணியின் போர்க் கப்பல் மீதான தாக்குதலில் பிரிட்டிஷ் ராயல் விமானப் படையால் வீசப்பட்டது.
- இந்தக் குண்டானது போலந்தின் வடமேற்கில் நாஜி ஜெர்மனியின் முன்னாள் பகுதியான Swinoujscie என்ற இடத்திற்கு மிக அருகில் 2019 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.




## இரண்டாவது கோவிட் – 19 தடுப்பு மருந்து – ரஷ்யா

- ரஷ்ய அதிகாரிகள் "எபிக்வேக் கொரானா" (EpicVacCorona) எனப்படும் ஒரு புதிய கோவிட்-19 தடுப்பு மருந்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளனர்.
- இது பெப்டைடை அடிப்படையாகக் கொண்ட ஒரு தடுப்பு மருந்தாகும்.
- ஸ்புட்னிக் V என்பது இரஷ்யாவினால் மேம்படுத்தப்பட்ட முதலாவது தடுப்பு மருந்தாகும்.
- தற்பொழுது இந்தியாவில் 3 கோவிட் – 19 தடுப்பு மருந்துகள் சோதனையில் உள்ளன.
- கோவேக்சின், சைகோவ் டி மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத் தடுப்பு மருந்துகள் ஆகியவை அந்தத் தடுப்பு மருந்துகளாகும்.

## கற்பழிப்பு வழக்குகளுக்கான மரண தண்டனை குறித்த அவசரச் சட்டம்

- வங்க தேசத்தில் சமீபத்தில் நிகழ்ந்த பாலியல் வன்கொடுமைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட நாடு தழுவிய போராட்டங்களைத் தொடர்ந்து அந்நாடானது அக்குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவதற்கான ஒரு அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான அடக்குமுறை தடுப்புச் சட்டம் என்பதன் மீதான ஒரு அவசரச் சட்டமாகும்.
- தற்பொழுதிலிருந்து வன்புணர்விற்கான மிக அதிகபட்ச தண்டனை மரண தண்டனையாகும். இதற்கு முன்பு இதுவரையில் அதிகபட்ச தண்டனையாக கடுமையான ஆயுள் தண்டனை இருந்தது.

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தில் இடங்கள்

- சமீபத்தில் 47 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தில் (UNHRC - UN Human Rights Council) 15 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது.
- UNHRC-ன் இடங்களுக்கு பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- பாகிஸ்தான் தற்பொழுது 2018 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் UNHRC-ல் பணியாற்றி வருகின்றது.
- இந்த மறுதேர்தலின் மூலம், பாகிஸ்தான் நாடானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் அடுத்து 3 ஆண்டுகளுக்கு அதன் உறுப்பினராகப் பணியாற்றும்.
- 2006 ஆம் ஆண்டு UNHRC ஏற்படுத்தப் பட்டதிலிருந்து அந்நிறுவனத்திற்கு பாகிஸ்தான் தேர்ந்தெடுக்கப்படுவது இது 5வது முறையாகும்.

## மறைகுறியாக்கப்பட்ட சமூக ஊடகச் செய்திகளுக்கு எதிரான பிரச்சாரம்

- இந்தியா மற்றும் இதர 7 நாடுகள் ஒரு முனையில் இருந்து மற்றொரு முனை வரையில் மறைகுறியிடப்பட்ட (end-to-end encryption) சமூக ஊடகச் செய்திகளுக்கு எதிரான ஐக்கிய இராஜ்ஜியத்தின் தலைமையிலான பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது முகநூல் போன்ற சமூக ஊடகங்களினால் அனுப்பப்படும் மறைகுறியாக்கப் பட்ட செய்திகளுக்கு எதிராக மேற்கொள்ளப் படுகின்றது.
- ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் இந்தியா ஆகியவை கனடா, அமெரிக்கா, நியூசிலாந்து, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றுடன் இணைந்துள்ளன.

- இந்த நடவடிக்கையானது ஜப்பான் மற்றும் இந்தியாவை இணைப்பதற்காக நுண்ணறிவுப் பிரச்சினைகள் குறித்த உலகளாவியக் கூட்டிணைவான "5 கண்கள்" என்ற பெயரில் 5 நாடுகளைக் கொண்ட ஒரு குழுவின் விரிவாக்கத்தைக் குறிக்கின்றது.
- ஒரு முனையில் இருந்து மற்றொரு முனை வரையிலான மறைகுறியாக்கம் என்பது தகவல் தொடர்பில் உள்ள பயனாளர்கள் மட்டுமே இந்த செய்திகளைப் படிக்கக் கூடிய ஒரு தகவல் தொடர்பு அமைப்பாகும்.
- இது தகவல்தொடர்பு வழங்குநர்கள், இணையச் சேவை வழங்குநர்கள் மற்றும் தொடர்புச் சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட சாத்தியமான இடையீட்டாளர்களைச் செய்தி தொடர்பில் தலையிடுவதில் இருந்து தடுக்கின்றது.

## ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ் என்பதன் மீதான கட்டமைப்பு

- சர்வதேச நிதியியல் சேவை மைய ஆணையமானது (IFSCA - International Financial Services Centres Authority) ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸிற்கான (Regulatory Sandbox) ஒரு கட்டமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ் ஆனது கிப்ட் நகரில் அமைந்துள்ள IFSCற்குள் செயல்பட உள்ளது.
- இதன் நோக்கம் நிதியியல் சேவையில் பொறுப்புமிக்க புத்தாக்கத்தை ஊக்குவித்தல், செயல்திறன் ஊக்குவித்தல், வாடிக்கையாளர்களுக்குப் பயன்களை வழங்குதல் ஆகியனவாகும்.

## ஜி20 Y20 மாநாடு

- சமீபத்தில் 3 நாட்கள் கால அளவுள்ள ஜி20 அமைப்பின் இளையோர் 20 பங்கேற்புக் குழுவின் (Y20) காணொலி மாநாடானது நடைபெற்றது.
- இதில் பங்கேற்பாளர்கள் ஆண்டு முழுவதும் Y20 பிரதிநிதிகள் கவனம் செலுத்துகின்ற மற்றும் ஜி20 அமைப்பின் பணியுடன் ஒத்துப் போகும் வகையில் ஒரு வித்தியாசமான முக்கியக் கருத்துரு குறித்து விவாதித்தனர்.
- இளையோர் மேம்பாடு (அக்டோபர் 15 வியாழன்) எதிர்காலப் பொருத்தம் (வெள்ளி 16, அக்டோபர்), உலகக் குடியுரிமை (சனி 17, அக்டோபர்) ஆகியவை இதில் தினசரிக் கருத்துருக்களாகும்.
- ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கத்தை வென்றவரான உசைன் போல்ட் ஒரு காணொலி வாயிலாக கேள்வி மற்றும் பதில் மூலம் உலகம் முழுவதும் உள்ள இளைஞர்களிடம் உரையாற்றினார்.

## SCO அமைப்பின் தலைமை வழக்குரைஞர்களின் 18வது சந்திப்பு

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மீது தலைமை வழக்குரைஞர்களின் 18வது சந்திப்பானது காணொலி வாயிலாக நடத்தப்பட்டது.
- இந்தியாவின் சார்பாக சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா இதில் கலந்து கொண்டார்.
- இந்தச் சந்திப்பின் போது, அனைத்து வழக்குரைஞர்களும் ஊழலைத் தடுத்தல் மற்றும் எதிர்த்துப் போராடுதல், பரஸ்பர சட்ட உதவி மற்றும் ஒழுங்குமுறைச் சட்டங்களின் பரிமாற்றம் ஆகியவற்றின் ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்புக் கொண்டனர்.
- இந்தியா 2021 ஆம் ஆண்டில் SCO (Shanghai Cooperation Organization) அமைப்பின் தலைமை வழக்குரைஞர்கள் மாநாட்டை நடத்த உள்ளது.

## இலங்கையின் 20வது சட்டத்திருத்தம்

- இலங்கையின் அரசியலமைப்பில் 20வது சட்டத் திருத்தமானது சமீபத்தில் நிறைவேற்றப் பட்டது.
- இது நிர்வாக ரீதியாக குடியரசுத் தலைவருக்கு விரிவான அதிகாரங்களையும் அதிக சட்டப் பாதுகாப்பையும் தரக் கூடியதாக எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தத் திருத்தம் இலங்கையின் 19 ஆவது சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறது.
- பதிலுக்கு இந்தப் புதிய சட்டத் திருத்தமானது பிரதமரின் பங்கை வெறும் பெயரளவாகக் குறைக்கிறது.

## ஊழல் தடுப்புச் செயற்குழு

- சவூதி அரேபியாவானது ஜி20 ஊழல் தடுப்புச் செயற்குழுவின் முதலாவது அமைச்சர்கள் கூட்டத்தை இணைய வழியில் நடத்துகிறது.
- ஜி20 உச்சி மாநாடானது "நிதிச் சந்தைகள் மற்றும் உலகப் பொருளாதாரம் குறித்த உச்சி மாநாடு" என்று முறைப்படியாக அழைக்கப்படுகிறது.
- இது மிகப்பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளைச் சேர்ந்த தலைவர்களின் ஒரு வருடாந்திர கூட்டமாகும்.
- மொத்தத்தில், ஜி20 உறுப்பினர் நாடுகள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85%, சர்வதேச வர்த்தகத்தில் 75% மற்றும் உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு ஆகியவற்றைக் கொண்டு உள்ளன.




## இந்தியா மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு

- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ) தலைவராக இந்தியா 35 ஆண்டுகளுக்குப் பிறகு பொறுப்பேற்றுள்ளது.
- ஐ.எல்.ஓ அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாகும்.
- வெர்சயில்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் 1919 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு 1946 ஆம் ஆண்டில் ஒரு தனிச் சிறப்பு அமைப்பாக மாறியது.

## SLINEX 20

- வருடாந்திர இந்தியக் கடற்படை மற்றும் இலங்கைக் கடற்படையின் இருதரப்பு கடல் பயிற்சியான SLINEX-20 ஆனது இலங்கையின் திருகோணமலையில் நடைபெற்றது.
- SLINEX பயிற்சியின் முந்தையப் பதிப்பானது 2019 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் இந்தியாவின் விசாகப் பட்டினத்தில் நடத்தப்பட்டது.
- இது இந்தியாவின் அண்டைநாடுகளுக்கு முதன்மை கவனம் (neighbourhood first) என்ற கொள்கை மற்றும் 'பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி' (Security and Growth for all the Region) என்பது பற்றிய பிரதமர் மோடியின் பார்வை ஆகியவற்றுடன் உடன்படுகிறது.

## சூடான் மற்றும் இஸ்ரேல்

- இஸ்ரேலை அங்கீகரிப்பதில் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பஹ்ரைனுடன் இணைந்த மூன்றாவது நாடு சூடான் ஆகும்.
- அமெரிக்காவானது சமீபத்தில் இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பஹ்ரைனுக்கும் இடையிலான ஒப்பந்தங்களுக்கு நடுவாண்மை வகித்தது.
- ஐக்கிய அரபு அமீரகத்திற்குப் பிறகு, இஸ்ரேலுடன் ஒரு நட்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நான்காவது நாடாக பஹ்ரைன் ஆனது.
- இஸ்ரேலை அங்கீகரித்த முதல் நாடு எகிப்து ஆகும்.
- எகிப்தைத் தொடர்ந்து, ஜோர்டான் இஸ்ரேலை அங்கீகரித்தது.




Note: Israel has diplomatic relations with more than 160 countries
Sources: Israel Ministry of Foreign Affairs, WSJ and news reports

## எதிர்காலப் பணிகள் அறிக்கை – 2020

- சமீபத்தில் உலகப் பொருளாதார மன்றாமானது இந்த அறிக்கையின் 3வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- தானியங்கிப் போக்கும் இயந்திரங்கள் மற்றும் மனிதர்களுக்கிடையேயான பணிப் பகிர்வின் புதிய போக்கும் அடுத்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பின் மீதான இடையூறிற்கு ஒரு முக்கியக் காரணமாக இருக்கும்.

## 44வது OECD சர்வதேச இடப்பெயர்வு கண்ணோட்ட அறிக்கை

- இந்தியாவானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பில் உள்ள நாடுகளுக்கு (Economic Co-operation and Development-OECD) அதிக எண்ணிக்கையிலான இடப்பெயர்வாளர்கள் செல்லுதல் மற்றும் அந்த நாடுகளின் குடியுரிமையைப் பெறுதல் ஆகியவற்றின் அடிப்படையில் 2வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் சீனா முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இந்தத் தரவானது OECDயின் வருடாந்திர சர்வதேச இடப்பெயர்வு கண்ணோட்ட அறிக்கையின் 2020 ஆம் ஆண்டுப் பதிப்பில் OECD அமைப்பால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த நாடுகளுக்கு மனித மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் 3வது மிகப்பெரிய நாடாக ரோமானியா உருவெடுத்துள்ளது.

## உணவுத் தட்டின் விலை 2020

- ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டமானது உலக உணவு தினக் கொண்டாட்டத்தின் போது உலகம் முழுவதும் உள்ள உணவுத் தட்டின் விலையை ஒப்பிட்டு, ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் தெற்கு சூடான் முதல் இடத்தில் உள்ளது. இங்கு வாடிக்கையாளர் தமது உணவிற்காக அதிகம் செலவிட வேண்டியுள்ளது.
- இந்தியா பண விகிதத்தின் அடிப்படையில் 28வது இடத்தில் உள்ளது.
- நியூயார்க் மக்கள் உணவிற்காகச் செலவிடும் 0.6% விகிதத்தை ஒப்பிடுகையில், சராசரியாக ஒரு இந்தியர் உணவுத் தட்டிற்காக தமது ஒரு நாள் வருமானத்தில் 3.5% விகிதத்தைச் செலவிடுகின்றனர்..




## தொழிலாளர் சந்தையில் பாலின இடைவெளி குறித்த ஐக்கிய நாடுகள் அறிக்கை

- "உலகின் பெண்கள் : போக்குகள் மற்றும் புள்ளியியல் தகவல்கள்" என்று தலைப்பு கொண்ட இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் – டெசா (UN DESA) அமைப்பினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- இந்த அறிக்கையின் படி, உலகம் முழுவதும் பாலினச் சமத்துவமானது இன்னமும் எட்டப் படாத ஒரு இலக்காக உள்ளது. எந்தவொரு நாடும் இதனை இன்னும் அடைய வில்லை.
- இந்த அறிக்கையானது 1995 ஆம் ஆண்டில் பெய்ஜிங் பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான தளம் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு, கடந்த 25 ஆண்டுகளாக பெண்களின் உலகளாவிய நிலை குறித்த ஒரு மெய்மை நிலைமையை அளிக்கின்றது.

- தொழிலாளர் சந்தையில் பாலின இடைவெளியானது 1995 ஆம் ஆண்டில் இருந்த அதே நிலையில் இன்றும் தொடர்கின்றது.
- சந்தையில் தொழிலாளர் சக்தியின் பங்கேற்பில் மிகப்பெரிய பாலின இடைவெளியானது முதன்மையான பணியாற்றும் வயதில் (24-54) காணப் படுகின்றது.
- இந்தியாவில், தொழிலாளர் சந்தையில் ஆண்-பெண் தொழிலாளர் சக்தியின் பங்கேற்பு விகிதமானது 50% என்ற விருப்ப இலக்கிற்கு மாறாக 2019 ஆம் ஆண்டில் 29.80 ஆக உள்ளது.

## நிதியியல் வறுமையில் உள்ள குழந்தைகளின் மீதான உலகளாவிய கணிப்பு : ஒரு தகவல் புதுப்பிப்பு

- சமீபத்தில் உலக வங்கிக் குழுமம் மற்றும் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெப்) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பகுப்பாய்வானது கோவிட் – 19 நோய்த் தொற்றுப் பரவலுக்கு முன்னர் 6 குழந்தைகளில் 1 குழந்தை அல்லது 356 மில்லியன் குழந்தைகள் கடுமையான வறுமையில் உள்ளதாக கணித்துள்ளது.
- ஆப்பிரிக்காவின் துணை – சஹாராப் பிராந்தியமானது மிகவும் குறைவான அளவிலான ஒரு சமூகப் பாதுகாப்பு நிலைமையைக் கொண்டுள்ளது.
- தெற்கு ஆசியாவில் 5ல் 1 குழந்தை உயிர் வாழ்வதற்குப் போராடுவதாக இந்த அறிக்கை கூறுகின்றது.

## உலக செல்வவள அறிக்கை 2020

- சமீபத்தில் கிரெடிட் சூய்ஸ் என்ற அமைப்பானது 2020 ஆம் ஆண்டின் உலக செல்வ வள அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இதன்படி, இந்தியர்களின் சராசரிச் செல்வமானது 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இறுதியில் அதிகரித்துள்ளது.
- ஆனாலும் இந்தியாவில் செல்வ வளத்தில் ஏற்றத் தாழ்வு அதிகப்படியாக காணப் படுகின்றது.
- இந்தியாவில் குடும்பச் செல்வ வளமானது சொத்துகள் மற்றும் இதர நிலபுலன் சொத்துகளால் அதிக அளவில் நிர்வகிக்கப் படுகின்றது.

## ஆசிய வலிமைக் குறியீடு 2020

- இந்தியாவானது 2020 ஆம் ஆண்டின் ஆசிய வலிமைக் குறியீட்டில் 11வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் அமெரிக்காவானது மிகவும் சக்தி வாய்ந்த ஒரு நாடாக தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் அதற்கு அடுத்து சீனா இரண்டாவது இடத்திலும் ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- இந்தக் குறியீடு சிட்னியில் உள்ள லோயி என்ற நிறுவனத்தினால் வெளியிடப் பட்டு உள்ளது.

## மனித இயக்கம், பகிரப்பட்ட வாய்ப்புகள்

- இது ஐக்கிய நாடுகள் வளர்ச்சி அறிக்கையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இது "2009 ஆம் ஆண்டு மனித வளர்ச்சி அறிக்கை மற்றும் இலக்கு நோக்கிச் செல்ல வேண்டிய தூரம்" எனப்படும் அறிக்கையின் மீதான ஒரு ஆய்வாகும்.
- இது இடப்பெயர்வின் உண்மைத் தன்மை என்பதையும் அது எவ்வாறு தற்பொழுது மனித வளர்ச்சியுடன் தொடர்பு கொள்கின்றது என்பதையும் உள்ளடக்கியுள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில் மனித இடப்பெயர்வு இயக்கமானது அதிக அளவிற்கு அதிகரித்துள்ளது.
- இந்த அதிகரிப்பானது வெனிசுலா, வடக்கு நைஜீரியா, மியான்மர் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் நிலவும் சூழ்நிலைகள் மற்றும் இதர காரணங்களால் உந்தப் பட்ட மனித இயக்கத்தால் நிகழ்த்தப் பட்டுள்ளது.

## சகாரோவ் பரிசு 2020

- ஐரோப்பிய ஒன்றியமானது தனது முதன்மையான மனித உரிமைகள் பரிசை பெலாரஸின் எதிர்க்கட்சித் தலைவரான ஸ்விட்டலனா டிஸ்கானோஸ்கயா என்பவருக்கு வழங்கியுள்ளது.
- இது அந்நாட்டு அதிபர் அலெக்சாந்தர் லுகாசென்கோவின் நீண்ட கால கொடுங்கோல் ஆட்சிக்கு எதிரான அவரது மிக நீண்ட நெடிய போராட்டத்திற்காக வேண்டி அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- லுகாசென்கோ பெருமளவில் மோசடி செய்து அதிபர் தேர்தலில் 6வது முறையாக வெற்றி பெற்றுள்ளதாக பெரும்பாலும் கூறப் படுகின்றது.
- சகாரோவ் பரிசானது மனித உரிமைகள் மற்றும் சுதந்திரமான சிந்தனைகள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக வேண்டி தங்களது வாழ்வை அர்ப்பணித்த தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை கௌரவிக்கின்றது.

## பெனி பாலம்

- பெனி பாலம் என்பது இந்தியாவில் திரிபுராவில் உள்ள சப்ரூமை வங்க தேசத்தில் உள்ள ராம்கார்க்குடன் இணைக்கும் 1.8 கிலோ மீட்டர் நீளம் கொண்ட பாலமாகும்.
- இந்தப் பாலமானது பெனி நதியின் மீது கட்டப்பட உள்ளது.
- இது நிறைவு பெற்றால், இந்தப் பாலமானது அசாமைத் தவிர இந்தியாவின் கிழக்கு மாநிலங்களை அதன் மேற்கு மாநிலங்களுடன் இணைக்கும் ஒரே நிலவழிப் பாதையாக இருக்கும்.



- இந்தப் பாலத்தின் அடிக்கல் ஆனது 2015 ஆம் ஆண்டின் ஜுன் மாதத்தில் இந்தியப் பிரதமர் மோடி மற்றும் வங்க தேசம் பிரதமர் ஷேக் ஹசினா அவர்களால் நடப் பட்டது.
- பெனி நதியானது தெற்கு திரிபுரா மாவட்டத்தில் உற்பத்தியாகின்றது.
- இது சப்ரூம் நகரின் வழியாகப் பாய்ந்து, வங்க தேசத்தில் நுழைகின்றது.

## சாம்சங் நிறுவனத்தின் தலைவர் லீ குன்-ஹீ

- சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் தலைவரான லீ குன்-ஹீ (78) அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- இவரது தந்தை லீ பைங்-சுல், 1938 ஆம் ஆண்டில் சாம்சங் நிறுவனத்தைத் துவங்கி வைத்தார்.
- இப்போது சாம்சங் நிறுவனமானது உலகில் அதிகளவில் திறன்பேசிகள், தொலைக் காட்சிகள் மற்றும் நினைவகச் சில்லுகளை (memory chips) உற்பத்தி செய்கிறது.
- இன்று இந்த நிறுவனத்தின் ஒட்டு மொத்த வருவாயானது தென் கொரியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கிற்குச் சமமாகும்.
- தென் கொரியாவானது தற்போது உலகின் 12வது மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாகும்.



## ஐக்கிய நாடுகள் உலக காலநிலை நடவடிக்கை விருது

- உலக இமயமலைப் பயண அமைப்பானது (Global Himalayan Expedition - GHE) சூரிய ஒளி ஆற்றல் ஊக்குவிப்பின் மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடியதற்காக ஐக்கிய நாடுகள் கால நிலை நடவடிக்கை விருதை வென்றுள்ளது.
- GHE என்பது தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாவை வலுப்படுத்தும் ஒரு இந்தியக் கழகமாகும்.
- இது தொலைதூர கிராமக் குழுக்கள் சூரிய ஒளியை அடைவதற்கு ஊக்கம் அளிக்கின்றது.



## ஐக்கிய நாடுகள் 75வது ஆண்டின் நினைவாக நினைவு அஞ்சல் தலை

- தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள அஞ்சல் துறையானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் 75வது நினைவு தினத்தின் நினைவாக அஞ்சல் தலை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- இதற்கு முன்பு அஞ்சல் துறையானது ஐக்கிய நாடுகளின் 9வது, 40வது மற்றும் 50வது நினைவு தினங்களில் முறையே 1954, 1985, 1995 ஆகிய ஆண்டுகளில் இது போன்ற அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது.




## 2020 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த பணியில் அமர்த்துபவர்

- ஃபோர்ப்ஸ் வெளியிட்டுள்ள 'உலகின் சிறந்த பணியில் அமர்த்துபவர் 2020' என்ற பட்டியலின் கீழ் இந்திய பொதுத்துறை நிறுவனங்களின் பட்டியலில் தேசிய அனல் மின் கழக நிறுவனமானது முதலிடத்தில் உள்ளது.
- 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில், தேசிய அனல் மின் கழக நிறுவனத்திற்கு இந்திய அரசானது மகாரத்னா தகுதியை வழங்கியது.
- இது 1975 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிறுவனம் ஆகும்.

## அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஐ.நா.வின் ஒப்பந்தம்

- அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஐ.நா.வின் ஒப்பந்ததிற்குச் சுமார் 50 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.
- ஹோண்டுராஸிடமிருந்து 50வது ஒப்புதல் பெறப் பட்டதாக ஐ.நா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- இது அந்த ஒப்பந்தத்தை தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.
- அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஒப்பந்தமானது அணு ஆயுதக் குறைப்புக்கான முதலாவது பலதரப்பு மற்றும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தமாகும்.
- இது அணு ஆயுதங்களைப் பயன்படுத்துதல், மேம்படுத்துதல், உற்பத்தி செய்தல், சோதனை செய்தல், நிலைப்படுத்தி வைத்தல், இருப்பு வைத்தல் மற்றும் அதைக் கொண்டு அச்சுறுத்தல் செய்தல் ஆகியவற்றைத் தடை செய்கிறது.
- இது 193 உறுப்பினர்கள் அடங்கிய ஐ.நா பொதுச் சபையால் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 122 நாடுகளின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா போன்ற அணுசக்தி கொண்ட முக்கிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தன.
- பாகிஸ்தான், வட கொரியா மற்றும் இஸ்ரேலுடன் சேர்ந்து இந்தியாவும் இந்த ஒப்பந்தத்திற்கு வாக்களிப்பதைத் தவிர்த்தன.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் முதலாவது கிடங்குப் பொருட்கள் நிதிச் செயலி

- எச்டிஎப்சி வங்கியானது இந்தியாவின் முதலாவது கிடங்குப் பொருட்கள் நிதிச் செயலியைத் தொடங்கியுள்ளது.
- இந்தச் செயலியானது வாடிக்கையாளர்கள் வங்கிக் கிளைக்கு நேரடியாகச் செல்லாமல் ஆன்லைன் மூலம் பொருட்களைப் பிணையம் வைத்து எளிய முறையில் கடன் பெறுவதற்கு வழிவகை செய்கின்றது.
- இது வேளாண் மதிப்புக் கூட்டிற்கான திறனை மேம்படுத்த உள்ளது.

## காசோலைக்கான நேர்மறை செலுத்து முறை

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve Bank of India) 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியிலிருந்து காசோலைத் துண்டிப்பு முறைக்காக (CTS - Cheque Truncation System) நேர்மறை செலுத்து முறைக்கான தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- RBI ஆனது CTSற்கான நேர்மறை செலுத்து முறையைத் தொடங்க இருக்கின்றது.
- இந்த நேர்மறை செலுத்து முறையானது இந்திய தேசியப் பண வழங்கீட்டுக் கழகத்தினால் மேம்படுத்தப்பட உள்ளது.

### *நேர்மறை செலுத்து முறை*

- காசோலை வழங்குபவர் எஸ்எம்எஸ், கைபேசிச் செயலி, இணையவழி வங்கியியல், அல்லது ஏடிஎம் ஆகியவை மூலம் மின்னணு வழியாக தேதி, பெறுபவரின் பெயர், பெறுபவர் பெறும் தொகை போன்றவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த விவரங்கள் காசோலை மூலம் பணம் வழங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட வேண்டும்.

## நேரடித் தொடர்பற்ற பற்று (Debit) அட்டையை அடிப்படையாகக் கொண்ட பணம் செலுத்தும் வசதி

- ஐடிஎப்சி First வங்கியானது, “சேப் பே” (SafePay) என்ற ஒரு நேரடித் தொடர்பற்ற டெபிட் அட்டையை அடிப்படையாகக் கொண்ட பணம் செலுத்தும் வசதியைத் தொடங்கவுள்ளது.
- இந்தப் பணம் செலுத்தும் வசதியானது அருகாமை தகவல் தொடர்பால் செயல்படும் பிஓஎஸ் (PoS) அல்லது விற்பனை முனையத்தின் மூலம் ஒருவர் தனது திறன்பேசியை அதன்மீது வைத்து அசைப்பதன் மூலம் நேரடித் தொடர்பற்ற பணம் செலுத்துதலானது அனுமதிக்கப் படுகின்றது.

## இந்தியாவின் நடப்புக் கணக்கு உபரி

- இந்தியாவின் நடப்புக் கணக்கு இருப்பானது 2020-21 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 19.8 பில்லியன் டாலர் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.9 சதவீதம்) உபரியைப் பதிவு செய்துள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல்-ஜூன் காலாண்டில் இருந்த 15 பில்லியன் டாலர் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.1 சதவீதம்) பற்றாக்குறையுடன் மாறுபடுகிறது.
- 2020 ஆம் ஆண்டில் ஏப்ரல்-ஜூன் காலத்தின் உபரியானது அதற்கு முந்தைய காலாண்டில் இருந்து 0.6 பில்லியன் டாலருக்கு (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1 சதவீதம்) மேல் அதிகரித்துள்ளது.




## நிதியியல் கொள்கை குழு உறுப்பினர்கள்

- இந்திய அரசானது பொருளாதார வல்லுநர்களான ஜெயந்த் R வர்மா, சசாங்க் பிஹைடு மற்றும் ஆசிமா கோயல் ஆகியோரை நிதியியல் கொள்கைக் குழுவில் (MPC - Monetary Policy Committee) உறுப்பினர்களாக நியமித்துள்ளது.
- தற்போதைய MPC ஆனது நிதியியல் கொள்கைக் கட்டமைப்பு ஒப்பந்தத்தின் இறுதியாக்கத்தைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் ஏற்படுத்தப் பட்டது.
- இந்தக் கட்டமைப்பானது பணவீக்க இலக்கை அறிமுகப்படுத்தியது.
- MPC ஆனது வங்கி விகிதம், ரெப்போ விகிதம், தலைகீழ் ரெப்போ விகிதம், நிதி ஒதுக்கீட்டு விகிதம் போன்ற நிதியியல் கூறுகளைப் பயன்படுத்தி நாட்டிற்கான நிதியியல் கொள்கைகளைக் கட்டமைக்கின்றது.
- இந்தக் கூறுகள் நிதியியல் கொள்கைக் கூறுகள் எனப்படுகின்றன.

## 42வது ஜிஎஸ்டி ஆணையச் சந்திப்பு

- ஜிஎஸ்டி ஆணையமானது இழப்பீடு மீதான கடன் வாங்குதல் தொடர்பான கூறுகளில் ஒருமித்த கருத்து ஏற்படாததால் 42வது சந்திப்பில் எந்த ஒரு முடிவையும் எடுக்கவில்லை.
- ஜிஎஸ்டி ஆணையம் என்பது ஜிஎஸ்டி தொடர்பான விவகாரங்கள் குறித்து மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குப் பரிந்துரைகளை அளிக்கும் சரத்து 279A-ன் கீழ் உருவாக்கப்பட்ட ஓர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்.
- இந்த ஆணையமானது மத்திய நிதித் துறை அமைச்சரால் தலைமை தாங்கப் படுகின்றது. மத்திய வருவாய் துறை இணை அமைச்சர், நிதித்துறை இணை அமைச்சர் மற்றும் அனைத்து மாநிலங்களிலும் உள்ள நிதி அல்லது வரித்துறை அமைச்சர்கள் இதில் உள்ள பிற உறுப்பினர்களாவர்.
- இதன் பரிந்துரைகள் அனைவரையும் கட்டுப்படுத்தும். இதன் முடிவுகள் 75% பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் எடுக்கப் படுகின்றன.

### *முக்கியப் பரிந்துரைகள்*

- ஜிஎஸ்டி இழப்பீட்டு செஸ் வரி விதிப்பானது 2022 ஆம் ஆண்டிற்கு அப்பாலும் நீட்டிக்கப் பட்டுள்ளது.
- 5 கோடிகளுக்கு மேல் விற்றுமுதல் உள்ள வரிசெலுத்துபவர்கள் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இணக்கமானப் பெயரிடல் முறையை (HSN - Harmonised System Nomenclature) அளிக்க வேண்டும்.

## இந்தியாவின் முதலாவது நிதியியல் கட்டுப்பாட்டு மையம்

- Chqbook.com ஆனது இந்தியாவின் முதலாவது நிதியியல் கட்டுப்பாட்டு மையத்தைத் தொடங்கியுள்ளது.
- இது சிறு வர்த்தக உரிமையாளர்களை ஊக்கப்படுத்துவதற்கான ஒரு புதிய கைபேசித் தளமாகும்.
- இது தினசரி நிதியியல் சேவைகளை நிர்வகிப்பதற்கான தீர்வையும் நிதியியல் பொருட்களை அணுகுவதற்கான சேவைகளையும் வழங்க உள்ளது.
- Chqbook.com என்பது நடப்புக் கணக்கு, காட்டா, கடன் வழங்கல், காப்பீடு மற்றும் வெகுமதிகள் ஆகிய 5 கூறுகளின் மூலம் உலகத் தரம் வாய்ந்த நிதியியல் சேவைகளை வழங்கும் சிறு வர்த்தக உரிமையாளர்களுக்கான இந்தியாவின் முதலாவது நியோ வங்கியாகும்.

## சிறப்புத் திருவிழாக் காலக் கடன் சலுகை

- மத்திய அரசானது தனது அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு ஒரே தவணையில் வழங்கப்படும் ரூ.10,000 என்ற ஒரு வட்டி இல்லாத திருவிழாக் கால முன்பணத்தை அறிவித்துள்ளது.
- இது பொருளாதாரத்தில் தேவையை அதிகப்படுத்துவதற்காக வேண்டி நுகர்வோர் செலவிடுதலை அதிகரிப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்த முன்கூட்டிய தொகையான ரூ. 10,000 ஆனது முன்னரே செலுத்தப்பட்ட ஒரு ரூபே அட்டை வடிவில் இருக்கும். இதனை 2021 ஆம் ஆண்டு மார்ச 31 ஆம் தேதிக்குள் பயன்படுத்த வேண்டும்.
- இதனை விற்பனை முனையப் புள்ளியில் மட்டுமே பயன்படுத்த முடியும். இதனைக் கொண்டு ஏடிஎம்-களில் பணம் எடுக்க முடியாது.

## உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2020

- சர்வதேச நாணய நிதியமானது (IMF - International Monetary Fund) சமீபத்தில் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2020 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது "நீண்ட மற்றும் கடினமான ஒரு ஏற்றம்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களில் வெளியிடப் படுகின்றது.

### *சிறப்பம்சங்கள்*

- இந்த அறிக்கையானது இந்தியாவின் பொருளாதாரம் 2020 ஆம் ஆண்டில் 10.3% ஆகக் குறையும் என்று கணித்துள்ளது.
- இந்த வளர்ச்சியானது பிரிக்ஸ் நாடுகளிடையே மிகக் குறைவானதாக இருக்கும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் தனிநபர் வருமான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (Gross Domestic Product - GDP) அடிப்படையில் வங்க தேசத்திற்கு அடுத்த நிலையில் சரிய இருக்கின்றது.
- வங்க தேசமானது டாலர் அடிப்படையில் தனிநபர் வருமான GDPயில் இந்தியாவை முந்த இருக்கின்றது. இது 2020 ஆம் ஆண்டில் 4% என்ற அளவில் $1,888 ஆக உயர இருக்கின்றது.

- இந்தியாவின் தனிநபர் வருமான GDP ஆனது 2020 ஆம் ஆண்டில் 10.5% என்ற அளவில் $1,877 ஆகக் குறைய இருக்கின்றது.
- பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு அடுத்து குறைந்த தனி நபர் வருமான GDPயைப் பதிவு செய்து இந்தியாவானது தெற்கு ஆசியாவில் மூன்றாவது ஏழ்மையான நாடாக உள்ளது.
- வங்கதேசம், பூடான், மாலத்தீவுகள் மற்றும் இலங்கை ஆகிய இதர அனைத்து தெற்கு ஆசிய நாடுகளும் இந்தியாவை முந்தும் நிலையில் இருக்கும்.

## புதிய சிபிஐ-ஐடபிள்யூ தொடர்

- மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தின் தொழிலாளர் பணியகமானது, தொழில்துறை தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டின் (Consumer Price Index for Industrial Workers - CPI-IW) அடிப்படை ஆண்டை 2001 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டாக திருத்தியுள்ளது.
- இது மாறிவரும் நுகர்வு முறையைப் பிரதிபலிக்கும் வகையில் உடல்நலம், கல்வி, பொழுதுபோக்கு மற்றும் பிற இதரச் செலவுகளுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து, அதே நேரத்தில் உணவு மற்றும் பானங்களின் செலவு விகிதத்தைக் குறைத்துள்ளது.
- சில்லறை விலையில் பணவீக்கத்தை அளவிட இது பயன்படுத்தப்படுகிறது.
- இது அரசு ஊழியர்கள் மற்றும் தொழில்துறை ஊழியர்களின் அகவிலைப் படியை (டிஏ) ஒழுங்குபடுத்துவதற்கும், பட்டியலிடப்பட்ட வேலைகளில் குறைந்தபட்ச ஊதிய அளவைத் திருத்துவதற்கும் பயன்படுத்தப் படுகிறது.

## திறந்த நிலை சந்தைச் செயல்பாடுகள்

- வரலாற்றில் முதல் முறையாக ரிசர்வ் வங்கியானது திறந்த நிலை சந்தைச் செயல்பாடுகள் மூலம் (open market operations) மாநில மேம்பாட்டுக் கடன்களை (State Development Loans) வாங்குவதாக அறிவித்துள்ளது.
- பணப்புழக்கத்தை மேம்படுத்துவதற்கும் சரியான விலையை நிர்ணயம் செய்வதற்கும் வேண்டி இது ஒரு "சிறப்புச் செயல்பாடு" என்று பெயரிடப்பட்டு உள்ளது.
- பத்திரங்கள் வாங்கப்படும் தொகை ரூபாய் 10000 கோடிகளாக இருக்கும்.
- மாநிலங்களால் வழங்கப்பட்ட பத்திரங்களை உள்ளடக்கிய மாநில மேம்பாட்டுக் கடன்களின் ஒரு தொகுப்பிற்காக வேண்டி திறந்தநிலை சந்தைச் செயல்பாடுகள் நடத்தப் படும்.

## பிரதம மந்திரி சுவாநிதித் திட்டம்

- நாட்டில் பிரதம மந்திரி சுவாநிதித் திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான கடன்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ள முதலாவது மாநிலம் உத்தரப் பிரதேசம் ஆகும்.
- இதில் இரண்டாவது இடத்தை மத்தியப் பிரதேசம் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்தடுத்த இடங்களில் தெலுங்கானா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இது ஊரக, நகர்ப்புற மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்குப் பயனளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 100 புதிய வன கரிமப் பொருட்கள்

- இந்தியாவின் பழங்குடியினக் கூட்டுறவுச் சந்தையிடல் வளர்ச்சிக் கூட்டமைப்பு நிறுவனமானது (Tribal Cooperative Marketing Development Federation of India-TRIFED)100 புதிய வன கரிமப் பொருட்களை வெளியிட்டுள்ளது.
- அந்தப் பொருட்கள் பின்வருமாறு:
    - இமாச்சலப் பிரதேசத்தின் கின்னூரிலிருந்து தங்க மற்றும் பச்சை நிற ஆப்பிள்கள்.
    - உத்தரகாண்டில் முன்ஞ் தாவரத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கூடைகள் மற்றும் பெட்டிகள்.
    - நீலகிரிப் பழங்குடியினரிடமிருந்து கிராம்பு, விதை கொண்ட புளி, காபித் தூள், யூகலிப்டஸ் எண்ணெய்.
    - ராஜஸ்தானின் மீனா பழங்குடியினரால் உருவாக்கப்பட்ட முகக் கவசங்கள்.
    - மத்தியப் பிரதேசத்தின் புல் மற்றும் கோண்டு பழங்குடியினரால் உருவாக்கப் பட்ட காதா மற்றும் சரண் போன்ற நோய்த் தடுப்பு ஊக்கிகள்.
    - குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசத்திலிருந்து உருவாக்கப்பட்ட பருப்பு வகைகள், ஜாமுன் தூள் மற்றும் கிலோய் தூள்.
    - வட கிழக்கு மாநிலங்களிலிருந்து ஊறுகாய், சிவப்பு அரிசி, பெல் சாறுகள் ஆகியன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இமயமலை சந்திரா தொலைநோக்கியின் 20 ஆண்டுகள்

- இமயமலை சந்திரா தொலைநோக்கியானது லடாக்கில் லேஹ் பகுதியில் ஹான்லே எனுமிடத்தில் இருக்கும் இந்திய வானியல் ஆய்வகத்தில் அமைந்து உள்ளது.
- இது வால்மீன்கள், நட்சத்திரங்களுக்கிடையேயான வெடிப்புகள், வெளிக் கோள்கள், குறுங்கோள்கள் ஆகியவற்றை ஆராயும் சமயத்தில் இரவு நேர வான்வெளியை ஆராய்ந்து வருகின்றது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான மையம், இந்திய வான் இயற்பியல் மையம் ஆகியவற்றிலிருந்துத் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் இணைப்பைப் பயன்படுத்திச் செயல்படுகின்றது.
- இந்தத் தொலைநோக்கி அவற்றிலிருந்துப் பெறப்பட்ட தகவலைப் பயன்படுத்தி 260ற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பிரசுரிக்க உதவியதுடன் தனது 20 ஆண்டுகாலச் செயல்பாட்டையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.



## ஆஸ்ரோசாட்டின் 5 ஆண்டுகள் (ASTROSAT)




- இஸ்ரோவினால் செலுத்தப்பட்ட முதலாவது பல அலைநீள செயற்கைக் கோள் ஆஸ்ட்ரோசாட் ஆகும்.
- இது 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 அன்று ஏவப்பட்டது.
- இது வான் பொருட்களை வெற்றிகரமாகப் படம் பிடிப்பதில் 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- இது நட்சத்திரங்கள், நட்சத்திரத் தொகுப்புகள் "மேகலினிக் மேகங்கள்" எனப்படும் பால்வழி அண்டத்தின் பெரிய மற்றும் சிறிய விண்மீன் திரள்களை ஆய்வு செய்து உள்ளது.
- இது X-கதிர், புற ஊதாக் கதிர், ஒளியியல் நிறமாலைப் பட்டைகளில் வான் பொருட்களை ஆய்வு செய்த முதலாவது அர்ப்பணிக்கப்பட்ட இந்தியத் திட்டமாகும்.
- ஆஸ்ட்ரோசாட்டின் படத் தெளிவுத் திறனானது "கேலக்ஸ்" எனப்படும் நாசாவின் பட தெளிவுத் திறனை விட மூன்று மடங்கு சிறந்ததாகும்.
- ஆஸ்ட்ரோசாட் வெற்றியின் மூலம், வான்வெளியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வகங்களைக் கொண்ட பிரத்தியேக நாடுகளின் பட்டியில் இந்தியாவும் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

## இஸ்ரோவின் வெள்ளிக் கிரக திட்டம்

- பிரெஞ்சு விண்வெளி முகமையான சிஎன்இஎஸ் (விண்வெளி ஆய்வுகளுக்கான தேசிய மையம்) நிறுவனத்தின் பங்கேற்புடன் 2025 ஆம் ஆண்டில் இஸ்ரோ தனது வெள்ளிக் கிரக திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- இந்திய ஆய்வுப் பணியில் ஒரு பிரெஞ்சு விண்வெளிப் பொருளானது (French payload) விண்ணிற்கு அனுப்பப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்தியாவும் பிரான்சும் இஸ்ரோவின் மனித விண்வெளித் திட்டமான ககன்யான் திட்டத்திலும் இணைந்து பணியாற்றி வருகின்றன.




## கேட் கியூ தீநுண்மி

- இரண்டு மனித சீரம் மாதிரிகளில் கேட் கியூ தீநுண்மிக்கு (Cat que virus) எதிரான எதிர்மங்கள் இருப்பதை இந்திய மருத்துவக் குழுவானது கண்டறிந்துள்ளது.
- கேட் கியூ தீநுண்மி ஒரு பொது சுகாதார நோய்க் கிருமியாக மாறக்கூடும் என்பதையும் அது பரவினால் ஒரு கொள்ளை நோய்க்கு வழிவகுக்கும் என்பதையும் இது குறிக்கிறது.
- இது ஆர்த்தோபன்யா தீநுண்மி இனத்தின் சிம்பு வகை தீநுண்மியைச் சேர்ந்ததாகும்.
- இது முதன்முதலில் 2004 ஆம் ஆண்டில் வடக்கு வியட்நாமில் உள்ள கொசுக்களிலிருந்து தனிமைப்படுத்தப் பட்டிருக்கிறது.
- இது சீனாவிலும் பதிவாகி உள்ளது.
- இது ஆர்த்ரோபாட் மூலம் பரவும் தீநுண்மிகள் என்ற பிரிவின் கீழ் வருகிறது.
- ஆர்த்ரோபாட்கள் என்பது பூச்சிகள், சிலந்திகள் போன்ற முதுகெலும்பில்லாத விலங்குகளின் பிரிவாகும்.
- இது பன்றிகள் மற்றும் கியூலெக்ஸ் கொசுக்களில் காணப்படுகிறது.
- காட்டு மைனா போன்ற பறவைகளும் இதன் வாழ்விடமாக செயல்படக்கூடும்.
- கொசுக் கடியின் மூலம் மனிதர்களுக்குத் தொற்று ஏற்படலாம்.
- இது மனிதர்களுக்கு காய்ச்சல், மூளைக்காய்ச்சல் மற்றும் குழந்தை மூளையழற்சி ஆகியவற்றை ஏற்படுத்தும்.

## உலகின் முதலாவது குறுங்கோள் சுரங்க இயந்திர மனிதன்

- சீனாவின் தனியார் நிறுவனமான ஆரிஜின் ஸ்பேஸ் ஆனது 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் உலகின் முதலாவது குறுங்கோள் சுரங்க இயந்திர மனிதனை விண்வெளிக்குச் செலுத்தத் தயாராக உள்ளது.
- இந்த இயந்திர மனிதனானது சீனாவில் உள்ள விண்வெளி ஸ்டார்ட் அப் நிறுவனத்தினால் "குறுங்கோள் சுரங்க இயந்திர மனிதன்" ('Asteroid mining robot') என்று பெயரிடப் பட்டுள்ளது.
- சீனாவின் லாங் மார்ச் தொடர் ஏவு வாகனமானது இந்தக் குறுங்கோள் சுரங்க இயந்திர மனிதனை விண்வெளிக்குக் கொண்டு செல்ல இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது விண்வெளி வளத் தொழிற்துறையில் ஒரு மைல் கல்லாக இருக்கும்.
- மிகச் சிறிய, 30 கிலோ கிராம் எடை கொண்ட இந்தச் செயற்கைக் கோள் ஆனது 500 கிலோ மீட்டர் உயரத்தில் சூரிய ஒத்திசைவுச் சுற்றுவட்டப் பாதையில் நுழைய இருக்கின்றது.
- இந்த இயந்திர மனிதன் எந்தவொரு சுரங்க நடவடிக்கையிலும் ஈடுபடாது. ஆனால் இது தொழில்நுட்பங்களை மட்டுமே ஆய்வு செய்யவுள்ளது.

## பரம் சித்தி (PARAM Siddhi) மீத்திறன் கணினி

- மேம்படுத்தப்பட்ட கணினி வளர்ச்சிக்கான மையமானது (C-DAC - Centre for Development of Advanced Computing) இந்தியாவின் மிகப்பெரிய உயர்-செயல்பாடு கொண்ட கணினி மற்றும் செயற்கை நுண்ணறிவு மீத்திறன் கணினியைச் (HPC-AI - High-Performance Computing and Artificial Intelligence) செயல்பாட்டுக்குக் கொண்டு வர உள்ளது.
- இது "பரம் சித்தி - AI" என்று பெயரிடப்பட்டுள்ளது. இது 210 AI பெட்டாப்ளாப்ஸ் வேகம் கொண்டது.
- இது உலகளாவிய AI மீத்திறன் கணினி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறையில் சிறந்து விளங்கும் முன்னிலை நாடுகளில் இந்தியாவையும் இணைக்கும்.

### *இந்தியாவில் உள்ள இதர மீத்திறன் கணினிகள்*

- முதலாவது மீத்திறன் கணினியானது "பரம் சிவே" ஆகும். இது C-DAC அமைப்பினால் தேசிய மீத்திறன் கணினித் திட்டத்தின் கீழ் கட்டமைக்கப் பட்டு உள்ளது.
- பிரத்தியூஷ் – இது உலகில் 39வது இடத்தைப் பிடித்துள்ளது. இது புனேவின் இந்திய வானிலைக் கல்வி மையத்தில் உள்ளது.
- மிகிர் என்பது உலகில் 66வது இடத்தைப் பிடித்துள்ளது. இது தேசிய நடுத்தர வரம்பு கொண்ட வானிலை முன்னறிவிப்பு மையத்தில் அமைந்துள்ளது.
- InC1 ஆனது 206வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 327வது இடத்தில் உள்ள மீத்திறன் கணினி கல்வி ஆராய்ச்சி மையமானது பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தில் அமைந்துள்ளது.
- iDataplex ஆனது 496வது இடத்தைப் பிடித்துள்ளது.

## சவுரியா ஏவுகணை சோதனை

- இந்தியாவானது அணு ஆயுதத் திறன் கொண்ட சவுரியா ஏவுகணையின் புதிய பதிப்பை ஒடிசாவின் பாலசோரில் வெற்றிகரமாக சோதனை செய்தது.

- புதிய பதிப்பு கொண்ட இந்தச் சவுரியா வகை ஏவுகணையானது செயல்படுத்த எளிதாகவும் தற்பொழுதுள்ள ஏவுகணைகளுடன் ஒப்பிடப்படும் பொழுது இலகுரகத் தன்மையுடையதாகவும் உள்ளது.
- இது இரண்டு நிலை கொண்ட ராக்கெட் ஏவுகணையாகும். இது டிஆர்டிஓ-வினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது மீயொளி வேகம் கொண்ட, நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட ஒரு ஏவுகணையாகும். இதன் வரம்பு 700-1000 கிலோ மீட்டராகும்.

## SMART ஆயுத அமைப்பு

- இந்தியாவானது ஒடிஷாவின் வீலர் தீவிலிருந்து SMART (மீவளிவேகம் கொண்ட ஏவுகணையால் ஆதரவு பெற்ற நீர்மூழ்கிக் குண்டு) என்ற ஒன்றை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- இந்த நிகழ்வானது கடற்கரையோரத்தில் உள்ள கண்காணிப்பு நிலையங்கள் (மின் – ஒளியியல் அமைப்புகள், ரேடார்கள்) மற்றும் கீழ் நிலைக் கப்பல்கள் உள்ளிட்ட தொலைத் தொடர்பு நிலையங்கள் ஆகியவற்றினால் கண்காணிக்கப்பட்டது.
- இது ஒரு நீர்மூழ்கிக் குண்டின் வரம்பிற்கு அப்பால் மேற்கொள்ளப்படும் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் நடவடிக்கைகளுக்காக வேண்டி ஒரு ஏவுகணையால் ஆதரவு பெற்ற இலகுரக நீர்மூழ்கி எதிர்ப்பு நீர்மூழ்கிக் குண்டு அமைப்பாகும்.

## iMedix – தொலைதூர மருத்துவ முறை

- ஐஐடி கரக்பூரின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் iMedix எனப்படும் தொலைதூர மருத்துவ முறையை உருவாக்கியுள்ளனர்.
- இந்த முறையானது மருத்துவ மனையிலிருந்துப் பெறப்படும் சுகாதார நலச் சேவைகளுடன் சேர்த்து வீட்டு நலத்தை ஒன்றிணைக்கின்றது.
- இது மருத்துவரினால் வழங்கப்படும் தொலைதூர ஆலோசனையின் மூலம் நோயாளிகளின் வீடுகளிலேயே அவர்களுக்குத் தீவிர சுகாதார உதவியைப் பெற வழிவகை செய்கின்றது.
- இதனை எந்தவொரு தரமான இணையதளத் தேடல் பொறியின் மூலமும் கைபேசியிலிருந்தும் அணுக முடியும்.

## ருத்ரம் – முதலாவது கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட ஒரு கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது எதிரி ரேடார்கள், தகவல் தொடர்பு இடங்கள் மற்றும் இதர ரேடியோ அதிர்வெண் உமிழும் இலக்குகள் போன்ற எந்தவொரு கதிர்வீச்சு உமிழும் சாதனத்தையும் இலக்கு வைத்து, அதைக் கண்டறியும் திறன் கொண்ட ஒரு கதிர் வீச்சு எதிர்ப்பு ஏவுகணையாகும்.
- உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட முதலாவது கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணை இதுவாகும்.

- இது தனது செலுத்தப்படும் நிலையைப் பொருத்து 200 கிலோ மீட்டர் வரையிலான வரம்பு நிலை கொண்டதாக உள்ளது.
- இது 500 மீட்டர் முதல் 15 கிலோ மீட்டர் வரையிலான உயரத்திலிருந்து செலுத்தப்படும் திறன் கொண்டதாகும். மேலும் இதன் வேகம் 0.6 மாக் முதல் 2 மாக் வரையிலான (0.6 to 2 mach) வேகமாகும்.




## ரஸ்டம் II ஆளில்லா விமானச் சோதனை

- டிஆர்டிஓ ஆனது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட "ரஸ்டம் 2" என்ற தனது ஆளில்லாக் குட்டி விமானத்தை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது நடுத்தர உயர வரம்பு கொண்ட, நீண்ட செயல்பாடு கொண்ட, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு கண்காணிப்பு வகையிலான ஆளில்லாக் குட்டி விமானம் ஆகும்.
- இந்த ஆளில்லாக் குட்டி விமானமானது தனது திட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்து ஆயுதங்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.
- இது துவார ரேடார், சூழ்நிலை சார்ந்த விழிப்புணர்வு அமைப்பு மற்றும் மின்னணு நுண்ணறிவு அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இந்த ஆளில்லாக் குட்டி விமானமானது இஸ்ரேலின் ஆளில்லா வான்வெளி விமானமான ஹெறான் என்பவற்றில் இருக்கும் அம்சங்களுடன் பொருந்துமாறு வடிவமைக்கப் பட்டுள்ளது.



## தமிழக மாணவர்களின் நானோ செயற்கைக்கோள்

- தமிழ்நாட்டின் கருர் மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்களால் உருவாக்கப் பட்ட இந்தியா சாட் (India Sat) என்ற சோதனை செயற்கைக்கோளானது நாசாவால் ஏவப்பட உள்ளது.
- இது ஜூன் மாதத்தில் துணை சுற்றுப்பாதையில் அதன் ஆராய்ச்சி ஏவுகலன் 7 (sounding rocket 7) மூலம் விண்ணில் செலுத்தப் படும்.
- அந்த மூன்று மாணவர்கள் தாந்தோன்றிமலையைச் சேர்ந்த எம். அட்னான், நாகம்பள்ளியைச் சேர்ந்த எம். கேசவன் மற்றும் தென்னிலையைச் சேர்ந்த வி.அருண் ஆகியோர் ஆவர்.
- கியூப்ஸ் இன் ஸ்பேஸ் (Cubes in Space) திட்டத்தால் நடத்தப்பட்ட உலகளாவிய போட்டியின் ஒரு பகுதியாக வடிவமைக்கப்பட்ட பல செயற்கைக்கோள்களை இந்தச் செயற்கைக்கோள் மாதிரியானது விஞ்சியுள்ளது.
- இது உலகின் மிகச்சிறிய மற்றும் இலகுவான செயற்கைக்கோள் எனக் கருதப் படுகிறது, இது வலுவூட்டப்பட்ட கிராபீன் பாலிமர் (reinforced graphene polymer) மூலம் 3 செ.மீ அளவு மற்றும் 64 கிராம் எடையைக் கொண்டுள்ளதாகும்.
- இது சூரிய சக்தி ஆற்றலால் இயங்கும். மேலும் இது 13 உணர்விகள் பொருத்தப் பட்டு இருபதுக்கும் மேற்பட்ட அளவுருக்களை (parameters) கணக்கிட பயன்படுகிறது.
- ஈர்ப்பு விசை, காந்த சக்தி, அண்டக் கதிர்வீச்சு ஆகியவை இதைப் பயன்படுத்தி அளவிடப்பட வேண்டிய அறிவியல் அளவுருக்கள் ஆகும்.
- பூமியிலிருந்து விண்வெளிக்கு சமிக்ஞைகளை அனுப்பவும் பெறவும் இந்த செயற்கைக் கோளிடம் வானொலி அதிர்வெண் தொடர்பு (Radio frequency communication) உள்ளது என்று கூறப்படுகிறது.



## சோயுஸ் எம்எஸ் – 17 விண்கலம்

- ரஷ்யாவின் சோயுஸ் எம்எஸ் – 17 விண்கலமானது 64வது விண்வெளிப் பயணத் திட்டத்தின் கீழ் விண்வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி நிலையத்தை (ISS - International Space Station) நோக்கிச் சென்றுள்ளது.
- அந்த வீரர்கள் கத்திலீன் "கேட்" ரூபின்ஸ் மற்றும் விண்வெளி வீரர்களான செர்கே ரைசிகோவ் மற்றும் செர்கே குட்-ஸ்வெர்க்கோவ் ஆகியோர் ஆவர்.
- இந்த 3 விண்வெளி வீரர்களும் விண்வெளி நிலையத்தில் 6 மாதங்கள் தங்கி ஆய்வு செய்யவுள்ளனர்.
- இது விண்வெளி நிலையத்திற்கு ரூபின்ஸின் 2வது பயணம் ஆகும். 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ISSற்கு சோயுஸ் எம்எஸ் விண்கலம் மேற்கொண்ட தனது முதல் பயணச் சோதனையின் மூலம் இவர் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டார்.



## பிரித்வி – II ஏவுகணையின் இரவு நேரச் சோதனை

- இந்தியாவானது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட அணு ஆயுதத் திறன் கொண்ட பிரித்வி – II ஏவுகணையின் இரவு நேரச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- இந்தச் சோதனையானது ஒடிசாவின் பாலசோரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- பிரித்வி – II ஆனது நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஒரு வகை ஏவுகணையாகும்.
- இந்த ஏவுகணையானது 25-350 கிலோ மீட்டர் வரம்பு கொண்டது.
- இது 500 கிலோ கிராம் முதல் 1000 கிலோ கிராம் வரை அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.

## கோதுமைத் தவிடு கடல்சார் பாக்டீரியக் கூட்டமைப்பு

- தேசியக் கடல்சார் தொழில்நுட்ப நிறுவனமானது சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான ஒரு கச்சா எண்ணெய் உயிரிவழிச் சீராக்க செயல்முறைத் தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளது.
- இது வேளாண் கழிவு பாக்டீரியச் செல்களில் உள்ள அசையாத் தன்மை கொண்ட கடல்சார் நுண்ணுயிரியான கடல் தவிட்டின் கூட்டமைப்பைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்டுள்ளது.
- இது கோதுமைத் தவிடு கடல்சார் பாக்டீரிய கூட்டமைப்பைப் பயன்படுத்தி கச்சா எண்ணெய்யை உடைக்க மற்றும் அதனைச் சீரற்றதாக மாற்ற முடியும் என்பதை உறுதி செய்துள்ளது.

## பெபிகொலம்போ விண்வெளிக் கலம் வெள்ளியைக் கடந்தது

- சமீபத்தில் புதன் கோளிற்கு அனுப்பப்பட்ட பெபிகொலம்போ விண்வெளிக் கலமானது வெள்ளியைக் கடந்து சென்றது.
- ஐரோப்பிய ஜப்பானிய நாடுகளின் இந்த ஆய்வுத் திட்டமானது 17,000 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வெள்ளிக் கோளின் கறுப்பு மற்றும் வெள்ளைப் புகைப்படத்தை எடுத்துள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டு அக்டோபரில் செலுத்தப்பட்டது. இது புதன் கோளிற்கு 7 ஆண்டு பயணக் காலத்தில் சென்று அடையுமாறு அனுப்பப் பட்டுள்ளது.
- இது 2025 ஆம் ஆண்டில் புதனை அடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

- இது புதனை அடைந்த பின்பு, இரண்டாகப் பிரிந்து விடும்.
- இது ஐரோப்பிய விண்வெளி சுற்றுவட்ட பாதைக் கலமான "பெபி"யை விண்ணில் செலுத்துவதற்கு வழி வகுக்கும்.
- இந்த சுற்றுவட்ட பாதைக் கலமானது புதனின் சுற்று வட்டப் பாதையில் நுழையும்
- அதே நேரத்தில் ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் "மியோ" என்ற விண்கலமானது ஒரு குறிப்பிட்ட தொலைவிலிருந்து தரவுகளைச் சேகரித்துக் கொண்டிருக்கும்.
- நாசாவின் மரீனர் 10 என்ற விண்கலமானது 1970களின் மத்தியில் புதன் கோளைக் கடந்து சென்ற முதலாவது விண்வெளிக் கலமாகும்.



## குறுங்கோள் பெனுவில் மாதிரிகள் சேகரிப்பு

- நாசாவின் அரை இயந்திர மனித (ரோபோட்டிக்) விண்வெளிக் கலமான ஓசிரிஸ்-ரெக்ஸ் ஆனது ஒரு குறுங்கோளான பெனுவின் பாறை நிலப் பரப்பைத் தொட்டு உள்ளது.
- இது பூமியிலிருந்து ஏறக்குறைய 330 மில்லியன் கிலோ மீட்டர்கள் தொலைவில், பாறை மற்றும் தூசு மாதிரிகளைச் சேகரிக்கின்றது.
- "தொட்டு விட்டுச் செல்" அல்லது TAG திட்ட நடவடிக்கை என்று அழைக்கப்படுகின்ற இந்தத் துல்லியத் தொழில்நுட்பமானது வரலாற்று ஆய்வுத் திட்டத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றது.
- இதில் சேகரிக்கப் பட்ட எந்தவொரு மாதிரிகளும் 2023 ஆம் ஆண்டு வரை பூமியை வந்தடையாது.
- பெனு என்பது விண்வெளிக் கலம் இதுவரை சுற்றி வராத ஒரு மிகச்சிறிய விண்வெளி அமைப்பாகும் (a smallest celestial body).



## புதிய விண்வெளி மையம் – நேட்டோ

- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது (NATO - North Atlantic Treaty organisation) ஜெர்மனியின் ராமஸ்டெய்னில் ஒரு புதிய விண்வெளி மையத்தை அமைக்கவுள்ளது.
- இந்த மையமானது விண்வெளி ஆய்விற்கு ஓர் ஒத்துழைப்பு மையமாகப் பணியாற்ற இருக்கின்றது.
- இந்த மையமானது NATO அமைப்பின் சரத்து 5ன் கீழ் அடிப்படையில் அமைக்கப் படவுள்ளது.
- நேட்டோ நாடுகளினால் ஏறத்தாழ 24 செயற்கைக்கோள் புவி நிலையங்கள் தற்பொழுது கட்டுப்படுத்தப் பட்டு வருகின்றன.

## நாக் ஏவுகணை

- சமீபத்தில் இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது ராஜஸ்தானில் உள்ள பொக்ரான் துப்பாக்கி சுடுதல் வரம்பில் நாக் என்ற இராணுவ டாங்கிகள் மூலம் எதிரிகளின் இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையின் இறுதி பயனர் சோதனையை மேற்கொண்டது.
- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் மூலம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டது.
- இந்த ஏவுகணை இப்போது ஆயுதப் படைகளில் சேர்வதற்குத் தயாராக உள்ளது.
- இந்தியாவின் மூன்றாம் தலைமுறை டாங்கி எதிர்ப்பு ஏவுகணையான இது அனைத்து வானிலையிலும் செயல்படக் கூடியது ஆகும். மேலும் ஏவப்பட்ட பின் தனது இலக்கை நிர்ணயிக்கும் திறன் கொண்ட இது தானாகவே அதன் இலக்கைத் தொடரும்.
- இது நிலம் மற்றும் விமானம் சார்ந்த தளங்களில் இருந்து ஏவப்படலாம்.




## IOWave 20 பயிற்சி

- இந்தியப் பெருங்கடல் "அலை" (Indian Ocean Wave - IOWave) பயிற்சிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பின்வரும் நிறுவனங்களின் ஒத்துழைப்பாலும் ஒருங்கிணைப்பாலும் நடத்தப் படுகின்றன.
    - யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையேயான கடலியல் ஆணையம்,
    - இந்தியப் பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை மற்றும் தணிப்பு அமைப்பின் அரசுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு ஆணையம் மற்றும்
    - இந்தியப் பெருங்கடல் தகவல் மையம்.
- இந்திய சுனாமி முன் எச்சரிக்கை மையமானது இந்தப் பயிற்சியில் இந்தியாவின் தேசிய சுனாமி எச்சரிக்கை மையமாகவும், முழு இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திற்குமான சுனாமி சேவை வழங்குநராகவும் பங்கேற்றது.

## குழாய் உமிழ்நீர் சுரப்பிகள் (Tubarial salivary glands)

- இவை சமீபத்தில் நெதர்லாந்தில் உள்ள விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப் பட்டன.
- இவை தொண்டையின் மேல் பகுதியின் உள்ளே இருக்கும் உமிழ்நீர் சுரப்பிகளின் ஒரு தொகுப்பாகும்.
- இந்தச் சுரப்பிகள் மூக்கு மற்றும் வாயின் பின்னால் இருக்கும் தொண்டைப் பகுதியை உயவூட்டுகின்றன மற்றும் ஈரப்படுத்துகின்றன (lubricate and moisten).
- புற்றுநோய் சிகிச்சைக்கு இந்தக் கண்டுபிடிப்பு முக்கியமானதாக இருக்கலாம்.
- இப்போது அறியப்பட்ட வரையில், மனிதர்களில் மூன்று பெரிய உமிழ்நீர் சுரப்பிகள் உள்ளன. அவையாவன்
    - நாக்கின் கீழ்புறம்,
    - தாடையின் கீழ்புறம் மற்றும் தாடையின் பின்புறம்,
    - கன்னத்தின் பின்புறம்.




## ஐ.என்.எஸ் கவரட்டி

- இது விசாகப் பட்டினத்தில் இருக்கும் இந்தியக் கடற்படையின் கப்பல் கட்டும்தளத்தில் இருந்து இந்தியக் கடற்படைக்கு அனுப்பப் படவுள்ள ஒரு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பல் ஆகும்.
- இது கொல்கத்தாவின் கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் (Garden Reach Shipbuilders & Engineers) என்ற நிறுவனத்தால் கட்டப்பட்டது ஆகும்.



- இந்தியக் கடற்படையின் கமோர்டா-வகுப்பு போர்க் கப்பல்களின் திட்டம் அல்லது 'திட்டம் 28' (Project 28' or Kamorta-class corvettes) என்ற திட்டத்தின் உள்நாட்டில் கட்டப்பட்ட நான்கு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பல்களுள் இது கடைசியாகும்.
- இந்த திட்டத்தின் கீழ் உள்ள மற்ற மூன்று போர்க் கப்பல்கள் ஐ.என்.எஸ் கமோர்டா (2014), ஐ.என்.எஸ் காட்மட் (2016) மற்றும் ஐ.என்.எஸ் கில்டன் (2017) ஆகியவை ஆகும்.

## "SANT" ஏவுகணை

- இந்தியாவானது ஒடிசாவின் கடற்கரையில் நிலைப்பாட்டு பீரங்கி எதிர்ப்பு (Stand-off-Anti-tank -SANT) ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது இந்திய விமானப் படைக்காக வேண்டி பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் மேம்படுத்தப் பட்டுள்ளது.

## பிரம்மோஸ் ஏவுகணை

- மீயொலி வேக ஏவுகணையான "பிரம்மோஸ்" ஆனது ஐஎன்எஸ் சென்னை என்ற ஒரு கப்பலில் இருந்து சோதித்துப் பார்க்கப்பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது ஐஎன்எஸ் சென்னையிலிருந்து பிரம்மோஸ் ஏவுகணையின் புதிய கடற்படைப் பதிப்பைச் சோதித்துப் பார்த்துள்ளது.
- ஐஎன்எஸ் கப்பல் ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு மறைந்திருந்து தாக்கும் வகை கப்பலாகும்.
- பிரம்மோஸ் ஆனது அரபிக் கடலில் ஒரு இலக்கைத் தாக்கியது.
- இது நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைக் தாக்கி அழிக்கும் ஒரு மீயொலி வேக ஏவுகணையாகும்.
- மீயொலி வேக ஏவுகணைகள் 2 முதல் 3 மாக் வேகத்தில் பயணம் செய்யும் திறன் கொண்டது.
- இது இந்தியா மற்றும் ரஷ்யாவினால் இணைந்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

## மாறுபக்க கொழுப்பு நீக்குதல்

- 2022 ஆண்டிற்குள் மாறுபக்க கொழுப்பற்ற (Trans Fat free) இந்தியாவை உருவாக்குவதை மத்திய சுகாதார அமைச்சகம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாறுபக்க கொழுப்பு என்பது பகுதியளவில் ஹைட்ரஜனேற்றம் செய்யப்பட்ட தாவர எண்ணெய்கள், வேக வைத்த மற்றும் வறுத்த உணவு ஆகியவற்றில் உள்ள ஓர் உணவு நச்சு ஆகும்.
- நாட்டில் தொற்றா நோய்கள் (non-communicable diseases) அதிகரிப்பதற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும்.
- மாறுபக்க கொழுப்பானது இருதய நோய்களுக்கான ஓர் இடர்க் காரணியாகும் (risk factor).
- இது சம்பந்தமாக, FSSAI அமைப்பின் (Food Safety and Standards Authority of India - இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம்) 'சரியான உணவு உண்ணும் இந்தியா இயக்கம்' என்ற இயக்கமானது அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான உணவைச் சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான முறையில் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முதலாவது அறை வெப்பநிலை மீக்கடத்தி

- விஞ்ஞானிகள் கடந்த 100 ஆண்டுகளுக்குப் பிறகு முதலாவது அறை வெப்பநிலை மீக்கடத்தியின் கண்டுபிடிப்பை உறுதி செய்துள்ளனர்.
- வேதியியல் மாற்றங்களை உருவாக்குவதற்காக இரு வைரங்களின் முனைகளுக்கு இடையே கார்பன், ஹைட்ரஜன் & சல்பர் ஆகியவற்றை அழுத்தி அதனை லேசர் ஒளியுடன் மோதச் செய்து இந்தக் மீக்கடத்தியானது உருவாக்கப் பட்டிருக்கின்றது.
- பூமியின் வளிமண்டலத்தின் அழுத்தத்தை விட 2.6 மில்லியன் மடங்கு அழுத்தத்தில், 15 டிகிரி செல்ஷியஸ்ற்கும் குறைவான வெப்பநிலையில் மின் தடையானது அழிக்கப் படுகின்றது.
- எனினும், இந்தப் புதிய பொருளின் மீக்கடத்தி திறனானது மிக அதிக அழுத்தத்தில் மட்டுமே வெளிப்படுகின்றது. அதன் மூலம் இது அதன் நடைமுறைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துகின்றது.
- மீக்கடத்திகள் தடை இன்றி மின்சாரத்தைக் கடத்துகின்றன. அதனால் இது எந்தவொரு ஆற்றல் இழப்பும் இல்லாமல் மின் ஓட்டத்தை அனுமதிக்கின்றன.
- 1911 ஆம் ஆண்டில் மீக்கடத்தும் திறன் கண்டுபிடிக்கப்பட்ட போது இது சுழியத்திற்கு மிக அருகில் (-273.15°C) அமைந்த வெப்பநிலையில் மட்டுமே காணப் பட்டது.




## நிலவில் (சந்திரன்) நீர்

- அமெரிக்காவின் தேசிய விண்வெளிசார் நிர்வாகமானது (NASA) நிலவின் சூரிய ஒளி படும் பகுதியில் நீர் இருப்பதைக் கண்டறிந்துள்ளது.
- இது சோபியா விண்வெளிக் கலனால் கண்டறியப் பட்டுள்ளது.
- சோபியா என்பது அகச்சிவப்பு வானியலுக்கான அடுக்கு மண்டலக் கண்காணிப்பு என்பதைக் குறிக்கின்றது.
- இந்த விண்வெளிக் கலனானது கிலாவியஸ் என்ற ஒரு பள்ளத்தில் நீரைக் கண்டறிந்துள்ளது.
- இந்தப் பள்ளம் நிலவின் தென்துருவப் பகுதியில் உள்ளது.
- இதற்கு முன்பு, இஸ்ரோவின் சந்திரயான் 1 ஆனது நிலவின் பின்புறப் பகுதியில் நீர் இருப்பதை உறுதி செய்துள்ளது.




## குறைந்த செலவு கொண்ட வயது மூப்பிற்கு எதிரான கலவைத் தொழில்நுட்பம்

- ஐஐடி – குவஹாத்தியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வயது மூப்பிற்கு எதிரான கலவையை உற்பத்தி செய்வதற்காக குறைந்த செலவு கொண்ட ஒரு முறையை உருவாக்கியுள்ளனர்.
- இந்தப் பொருளானது மற்ற வணிகம்சார் தொழில் துறைகளால் பயன்படுத்தப்படும் கரிமச் சேர்மானங்களைப் பயன்படுத்துவதில்லை.
- வயது மூப்பிற்கு எதிரான பொருளின் குறைந்த விலைக்கு இதுவே ஒரு காரணம் ஆகும்.
- இந்தியாவில் ஒப்பனைப் பொருட்கள் 'மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம், 1940' என்ற சட்டத்தால் ஒழுங்குமுறைப் படுத்தப் படுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## "என்னுடைய கங்கை, என்னுடைய ஓங்கில்" (டால்பின்) பிரச்சாரம்

- கங்கை நதி டால்பின் தின (அக்டோபர் 05) கொண்டாட்டத்தன்று நாட்டில் சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக "என்னுடைய கங்கை, என்னுடைய டால்பின்" என்ற பிரச்சாரமானது தொடங்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டமானது தேசியத் தூய்மை கங்கைத் திட்டத்தினால் (NMCG - National Mission for Clean Ganga) 6 இடங்களில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம் (அனைத்து 3 மாநிலங்களும் கங்கை நதி பாயும் மாநிலங்களாகும்) ஆகிய மாநிலங்களில் டால்பின் தரிசனத்தை (dolphin safari) கொண்டுள்ளது.
- "என்னுடைய கங்கை, என்னுடைய டால்பின்" என்ற பிரச்சாரமானது உத்தரப் பிரதேசத்தில் 250 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிஜ்னோரில் இருந்து நரோரா வரை டால்பின் கணக்கெடுப்பைத் தொடங்குவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

## ஈரநிலத் தாவரத்தின் 2 புதிய இனங்கள்

- ஆராய்ச்சியாளர்கள் ஈரநிலத் தாவரத்தின் ஒரு வகையான "பைப்வோர்ட்ஸின்" (pipeworts) இரண்டு புதிய இனங்களை மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளில் கண்டறிந்துள்ளனர்.

- மகாராஷ்டிராவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய இனங்கள் "எரியோகௌவோன் பார்விசெப்ஹாலும்" (Eriocaulon parvicephalum) என்று பெயரிடப் பட்டுள்ளன. கர்நாடகாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய இனங்கள் "எரியோகௌவோன் காராவாலினெஸ்" (Eriocaulon karaavalense) என்று பெயரிடப் பட்டுள்ளன.

## 2030 ஆம் ஆண்டிற்குள் 60% உமிழ்வுக் குறைப்பு

- ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றமானது 1990 ஆம் ஆண்டின் நிலைகளுடன் ஒப்பிடும் போது 2030 ஆம் ஆண்டில் தனது உமிழ்வை 60% குறைக்க அதன் காலநிலை இலக்கைப் புதுப்பிக்க வேண்டி வாக்களித்துள்ளது.
- முன்பு 2030 ஆம் ஆண்டிற்குள் 40% உமிழ்வைக் குறைக்கும் இலக்கை அது நிர்ணயித்திருந்தது.
- உலக வனவிலங்கு நிதியம் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 65% என்ற அளவில் அதன் உமிழ்வைக் குறைக்க வேண்டி அதனை வலியுறுத்தின.
- ஜெர்மனியின் தலைமையின் கீழ் இவ்வாக்களிப்பு நடைபெற்றது.

## 7 கரிம மாசுபடுத்திகளின் உறுதிப்படுத்துதல்

- உறுதியான கரிம மாசுபடுத்திகள் (Persistent organic pollutants) குறித்த ஸ்டாக்ஹோம் மாநாட்டின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ள ஏழு வேதிமங்களை அங்கீகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மேலும், அமைச்சரவை தனது ஒப்புதல் வழங்கும் அதிகாரங்களை மத்திய வெளியுறவுத் துறை விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு மாற்றி வழங்கியுள்ளது.
- இந்த அமைச்சகங்கள் முன்பிருந்தே உள்நாட்டு விதிமுறைகளின் கீழ் உறுதியான கரிம மாசுபாடுகளை ஒழுங்குபடுத்தி வருகின்றன.
- 7 உறுதியான கரிம மாசுபடுத்திகள்:
    - குளோர்டெகோன் (Chlordecone)
    - ஹெக்ஸாப்ரோமோபிபெனைல் (Hexabromobiphenyl)
    - ஹெக்ஸாப்ரோமோடிபெனைல் ஈதர் மற்றும் ஹெப்டாப்ரோமோடிபெனைல் ஈதர் (Hexabromodiphenyl ether and Heptabromodiphenyl ether) (வணிக ஆக்டா-பி.டி.இ)
    - டெட்ராப்ரோமோடிஃபெனைல் ஈதர் மற்றும் பென்டாப்ரோமோடிபெனைல் ஈதர் (Tetrabromodiphenyl ether and Pentabromodiphenyl ether) (வணிக பென்டா-பி.டி.இ)
    - பென்டாக்ளோரோபென்சீன் (Pentachlorobenzene)
    - ஹெக்ஸாப்ரோமோசைக்ளோடோடேகேன் (Hexabromocyclododecane) மற்றும்
    - ஹெக்ஸாக்ளோரோபுடாடைன் (Hexachlorobutadiene).

### *ஸ்டாக்ஹோம் மாநாடு*

- உறுதியான கரிம மாசுபடுத்திகள் குறித்த ஸ்டாக்ஹோம் மாநாடு 2001 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- இது சுற்றுச்சூழலையும் மனிதர்களையும் உறுதியான கரிம மாசுபாட்டிலிருந்துப் பாதுகாக்க வேண்டி கையெழுத்திடப்பட்ட ஓர் ஒப்பந்தம் ஆகும்.
- உறுதியான கரிம மாசுபடுத்திகள் ஒளிச்சேர்க்கை, வேதியியல் மற்றும் உயிரியல் செயல்முறைகள் மூலம் சுற்றுச்சூழல் சீரழிவை ஏற்படுத்துவதை எதிர்த்து நிற்கின்ற கரிமக் கலவைப் பொருட்களாகும். .

## கடல் தளத்தில் நுண் நெகிழித் துண்டுகள்

- சி.எஸ்.ஐ.ஆர்.ஓ (காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனம்), என்ற ஒரு ஆஸ்திரேலிய அரசாங்க நிறுவனம் சமீபத்தில் உலகக் கடல் பரப்புத் தளமானது 14 மில்லியன் டன்களுக்கும் அதிகமான நுண் நெகிழித் துண்டுகளால் மாசுபடுத்தப் பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளது.
- ஆண்டுதோறும் கடல்களுக்குள் சென்று சேரும் குப்பைகளானது நிலைகுலைந்து உடைவதின் மூலம் இந்த நுண் நெகிழித் துண்டுகளானது கடல் தளத்தில் நுழைந்துள்ளது.
- கடல் பரப்புத் தளத்தில் நுண் நெகிழித் துண்டுகளின் மீது ஆய்வு மேற்கொள்ளப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- நுண் நெகிழித் துண்டுகள் என்பது 5 மி.மீ அல்லது அதற்கும் குறைவான அளவுடைய சிறிய நெகிழித் துண்டுகள் ஆகும்.
- இவை பெரும்பாலும் அளவில் பெரிய நெகிழிப் பொருட்கள் உடைபடுவதால் உருவாகின்றன.

## விலங்குகள் மற்றும் தாவரங்கள் கண்டுபிடிப்புகள் – 2019

- இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் குறைந்தது 364 புதிய விலங்கு இனங்கள் மற்றும் 253 புதிய தாவர இனங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த 364 விலங்கு இனங்கள் இதுவரையில் மனிதர்களுக்கு அறியாதவையாக இருந்துள்ளன.
- மேலும் அவற்றில் 116 விலங்கு இனங்கள் உலகில் இதற்கு முன்பு கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஆனால் அவை இந்தியாவில் இதற்கு முன்பு பதிவு செய்யப் படவில்லை.
- கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த 364 புதிய இனங்களில் 4 இனங்கள் புதைபடிவ இனங்களாக உள்ளன.
- கூடுதலாக 4 துணை இனங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- கண்டுபிடிக்கப் பட்டுள்ளவைகளில் அதிக எண்ணிக்கையிலான இனங்கள் பூச்சி இனங்களாக உள்ளன.
- இந்தப் புதிய விலங்குகளின் கண்டுபிடிப்புகளுடன், இந்தியாவானது 1,02,161 விலங்கு இனங்களைக் கொண்டுள்ளது.
- இது உலக அளவில் மொத்த எண்ணிக்கையில் 6.52% ஆக உள்ளது.
- 50,000றக்கும் மேற்பட்ட தாவர இனங்கள் இந்தியாவிலிருந்து அடையாளம் காணப் பட்டுள்ளன.
- இந்தக் கண்டுபிடிப்புகள் இந்திய விலங்கியல் ஆய்வு மையம் மற்றும் இந்தியத் தாவரவியல் மையம் ஆகியவற்றினால் புத்தக வடிவில் வெளியிடப் பட்டுள்ளன.

## போலார்ஸ்டெர்ன் திட்டம் – திரும்பி வருதல்

- ஜெர்மன் ஆல்பெர்டு வெஜ்னர் மையத்தைச் சேர்ந்த போலார்ஸ்டெர்ன் கப்பலானது பனியில் உறைந்து கிடக்கும் ஆர்க்டிக் பிரதேசத்தின் வழியாகப் பயணித்து, அங்கு 389 நாட்களைக் கழித்த பிறகு ஜெர்மனியின் பிரிமர்ஹேவன் (Bremerhaven) துறைமுகத்திற்குத் திரும்பியுள்ளது.
- இது அப்பகுதியில் புவி வெப்பமடைதலின் தாக்கம் குறித்துத் தேவையான தகவலைச் சேகரிக்க ஆராய்ச்சியாளர்களை அனுமதிக்கின்றது.

- வட துருவத்திற்குச் செலுத்தப்பட்ட உலகின் மிகப்பெரிய திட்டம் இதுவாகும். இது உருகி வரும் ஆர்டிக் கடல் குறித்து ஒரு சில வலுவான ஆதாரத்தைச் சேகரித்துக் கொண்டு வருவதையும் அடுத்த சில பத்தாண்டுகளில் நிகழவிருக்கும் பனியற்ற கோடைக் காலங்கள் குறித்த எச்சரிக்கைகளையும் அளிப்பதையும் செய்து வருகின்றது.

### *போலார்ஸ்டெர்ன் திட்டம்*

- போலார்ஸ்டெர்ன் திட்டமானது உலகத்தில் மற்றும் ஒரு பிராந்தியத்தில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்த தகவலை அறிந்து கொள்வதற்கு உதவுவதற்காக வேண்டி கடந்த ஓராண்டு காலமாக கடற்பனி, கடல், வளிமண்டலம் மற்றும் சூழலியல் குறித்த தகவல்களைச் சேகரித்து வருகின்றது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 அன்று, நார்வேயின் ட்ரோம்சோவில் இருந்து இந்தக் கப்பல் புறப்பட்டது.
- இதில் உள்ள குழுவினர் அப்பகுதியில் பல்வேறு மாதங்களாக நிலவி வந்த இருளையும், மிகக் குறைந்த வெப்பநிலையாக -39.5° செல்ஷியஸ் வெப்ப நிலையையும் கண்டுள்ளனர்.
- 'இந்தத் திட்டமானது ப்ளாங்டன் தாவரம் மற்றும் பாக்டீரியா குறித்து ஆய்வு செய்வதற்காகவும் கடல்சார் சூழலியல் எவ்வாறு கடுமையான சுற்றுச்சூழலில் செயல்படுகின்றது என்பது குறித்து ஆய்வு செய்வதற்காகவும் வேண்டி துருவ இரவின் போது பனிக்கு அடிப்பகுதியில் உள்ள நீர் மாதிரிகளைச் சேகரித்துள்ளது.

## சிலம் (SILAM) மற்றும் என்பியூசர் (ENFUSER) மாதிரிகள் – காற்றின் தரம் கண்காணிப்பு

- இந்திய வானிலை ஆய்வு (IMD - Indian Meteorological Department) மையமானது மேம்படுத்தப்பட்ட காற்றுத் தரக் கண்காணிப்பு மாதிரிகளைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது.
- அவை SILAM மற்றும் ENFUSER என்ற வகையிலான மாதிரிகளாகும்.
- தில்லியில் 40ற்கும் மேற்பட்ட அளவில் காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்புகள் உள்ளன.
- SILAM என்பது வளிமண்டல உள்ளடக்கத்தின் ஒருங்கிணைந்த மாதிரிக்கான ஒரு அமைப்பு என்பதைக் குறிக்கின்றது.
- இந்த மாதிரியானது 10 கிலோ மீட்டர் தெளிவுத் திறனில் கனிம நுண்ணிய மனிதனால் உருவாக்கப் பட்ட நுண்மத் துகள்களுக்கான CAME-GLOB மற்றும் EDGAR போன்ற உலகளாவிய உமிழ்வு கண்டுபிடிப்புச் செயல்பாடுகளின் மூலம் மேம்படுத்தப் பட்டு உள்ளது.
- ENFUSER (ENvironmental information FUsion SERvice) என்பது சுற்றுச்சூழல் தகவல் இணைப்புச் சேவை என்பதைக் குறிக்கின்றது.
- இது தேசியத் தலைநகரப் பகுதியில் மாசுபாட்டுப் பகுதிகளை அடையாளம் காண செயல்படுத்தப் படுகின்றது.
- SILAM மற்றும் ENFUSER ஆகிய இரண்டும் பின்லாந்துடன் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கூட்டிணைவின் மூலம் மேம்படுத்தப் பட்டுள்ளது.
- WRF-Chem என்பது IMDயினால் மேம்படுத்தப்பட்ட மற்றொரு காற்றுத் தர மாதிரி ஆகும்.

## விலங்குகளின் வலசைப் பாதை மீதான உரிமை

- இந்திய உச்ச நீதிமன்றமானது விலங்குகளின் வலசைப் பாதை மீதான உரிமையை உறுதி செய்து அந்தப் பகுதிகளில் இருக்கும் விடுதிகளை மூடுவதற்கு வழிவகை செய்யும் வகையில் நீலகிரி யானைகள் பெருவழிப் பாதை குறித்த 2011 ஆம் ஆண்டின் மதராஸ் உயர் நீதிமன்ற ஆணையை உறுதி செய்துள்ளது.
- 2011 ஆம் ஆண்டில், மதராஸ் உயர்நீதிமன்றமானது நீலகிரி மாவட்டத்தின் சிகுர் பீடபூமியில் "யானைகள் பெருவழிப் பாதை" ஒன்றை அறிவிக்கும் தமிழ்நாடு அரசின் அறிவிப்பாணையின் செல்லுபடித் தன்மையை உறுதி செய்தது.
- வனப் பகுதிகள் சுருங்கி வந்த போதிலும் யானைகள் பெருவழிப் பாதையானது அதன் தனித்துவ வன வாழ்விடங்களுக்கிடையேயான பயணத்திற்கான வசதியை மேற்கொள்ளச் செய்வதன் மூலம், வாழ்வாதாரத்திற்கு வேண்டி தமது இடம்பெயரும் முறையைத் தொடர யானைகளை அனுமதிக்கின்றது.
- இந்தப் பெருவழிப் பாதையானது வாழ்விடத் தனிமையின் மீதான தாக்கத்தைக் குறைப்பதன் மூலம் வனவிலங்குகளின் நீடித்த நிலைத் தன்மையில் ஒரு முக்கியப் பங்கினை ஆற்றுகின்றது.
- நீலகிரி யானைகள் பெருவழிப் பாதையானது மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளை இணைக்கும் பகுதியான சூழலியல் ரீதியில் மிகுந்த பலவீனமான பிரதேசமான சிகுர் பீடபூமியில் அமைந்துள்ளது.
- இது நீலகிரி மாவட்டத்தில் முதுமலை தேசியப் பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ளது.




## சீனாவின் இளஞ்சிவப்பு ஓங்கில் (டால்பின்)

- சீனாவின் இளஞ்சிவப்பு ஓங்கில்கள் ஹாங்காங்கில் உள்ள முத்து நதி முகத்துவாரத்திற்கு மீண்டும் திரும்பி வரத் துவங்கியுள்ளன.
- இந்த இனங்கள் சீனா, ஹாங்காங், தைவான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சீனாவின் வெள்ளை/இளஞ்சிவப்பு ஓங்கில் என்று ஒரு பொதுப் பெயருடன் குறிப்பிடப் படுகின்றன.
- இந்த ஓங்கில்களின் எண்ணிக்கையானது கடந்த 15 ஆண்டுகளில் 70 – 80% என்ற அளவு வரை எண்ணிக்கையில் குறைந்துள்ளது.
- இதன் ஐயூசிஎன் நிலை : பாதிக்கப்படக் கூடிய இனம் (Vulnerable).

## 2020 ஆம் ஆண்டின் உலகளாவிய காற்றின் நிலை குறித்த அறிக்கை

- உலகளாவிய காற்றின் நிலை என்பது பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்திடமிருந்து பெற்ற நிபுணத்துவத் தரவுகளுடன் சுகாதாரத் தாக்கங்கள் மையம், சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கான மையம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- 2019 ஆம் ஆண்டில் நுண்மத் துகள் 2.5 என்ற துகளின் மிக அதிகப் பாதிப்புக்கு உள்ளான முதல் 10 நாடுகளில் இந்தியா, வங்க தேசம், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளும் உள்ளடங்கும்.
- 2019 ஆம் ஆண்டில் மிக அதிக அளவில் ஓசோன் பாதிப்புக்குள்ளான முதல் 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- ஒட்டு மொத்தமாக, இந்தியாவில் அனைத்து சுகாதார அபாயங்களிடையே நிகழும் இறப்புகளுக்கான ஒரு மிகப் பெரிய அபாயக் கூறாக காற்று மாசுபாடு விளங்கி வருகின்றது.
- இந்தியாவானது உலகில் மிக அதிகமான மாசுபாடு பாதிப்பு, அதாவது 83.2 µg /கன மீட்டர் என்ற அளவிற்குப் பாதிப்பை எதிர் கொண்டுள்ளது.
- இதனைத் தொடர்ந்து நேபாளம் 83.1 µg /கன மீட்டர் பாதிப்பையும் நைஜீரியா 80.1% பாதிப்பையும் எதிர்கொண்டுள்ளன.

FIGURE 1 Global ranking of risk factors by total number of deaths from all causes in 2019.




## இந்தியாவின் அரணைகள்

- சமீபத்தில், இந்திய விலங்கியல் ஆய்வு மையமானது 'இந்தியாவின் அரணைகள்' என்ற தலைப்பில் அரணைகள் (ஸ்கின்க்ஸ்) பற்றிய ஓர் ஆய்வைக் மேற்கொண்டு உள்ளது.
- அரணைகள் விஷமற்றவை, அதிக எச்சரிக்கை உடையவை, சுறுசுறுப்பானவை மற்றும் வேகமாக நகரக் கூடியவையாகும். மேலும் அவை பலவிதமான பூச்சிகள் மற்றும் சிறிய முதுகெலும்புகளற்ற உயிர்களை உண்ணக் கூடியவை ஆகும்.
- இந்தியாவில் 62 வகையான அரணைகள் உள்ளன என்பதை இவ்வறிக்கை வெளிப்படுத்துகிறது.
- உலகின் 4%க்கும் குறைவான அரணைகளே இந்தியாவில் உள்ளன.
- இந்தியாவில் 62 வகையான அரணைகள் காணப்படுகின்றன. அவற்றில் 57% (33 இனங்கள்) பூர்வீக வகையைச் சேர்ந்தவையாகும்..
- மேற்குத் தொடர்ச்சி மலையில் 24 இனங்கள் உள்ளன. அவற்றில் 18 இனங்கள் அப்பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டவையாகும்.

- தக்காணத் தீபகற்ப பிராந்தியத்தில் 19 இனங்கள் உள்ளன. அவற்றில் 13 இனங்கள் அப்பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டவையாகும்.
- அரணைகளின் நான்கு வகைகள்:
    - செப்சோபிஸ்: கிழக்குத் தொடர்ச்சி மலையின் வடக்குப் பகுதியில் செப்சோபிஸ் பங்டடஸ் பூர்வீகமாகக் காணப்படுகிறது.
    - பார்குடியா: இவை கிழக்குக் கடற்கரையின் மலைகள் மற்றும் கடலோரச் சமவெளிகளில் காணப்படும் கால்களற்ற அரணைகள் ஆகும்.
    - ஒடிசாவின் சில்கா ஏரியில் உள்ள பார்குட் தீவில் மட்டுமே பார்குடியா இன்சுலாரிஸ் என்ற இனம் காணப் படுவதாக நம்பப் படுகிறது.
    - பர்குடியா மெலனோஸ்டிக்டா விசாகப் பட்டினத்தைப் பூர்வீகமாகக் கொண்டது ஆகும்.
    - கெஸ்ட்லியா: இவை நீல வால் கொண்ட தரை அரணைகள் என்றும் அழைக்கப் படுகின்றன. மேலும் அவை மேற்குத் தொடர்ச்சி மலைகளைப் பூர்வீகமாகக் கொண்டவையாகும்.
    - ரிஸ்டெல்லா: இவை பூனை அரணைகள் என்று அழைக்கப் படுகின்றன. மேலும் இவை மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதியினைப் பூர்வீகமாகக் கொண்டவையாகும்.

## ஆசான் பாதுகாப்பு காப்பகம்

- இது உத்தரகாண்ட் மாநிலத்தின் முதல் ராம்சார் தளமாக மாறியுள்ளது. அதனால் இது ஒரு 'சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்புநிலமாக' மாறியுள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் கர்வால் பகுதியில் டெஹ்ராடூன் மாவட்டத்திற்கு அருகில் யமுனை ஆற்றின் கரையில் இந்தக் காப்பகமானது அமைந்துள்ளது.

## வல்லூறுகள் பாதுகாப்பிற்கான தேசிய செயல் திட்டம் – 2020/2025

- வல்லூறுகள் பாதுகாப்பிற்கான தேசிய செயல் திட்டம் 2020-25 என்ற ஒரு திட்டமானது சமீபத்தில் தேசிய வனவிலங்கு வாரியத்தினால் ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- உத்தரப் பிரதேசம், திரிபுரா, மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகியவை ஒவ்வொன்றும் ஒரு வல்லூறுப் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தைப் பெற உள்ளன.
- இந்தப் புதிய திட்டமானது ஒரு மருந்து வல்லூறுவிற்கு நச்சு எனக் கண்டறியப் பட்டால் அதன் மருத்துவப் பயன்பாட்டை தானாகவே நீக்கி விடுகின்றது.
- இந்தியாவில் வல்லூறுகள் அழிந்து வருவதற்கு ஒரு மிக முக்கியக் காரணம் டைக்ளோபினாக் என்ற ஒரு மருந்தாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாநிலமும் அம்மாநிலத்தில் உள்ள எஞ்சியுள்ள வல்லூறுகளைப் பாதுகாப்பதற்காக குறைந்தது 1 வல்லூறுப் பாதுகாப்பு மண்டலத்தையாவது கொண்டிருக்க வேண்டும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய அளவிலான வல்லூறுகளின் கணக்கெடுப்பானது பம்பாய் இயற்கை வரலாற்றுச் சமூகம், வனத்துறை, இலாப நோக்கற்ற அமைப்புகள், ஆராய்ச்சி மையம் போன்றவற்றினால் மேற்கொள்ளப் படுகின்றது.
- சிவப்புத் தலை கொண்ட கழுகுகள் மற்றும் எகிப்தியக் கழுகுகள் போன்றவற்றிற்கு பாதுகாப்பு இனப்பெருக்க மையங்கள் இருக்க வேண்டும்.

- பிஞ்சோர் (ஹரியானா), போபால் (மத்தியப் பிரதேசம்), குவஹாத்தி (அசாம்), ஹைதராபாத் (தெலுங்கானா) ஆகியவற்றில் 4 மீட்பு மையங்களை உருவாக்க வேண்டும்.
- இந்தியாவில் 9 வகையான வல்லூறு இனங்கள் உள்ளன.
- அந்த 9 வகையான வல்லூறு இனங்கள் மற்றும் அவற்றின் ஐயூசிஎன் (IUCN) நிலை பின்வருமாறு:
  - வெண் முதுகு கொண்ட வல்லூறு – மிக அருகிய இனம்
  - மெல்லிய உடலமைப்பு கொண்ட வல்லூறு – மிக அருகிய இனம்
  - நீண்ட உடலமைப்பு கொண்ட வல்லூறு – மிக அருகிய இனம்
  - எகிப்திய வல்லூறு – அருகிய இனம்
  - சிவப்புத் தலை கொண்ட வல்லூறு – மிக அருகிய இனம்
  - இந்திய கிரிப்போன் வல்லூறு – கவலை குறைந்த இனம்
  - இமயமலை கிரிப்பொன் வல்லூறு – விரைவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை
  - சினோரியஸ் வல்லூறு – விரைவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை
  - எலும்புண்ணி வல்லூறு – விரைவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை

## இமயமலை பழுப்பு நிறக் கரடிகள்

- சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட இமயமலைப் பழுப்பு நிறக் கரடி குறித்த ஒரு ஆய்வானது அவற்றுக்கான பொருத்தமான வாழ்விடம் மற்றும் உயிரியல் பெருவழிப் பாதைகள் அதிக அளவில் குறைந்துள்ளதாகக் கணித்துள்ளது.
- மேலும் இது இமயமலை சிவப்புக் கரடி, இபெல்லைன் கரடி அல்லது சூ-தீ என்று அழைக்கப் படுகின்றது.
- இது இமயமலை உயர் நிலப் பகுதிகளில் ஒரு மிகப்பெரிய ஊண் உண்ணியாக விளங்குகின்றது.
- இது இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், ஜம்மு காஷ்மீர் ஆகியவற்றில் சில பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் காணப்படுகின்றது.



## ஐரோப்பிய ஒன்றியத்தில் காலநிலை மாற்றச் சட்டம்

- ஐரோப்பிய ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சர்கள் காலநிலை சட்டம் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.
- 2050 ஆம் ஆண்டளவில் பசுமைக்குடில் வாயுவின் உமிழ்வைக் குறைக்கும் ஐரோப்பாவின் திட்டத்திற்கு இந்த முக்கியத்துவம் வாய்ந்த காலநிலை மாற்றச் சட்டமானது ஒரு அடிப்படையாக அமையும்.
- இது அப்பிராந்தியத்தின் 2050 ஆம் ஆண்டிற்கான உமிழ்வுகளற்ற இலக்கை (பூஜ்ஜிய உமிழ்வு) சட்டப்பூர்வமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## வன உரிமைகள் சட்டத்தின் மாற்றங்கள்

- மகாராஷ்டிரா மாநில ஆளுநர் வன உரிமைகள் சட்டம், 2006 என்பதை மாற்றியமைப்பதற்கான ஓர் அறிவிக்கையை வெளியிட்டுள்ளார்.
- இந்த அறிவிக்கையானது இந்திய அரசியலமைப்பின் அட்டவணை 5ன் கீழ் உள்ள தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆளுநரால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த மாற்றங்கள் பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரியமான வனவாசிக் குடும்பங்கள் வனப் பகுதிகளுக்கு அருகில் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு அனுமதிக்கின்றது.
- இந்த முடிவானது அம்மாநிலத்தில் பட்டியலிடப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய வனவாசிக் குடும்பங்களுக்கு வேண்டிய ஒரு முக்கியமான நிவாரணத்தை அளிக்கின்றது.

### *5வது அட்டவணை*

- அரசியலமைப்பின் 5வது அட்டவணையானது அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களைத் தவிர்த்து மற்ற மாநிலங்களில் பட்டியலிடப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டை மேலாண்மை செய்கின்றது.

## பல்லுயிர்ப் பெருக்கத்தின் வரைபடம்

- மும்பை நகரின் பல்லுயிர்ப் பெருக்க வரைபடமானது அந்நகரில் முக்கியமான வனவிலங்கு இடங்கள், மாங்குரோவ் (சதுப்பு நில) காடுகள், நகர்ப்புற பசுமை இடங்கள், அந்நகரில் காணப்படும் 90 இனங்கள் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றது.
- அந்நகர மக்கள் இந்த நகரத்துடன் பகிர்ந்து கொள்ளும் வளங்களுடன் மெய்நிகர் முறையில் மும்பை நகர மக்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இதே வகையைச் சேர்ந்த முதலாவது முன்னெடுப்பு இதுவாகும்.
- இந்த வரைபடத்தின் பின்னணியில் உள்ள ரோகன் சக்கரவர்த்தி என்பவர் பசுமை நகைச்சுவை (Green Humour) என்ற பட்டத்தின் கீழ் தன்னுடைய பணிக்காக சிறப்பாக அறியப் படுகின்றார்.
- இது மும்பை மேஜிக் அமைச்சகத்தினால் தொடங்கப்பட்ட விரிகுடாவினால் மேற்கொள்ளப்படும் பல்லுயிர்ப் பெருக்கப் பிரச்சாரம் என்பதின் ஒரு பகுதியாகும்.




## பெண்களுக்குப் புதிய பொது விநியோக முறை கடைகள்

- புதிய பொது விநியோக முறை கடைகளில் 30 சதவீதத்தைப் பெண்களுக்கு வழங்க ராஜஸ்தான் அரசானது முடிவு செய்துள்ளது.
- மாநிலத்தில் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கு வேண்டி இது முதலமைச்சர் அசோக் கெஹலாட் அவர்களால் முடிவு செய்யப் பட்டுள்ளது.
- "சஹியோக் எவம் உபர் யோஜ்னா" என்ற திட்டத்திற்கு ரூ. 11 கோடி என்ற அளவில் கூடுதல் நிதியை ஒதுக்குவதற்கு அம்மாநில அரசானது ஒப்புதல் அளித்து உள்ளது.
- இந்த திட்டத்தில், மகளின் திருமணம் மற்றும் தகுதியான குடும்பங்களுக்கு உதவி ஆகியவற்றிற்காக நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## பாதஸ்ரீ அபிஜன் – மேற்கு வங்காளம்

- மேற்கு வங்க மாநில அரசானது "பாதஸ்ரீ அபிஜன்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது ஒரு சாலை பழுதுபார்ப்புத் திட்டமாகும். இதில் மாநிலம் முழுவதும் 12,000 கிலோ மீட்டர் வரையுள்ள 7000 சாலைகள் திட்ட அடிப்படையிலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் பழுது பார்க்கப்பட உள்ளன.
- இந்தச் சாலைகளின் பட்டியலைத் தயாரிப்பதற்காக அம்மாநில மக்கள் அம்மாநில அரசின் "டிடி கெ போலோ" என்ற முன்னெடுப்பின் மூலம் முதலமைச்சருக்கு அறிவிக்க உள்ளனர்.

## காங்கோ காய்ச்சல் மீதான எச்சரிக்கை

- மகாராஷ்டிராவின் பால்ஹர் மாவட்டமானது குஜராத்தில் உள்ள அதன் அண்டை மாவட்டங்களில் காங்கோ காய்ச்சல் வைரஸ் காணப்பட்டதைத் தொடர்ந்து அந்தக் காய்ச்சல் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

- கிரீமியன் – காங்கோ ஹிமோராகிக் காய்ச்சலானது (Crimean-Congo hemorrhagic fever) புனியாவிரிடே (Bunyaviridae) என்ற வகுப்பைச் சேர்ந்த ஒரு ஒட்டுண்ணியால் கடத்தப் படும் வைரஸினால் (நை ரோ வைரஸ்) ஏற்படும் ஒரு தொற்று நோயாகும்.
- இது முதன்முதலில் 1944 ஆம் ஆண்டில் கிரீமியாவில் கண்டறியப்பட்டது. அதன் பிறகு இதற்கு கிரீமியன் ஹிமோராகிக் காய்ச்சல் (Crimean hemorrhagic fever) என்று பெயரிடப் பட்டது.
- இது 1969 ஆம் ஆண்டில் காங்கோவில் நோய்த் தொற்று ஏற்படுவற்குக் காரணமாகக் கண்டறியப்பட்டது.
- காங்கோ காய்ச்சலானது நோய்த் தொற்று ஏற்பட்ட விலங்குகளின் இரத்தம் மூலமும் நோய்த் தொற்றுள்ள விலங்குகளின் மாமிசத்தை உண்பதன் மூலமும் மனிதர்களுக்குப் பரவுகின்றது.

## சிக்கிமின் மிளகாய்க்குப் புவிசார் குறியீடு

- "டாலி குர்சானி" என உள்ளூரில் வெகுவாக அறியப்படும் சிவப்புக் கார மிளகாய் ஆனது புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.
- இது உலகில் காரமான மிளகாய்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- டாலி குர்சானியின் மிகப்பெரிய உற்பத்தியாளர் அம்மாநில அரசால் நிர்வகிக்கப் படும் சிக்கிம் சுப்ரீம் எனும் அமைப்பாகும்.




## டிஜிட்டல் சேவா சேது திட்டம்

- குஜராத் மாநில அரசானது ஊரகப் பகுதிகளில் பொது நலனுக்காக தொழில்நுட்பத்தின் சிறப்பான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக "டிஜிட்டல் சேவா சேது" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது மத்திய அரசின் பாரத்நெட் திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், கிராமங்களை இணைப்பதன் மூலம் அம்மாநிலத்தில் உள்ள 14,000 கிராமப் பஞ்சாயத்துகளிலும் பொது நலச் சேவைகள் கிடைக்கப் பெறும்.
- ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் இ-கிராம அலுவலகத்தைப் பெறும். எனவே கிராமத்தில் உள்ளவர்கள் தாலுக்கா மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை.

## விவசாயிகள் நல நிதி வாரியம் – கேரளா

- ❖ நாட்டில் முதன்முறையாக, கேரள மாநில அரசானது அம்மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்காக ஒரு நல நிதி வாரியத்தை அமைக்க முடிவு செய்துள்ளது.
- ❖ இந்த வாரியமானது "கேரள கர்சாகா சேமநிதி வாரியம்" என்று அழைக்கப் படுகின்றது.
- ❖ கேரள கர்சாகா சேமநிதிச் சட்டத்தின் படி, விவசாயமானது தோட்டக் கலை, மருத்துவத் தாவரங்களைப் பயிரிடல், நாற்றுப் பண்ணை மேலாண்மை, மீன், அலங்கார மீன், சிப்பி, தேனீக்கள், பட்டுப் புழுக்கள், கோழிப் பண்ணை, வாத்துகள், ஆடுகள், முயல்கள், கால்நடைகள், அது போன்ற வேளாண் பயன்பாடுகள் தொடர்பான நிலப் பயன்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

## மரங்கள் மாற்றி நடுதல் கொள்கை – தில்லி

- ❖ மரங்கள் மாற்றி நடுதல் கொள்கையைச் செயல்படுத்திய இந்தியாவின் முதலாவது மாநிலமாக தில்லி உருவெடுத்து உள்ளது.
- ❖ மரங்கள் மாற்றி நடுதலில் அனுபவம் மற்றும் சரியான ஆவணம் போன்றவற்றைக் கொண்டுள்ள பிரத்தியேக அரசாங்க நிறுவனங்களைக் கொண்ட ஒரு குழுவானது இந்தக் கொள்கையின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.
- ❖ இதனுடைய தொடர்புடைய அந்த அரசு நிறுவனங்கள் அவற்றின் திட்டங்களினால் பாதிக்கப் பட்டுள்ள மரங்களில் 80% மரங்களைப் புதிய இடத்தில் நட வேண்டும்.
- ❖ அரசானது மரம் நடுதல் நடவடிக்கையைக் கண்காணிப்பதற்காகவும் சோதனை செய்வதற்காகவும் சான்றளிப்பதற்காகவும் வேண்டி குடிமக்களை உள்ளடங்கிய உள்ளூர் சமுதாயங்களை அமைக்கவுள்ளது.
- ❖ மாற்று மரம் நடுதலுக்கான பணவழங்கீடானது அதை உறுதி செய்வதற்காக ஒரு ஆண்டிற்குப் பிறகு மேற்கொள்ளப்படும். மேலும் மாற்றி நடப்பட்ட மரங்களில் 80% மரங்கள் நீடித்து நிலைத்து இருந்தால் அதற்கான கட்டணமானது குறைத்துக் கொள்ளப் படும்.



## ஜெகனண்ணா வித்யா கனுகா திட்டம் – ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது ஜெகனண்ணா வித்யா கனுகா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், அம்மாநில அரசானது 43.32 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பள்ளிப் பொருட்களை வழங்க இருக்கின்றது.
- இதில் வழங்கப்படும் பள்ளி சார்ந்த பொருட்கள் வித்யா கனுகா பொருட்கள் எனப் பெயரிட்டு அழைக்கப் படும்.

## முக்கிய மந்திரி சவுர் ஸ்வரோஜ்கர் யோஜனா - உத்தரகாண்ட்

- இந்தத் திட்டமானது இளைஞர்களின் சுய வேலைவாய்ப்பையும் பசுமை ஆற்றல் உற்பத்தியையும் ஊக்குவிக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் 25 கிலோ வாட் திறனுள்ள சூரிய ஒளி ஆற்றல் அலகுகள் ஒதுக்கப் படுகின்றன.
- இந்தச் சூரிய ஒளி ஆலைகள் ஒரு ஆண்டிற்கு 38,000 அலகுகள் திறன் கொண்ட மின்சாரத்தை உற்பத்தி செய்யவுள்ளது.
- இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரமானது 25 ஆண்டுகளுக்கு உத்தரகாண்ட் மின்சாரக் கழகத்தினால் வாங்கப்படவுள்ளது.

## 100% குழாய் நீர் இணைப்புகள்

- கிராமப்புறப் பகுதிகளில் 100% குழாய் நீர் இணைப்புகளை வழங்கிய நாட்டின் முதலாவது மாநிலம் கோவா ஆகும்.
- “ஜல் ஜீவன் திட்டத்தின்” வெற்றிகரமான செயல்பாட்டைத் தொடர்ந்து, கோவாவானது முதலாவது “ஹர் கர் ஜல் மாநிலமாக” உருவெடுத்துள்ளது.
- கோவா மாநிலமானது நீர் விநியோகச் செயல்பாட்டைக் கண்காணிப்பதற்காக உணர்வி அடிப்படையிலான சேவை விநியோகக் கண்காணிப்பு அமைப்பை நிறுவ திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.

## பிரதான் மந்திரி கிஷான் திட்டத்திற்காக இந்திய அஞ்சல் துறையுடன் இணைதல்

- கோவா மாநில அரசானது பிரதான் மந்திரி கிஷான் சம்மான் நிதி திட்டத்தில் (PM – KISAN - Pradhan Mantri Kisan Samman Nidhi scheme) பதிவு செய்துள்ள 11,000 விவசாயிகளுக்காக வேண்டி இந்திய அஞ்சல் துறையுடன் இணைய இருக்கின்றது.
- PM – KISAN திட்டத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்காக இந்தியாவில் இது போன்ற ஒரு நடவடிக்கை தொடங்கப் படுவது இதுவே முதன்முறையாகும். இதில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தபால்காரர் பயன்படுத்தப்பட உள்ளார்.
- ஒவ்வொரு ஆண்டும் மூன்று தவணைகளில் ரூ.2000 என்ற தொகையை நேரடிப் பயன்பாடு பரிமாற்ற முறையில் விவசாயிகளுக்கு அளிக்கும் இந்தத் திட்டமானது பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள விவசாயிகள் நலனுக்கானது ஆகும்.

## உலகின் இரண்டாவது பனிப்புகைக் கோபுரம்

- தில்லி அரசானது காற்று மாசுபாட்டைக் கையாளுவதற்காக “கன்னாட்” என்ற இடத்தில் “பனிப் புகைக் கோபுரத்தை” அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- சீனாவிற்குப் பிறகு ஏற்படுத்தப்படும் 2வது பனிப்புகைக் கோபுரம் இதுவாகும். மேலும் உலகில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது கோபுரம் இதுவாகும்.
- கன்னாட் என்ற இடத்தில் அமையவிருக்கும் இந்தக் கோபுரத்தின் தொழில்நுட்பமானது சீனாவில் உள்ளதை விட வேறுபட்டுள்ளது.




- பனிப் புகைக் கோபுரங்கள் காற்று மாசுபாட்டுத் துகள்களைக் குறைப்பதற்காக வேண்டி மிகப்பெரிய அளவிலான காற்றுத் தூய்மையாக்கிகளாக செயல்படுவதற்காக என்று வடிவமைக்கப்பட்ட அமைப்புகளாகும்.
- இது பொதுவாக காற்று வடிகட்டிகளின் பல்வேறு அடுக்குகளுடன் பொருத்தப் பட்டு உள்ளது. இது அவற்றில் செல்லும் காற்றில் உள்ள காற்றுத் துகள்களைத் தூய்மையாக்குகின்றது.
- உயர்செயல்பாடு கொண்ட H14 நிலை உயர் திறன் மாசுபாட்டுத் துகள் வடிகட்டியானது புது தில்லியில் பயன்படுத்தப்பட உள்ளது.
- இந்த வடிகட்டியானது முன்வடிகட்டி மற்றும் செயல்படுத்தப்பட்ட கார்பன் ஆகியவற்றுடன் இணைந்து காற்றில் கலந்துள்ள 99.99% நுண்மத் துகளைத் தூய்மை அடையச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பொதுக் கல்வியில் டிஜிட்டல்மயமாகும் முதலாவது மாநிலம்

- அரசின் பொதுக் கல்வியில் முழுவதும் டிஜிட்டல் மயமாகும் நாட்டின் முதலாவது மாநிலம் கேரளா ஆகும்.
- இந்த டிஜிட்டல் மயமாக்கும் திட்டங்கள் கல்விக்கான கேரளக் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பத் துறையினால் (KITE - Kerala Infrastructure and Technology for Education) செயல்படுத்தப்பட இருக்கின்றது.

## 50வது ஸ்கல் சர்வதேச ஆசியப் பகுதி (SIAA) மாநாடு – 2021

- ஜம்மு காஷ்மீரானது 2021 ஆம் ஆண்டின் 50வது வருடாந்திர SIAA (Skal International Asia Area) காங்கிரசை நடத்துவதற்கான போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.
- ஸ்கல் சர்வதேசம் என்பது உலகச் சுற்றுலா மற்றும் தோழமையை ஊக்குவிக்கும் வகையில் உலகம் முழுவதும் உள்ள சுற்றுலாத் தலைவர்களைக் கொண்ட ஒரு தொழில்சார் அமைப்பாகும்.
- இது உலகம் முழுவதும் 15,000 உறுப்பினர்கள் மற்றும் 150 பகுதிகளுடன் செயல்படுகின்ற ஸ்பெயினில் உள்ள ஒரு சுற்றுலா அமைப்பாகும்.
- பயணம் மற்றும் சுற்றுலாத் தொழிற்துறையின் அனைத்துக் கிளைகளையும் ஒன்றிணைக்கும் ஒரே சர்வதேசக் குழு இதுவாகும்.

## குஜராத் பாதிக்கப்பட்ட பகுதிகள் சட்டம் (திருத்த) மசோதா

- இந்தியக் குடியரசுத் தலைவர் 'குஜராத் - பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் சட்டம் (திருத்தம்) (Gujarat Disturbed Area act) மசோதா 2019' என்ற மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- இந்தத் திருத்தமானது பாதிக்கப்பட்ட பகுதிகளில் அசையாச் சொத்துகளாக உள்ள சொத்துகளின் பரிமாற்றத்தைத் தடுக்கின்றது.
- மேலும், இது அந்தச் சொத்தின் குத்தகைதாரர்களை அந்தச் சொத்துக்களிலிருந்து வெளியேற்றப் படுவதிலிருந்துப் பாதுகாக்கின்றது.
- 'குஜராத் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அசையாச் சொத்துகளின் பரிமாற்றம் மீதான தடை மற்றும் அந்தச் சொத்துகளிலிருந்து குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் அம்ச சட்டம், 1991' என்ற சட்டமானது பொதுவாக, பாதிக்கப் பட்ட பகுதிகள் சட்டம் என்று அழைக்கப்படுகின்றது.

## குப்கார் பிரகடனம் II

- ஜம்மு காஷ்மீரின் 6 அரசியல் கட்சிகள் "குப்கார் பிரகடனம் II" என்ற ஓர் ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது ஜம்மு காஷ்மீரில் சரத்து 370 நீக்கப்பட்டதற்கு எதிராக ஒரு முழுமையான போராட்டம் நடத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.
- முதலாவது குப்கார் பிரகடனமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சரத்து 370 நீக்கப்படுவதற்கு முன்பாக கையெழுத்திடப்பட்டது.

## "பழங்குடியினருக்கு கற்றுக் கொடுத்தல்" முன்னெடுப்பு

- மத்தியப் பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள டிரைபெட் (TRIFED - Tribal Cooperative Marketing Development Federation of India) ஆனது சத்தீஸ்கரில் "பழங்குடியினருக்குக் கற்றுக் கொடுத்தல்" என்ற ஒரு முன்னெடுப்பிற்காக சத்தீஸ்கர் எம்எப்பி கூட்டமைப்பு மற்றும் ஐஐடி-கான்பூர் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.
- இது தொழில்முனைவு மேம்பாடு, மென்திறன்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக மேம்பாடு (ஜன் தன் கேந்திராக்களின் மூலம் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் மூலம்) ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவதுடன் பழங்குடியினரின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டமானது பங்கெடுத்தல், கட்டமைப்புத் திறன் மற்றும் சந்தை இணைப்பு (Engagement, Capacity Building, and Market linkages) ஆகிய 3 கூறுகளாகக் கருதப்படும் நீடித்த தொழில்முனைவுக்கான மேம்பாட்டின் 3 கோணங்களின் மீது கவனம் செலுத்துகின்றது.

Tribal Cooperative Marketing Development Federation of India Limited - TRIFED

## “எனது நகரம் எனது பெருமை” முன்னெடுப்பு

- ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநரான மனோஜ் சின்ஹா அவர்கள் “எனது நகரம் எனது பெருமை” என்ற ஒரு முன்னெடுப்பை அறிவித்துள்ளார்.
- இதன் முக்கியமான நோக்கம் நகரங்களில் பொது மக்கள் விழிப்புணர்வு, அடிமட்ட ஜனநாயகத்தை வலுப்படுத்துதல் மற்றும் அவரவர் வீடுகளுக்கே சென்று சேவை வழங்குதல் ஆகியவையாகும்.

## செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மையம் - ஹைதராபாத்

- இன்டெல் இந்தியா நிறுவனமானது ஹைதராபாத்தில் ஒரு பயன்பாட்டுச் செயற்கை நுண்ணறிவு (AI - Artificial intelligence) ஆராய்ச்சி மையத்தைத் தொடங்க இருப்பதாக அறிவித்துள்ளது.
- இந்த ஆராய்ச்சி மையமானது பின்வருவனவற்றுடன் இணைந்து தொடங்கப்பட உள்ளது.
    - தெலுங்கானா மாநில அரசு
    - சர்வதேசத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், ஹைதராபாத்
    - இந்தியாவின் பொதுச் சுகாதார அமைப்பு
- இந்த அமைப்பு திறன்மிகு கூடுகைத் துறைகள் மற்றும் சுகாதார நலம் ஆகியவற்றில் உள்ள சவால்களை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது.

## “ரெட் லைட் ஆன் காடி ஆப்” - தில்லி

- “ரெட் லைட் ஆன் காடி ஆப்” என்பது ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரமாகும்.
- இது அக்டோபர் 21 முதல் நவம்பர் 15 வரை அனுசரிக்கப்படும்
- இது ஒரு அமலாக்கப் பிரச்சாரம் அல்ல.
- இது ஒரு தனிநபர்கள் பின்பற்றக்கூடிய பிரச்சாரமாகும்.
- போக்குவரத்து சமிக்ஞை நிறுத்தங்களில் 10 இலட்சம் மக்கள் இயந்திரத்தின் எரியூட்டலை நிறுத்துவதன் மூலம் ஒரு ஆண்டில் PM10 என்ற நுண்மத் துகள்களின் (Particulate matter) அளவானது 1.5 டன்களாகவும் PM2.5 என்ற நுண்மத் துகள்களின் அளவானது 0.4 டன்களாகவும் குறையும் என்று இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது.

## உலகின் மிகப்பெரிய துத்தநாக உருக்கு உலைத் திட்டம்

- குஜராத் மாநில அரசானது, அம்மாநிலத்தில் ஒரு புதிய துத்தநாக உருக்கு உலையை அமைப்பதற்காக வேதாந்தா குழும நிறுவனம், இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம் ஆகியவற்றுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- குஜராத்தில் இந்துஸ்தான் துத்தநாக நிறுவனத்திற்காக முதன்முறையாக அமைக்கப்படும் இந்த வசதியானது சுழிய அளவிலான கழிவு வெளியேற்றத் தொழில்நுட்பத்துடன் இருக்கும். மேலும் இது உலகில் குறைந்த செலவு கொண்ட உருக்கு ஆலைகளில் ஒன்றாகவும் இருக்கும்.
- இந்துஸ்தான் துத்தநாக நிறுவனமானது துத்தநாகம் – ஈயம் மற்றும் வெள்ளி ஆகியவற்றுக்கான இந்தியாவின் ஒரே ஒருங்கிணைந்த உற்பத்தியாளர் ஆகும் மேலும் இது உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் ஒன்றாகும்.

## நெச்சிபூ சுரங்கப் பாதை

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் அவர்கள் நெச்சிபூ சுரங்கப் பாதைக்கு அடிக்கல் நாட்டினார்.
- இது அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு காமெங் மாவட்டத்தில் உள்ள பாலிபாரா – சர்துவார் – தவாங் சாலையில் அமைந்துள்ளது.
- தற்பொழுதுள்ள சாலைக்குப் பக்க வழிச் சாலையாக உள்ள இந்த 450 மீட்டர் நீளமுள்ள சுரங்கப் பாதையானது இரண்டு வழித்தடங்களுடன், டி என்ற வடிவத்தைக் கொண்டு உள்ளது.

## சக்தி திட்டம் – உத்தரப் பிரதேசம்

- உத்தரப் பிரதேச மாநில அரசானது 6 மாத கால அளவுள்ள பெண் அதிகாரமளிப்புத் திட்டமான "சக்தி திட்டம்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- 6 மாத கால அளவுள்ள இந்தப் பிரச்சாரமானது "சக்தி திட்டம்" மற்றும் "சக்தி நடவடிக்கை" என்ற 2 நிலைகளைக் கொண்டிருக்கும்.
- இந்த முன்னெடுப்பானது அம்மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றத்தைக் கையாளுவதற்காகவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காவும் தொடங்கப்பட்டுள்ளது.
- இது பெண்களின் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைக் கொண்டு உள்ளது.
- சக்தி நடவடிக்கையின் கீழ், அம்மாநிலக் காவல் துறையானது பெண்களுக்கு எதிராக குற்றம் புரிந்து, சிறைத் தண்டனை பெற்று தற்பொழுது வெளியில் வந்துள்ள நபர்களின் பதிவேட்டைத் தயாரிக்க உள்ளது.

## காருண்யா ஆரோக்கியா சுரக்சா பாதாடி – கேரளா

- இது இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவத்திற்காக ஓர் ஆண்டிற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் என்ற அளவில் சுகாதார நிதியுதவியைத் தருவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சுகாதார நலத் திட்டமாகும்.
- இது பொது மக்களுக்குத் தேவைப்படும் மருத்துவச் சிகிச்சைக்கான நிதியுதவிகளை அளிப்பதை கடந்த 2 ஆண்டுகளில் மேலும் 14 இலட்சம் குடும்பங்களுக்கு நீட்டித்து உள்ளது.

## கடல் வானூர்தித் திட்டம் – முதலாவது சேவை

- குஜராத்தின் ஐந்து கடல் வானூர்திச் சேவைகளில் முதலாவது சேவையானது அக்டோபர் 31 அன்று தொடங்கி வைக்கப் படவுள்ளது.
- இது அகமதாபாத்தில் உள்ள சபர்மதி நதியை நர்மதை மாவட்டத்தின் கெவடியாவில் உள்ள ஒற்றுமைக்கான சிலையுடன் இணைக்கும்
- ஒரு கடல் வானூர்தியானது நீரில் மேலெழும்பி, கீழே இறங்குவதற்கான வசதி பொருத்தப்பட்ட இறக்கை கொண்ட ஒரு வானூர்தி அமைப்பைக் கொண்டுள்ளது.
- இது தனது படகின் பயன்பாட்டின் மூலம் விமானப் பயணத்தைப் பொது மக்களுக்கு வழங்குகின்றது.
- கடல் வானூர்திகளின் 2 முக்கியமான வகைகள் : பறக்கும் படகுகள் (கப்பல் அமைப்பு வானூர்தி) மற்றும் மிதக்கும் வானூர்திகள் ஆகியவையாகும்.
- இது பெரும்பாலும் இறக்கை அல்லது முனை மிதவைகள் எனப்படும் இறக்கை முனைகளுக்கு அருகில் சிறிய மிதவைகளுடன் பொருத்தப் பட்டுள்ளது.
- பறக்கும் படகின் கப்பல் அமைப்பானது கடற்பயண வீரர்கள், பயணிகள் மற்றும் சரக்குகளுக்கு இடமளிக்கும்.
- இது கப்பல் அல்லது படகு ஆகியவற்றின் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.




## முகக் கவசங்களின் விலை மீதான உச்ச வரம்பு

- முகக் கவசங்களின் விலை மீது உச்ச வரம்பை நிர்ணயித்த நாட்டின் முதலாவது மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- இந்த விலைகள் மாநில அரசினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.
- N95 முகக்கவசங்கள் தற்பொழுது ரூ.19லிருந்து ரூ.49 வரையிலும் இரண்டு அடுக்கு மற்றும் மூன்று அடுக்கு முகக் கவசங்கள் ரூ.3லிருந்து 4 வரையிலும் கிடைக்கும்.
- அம்மாநிலத்தில் முகக் கவசங்கள் குறிப்பிடப் பட்டுள்ள அதிகபட்ச விற்பனை விலை வரம்பின் 70% விகிதத்தில் கிடைக்கும்.

## இரத்த சோகை முக்த் பாரத் (AMB) குறியீடு

- ❖ மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் மற்றும் யுனிசெப்பின் ஒரு முன்னெடுப்பான "இரத்தசோகை முக்த் பாரத்" (AMB - Anemia Mukt Bharat) என்ற குறியீடானது இந்தியா முழுவதும் இரத்த சோகையின் இருப்பைக் குறைப்பதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ நாட்டில் உள்ள 29 மாநிலங்களில் AMB குறியீட்டில் ஹரியானா சிறந்த மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- ❖ இந்த மாநிலமானது முதன்முறையாக 2019-20 ஆம் ஆண்டில் 93% நோய் எதிர்ப்புத் திறனூட்டலை அடைந்துள்ளது.
- ❖ AMB உத்தியானது 6 இடையீட்டு மற்றும் 6 நிறுவன செயல்முறைகளின் மூலம் 6 இலக்காக்கப் பட்ட பயனாளிக் குழுக்களுக்குப் பயனளிப்பதன் மீது கவனம் செலுத்துகின்றது.
- ❖ இந்தத் திட்டமானது போஷான் அபியானின் கீழ் இரத்த சோகை குறைப்பு இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தார் பாலைவனத்தில் ஆற்றின் தடயம்

- ❖ அண்ணா பல்கலைக் கழகம், ஐ.ஐ.எஸ்.இ.ஆர் கொல்கத்தா மற்றும் ஜெர்மனியின் மேக்ஸ் பிளாங்க் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் தார் பாலைவனத்தின் வேறுபட்ட நிலப்பரப்பில் கற்கால மக்கள் வாழ்ந்திருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ மத்திய தார் பாலைவனப் பகுதியில் ஒரு தொலைந்த நதியை இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ இந்த நதியானது பழங்கற்காலத்து மக்களுக்கு மிகுந்த உதவியாக இருந்திருக்கக் கூடும்.

## நாட்டின் முதல் பன்முனைய தளவாடப் பூங்கா

- ❖ நாட்டின் முதல் பன்முனைய தளவாடப் பூங்காவானது அசாமில் அமையவுள்ளது.
- ❖ இது இந்திய அரசின் ஒரு லட்சியத் திட்டமான பாரத்மாலா பரியோஜனா என்ற திட்டத்தின் கீழ் உருவாக்கப் படும்.




## PMGSY திட்டத்தைச் செயல்படுத்துதல் குறித்த அறிக்கை

- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா (Pradhan Mantri Gram Sadak Yojana - PMGSY) என்ற திட்டத்தை வெற்றிகரமான செயல்படுத்தியதில் நாட்டில் உள்ள முதல் 30 மாவட்டங்களில் இமாச்சலப் பிரதேசத்தின் மண்டி மாவட்டமானது முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- மேலும் இமாச்சலப் பிரதேச மாநிலமானது PMGSY திட்டத்தின் கீழ் சாலைக் கட்டமைப்பிற்காக தேசிய அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- PMGSY என்பது ஒரு மாநிலத்தில் 250ற்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் வாழ்விடங்களை இணைப்பதற்காக மத்திய அரசினால் நிதியளிக்கப் படும் ஒரு திட்டமாகும்.

## காலேஷ்வரம் நீரேற்றுப் பாசனத் திட்டம்

- அப்போதைய ஆந்திரப் பிரதேசத்தில் பிரானஹிதா-செவெல்லா திட்டம் என்று அழைக்கப் பட்ட இத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் தெலுங்கானாவில் மறுவடிவமாக்கப் பட்டு, நீட்டிக்கப்பட்டு காலேஷ்வரம் திட்டம் என்று மறுபெயரிடப்பட்டுள்ளது.
- இது கோதாவரி நதியின் வெள்ள நீரைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் தெலுங்கானாவை ஒரு வறட்சியற்ற மாநிலமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது பிரானஹிதா நதி மற்றும் கோதாவரி நதி இரண்டும் சங்கமிக்கும் இடத்தில் தொடங்குகின்றது.
- இத்திட்டம் நிறைவு பெற்றால், இது உலகின் மிகப்பெரிய நீர்ப்பாசன மற்றும் குடிநீர் திட்டமாக இருக்கும்.
- தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது (National Green Tribunal - NGT) “சட்டத்தை மீறிய வகையில்” இந்தத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- அதற்கான அனுமதியானது மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் கணிசமான பணிகள் முடிக்கப்பட்ட பின்பு வழங்கப்பட்டுள்ளது.
- இந்தத் தீர்ப்பானது NGTயின் தலைவரான நீதியரசர் ஆதர்ஷ் குமார் கோயல் அவர்களின் தலைமையிலான ஒரு அமர்வினால் வழங்கப்பட்டுள்ளது.

### பின்னணி

- காகத்தியா திட்டம் என்பது தெலுங்கானா அரசின் ஒரு முதன்மைத் திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது அம்மாநிலத்தில் சிறு & குறு விவசாயிகளுக்குப் உதவும் வகையில் நீர்ச் சேமிப்பு அமைப்புகளைப் புனரமைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பாகீரதா என்ற ஒரு திட்டமானது தெலுங்கானா மாநிலத்தில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் வசிக்கும் அனைத்துக் குடும்பத்தாருக்கும் பாதுகாப்பான குடிநீர் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அசாம்-மிசோரம் எல்லைத் தகராறு

- அண்மையில் அசாமின் கச்சார் மாவட்டத்தில் உள்ள லைலாப்பூர் கிராமத்தில் வசிப்பவர்களுக்கும் மிசோரத்தின் கோலாசிப் மாவட்டத்தின் உள்ளூர்வாசிகளுக்கும் இடையே ஒரு மோதல் ஏற்பட்டது.
- மூன்று அசாம் மாவட்டங்கள், அதாவது கச்சார், ஹைலகண்டி மற்றும் கரிம்கஞ்ச் ஆகியவை கோலாசிப், மாமித் மற்றும் ஐஸ்வால் உள்ளிட்ட மூன்று மிசோரம் மாவட்டங்களுடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- அசாமிற்கும் மிசோரமிற்கும் இடையிலான எல்லைப் பிரச்சினையானது, லுஷாய் மலைகளை (அப்போதைய மிசோரம்) கச்சார் (அசாம்) சமவெளிகளிலிருந்துப் பிரித்த 1875 ஆம் ஆண்டின் அறிவிப்பு வெளியிடப்பட்ட காலம் (உள்நாட்டு எல்லை ஒழுங்குமுறை - Inner Line Regulation) மற்றும் 1933 ஆண்டில் லுஷாய் ஹில்ஸ் மற்றும் கச்சார் இடையே ஓர் எல்லை நிர்ணயிக்கப் பட்ட காலம் தொட்டு நிலுவையில் உள்ளது.



### கிர்னார் மலை

- சமீபத்தில் குஜராத் மாநிலத்தின் ஜுனாகத் நகரில் உள்ள கிர்னார் மலையின் மீது 2.3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஒரு கயிற்றுப் பாதைத் திட்டமானது பிரதமர் மோடி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த கயிற்றுப் பாதைத் திட்டமானது ஆசியாவில் மிக நீளமான ஒரு ஆலய கயிற்றுப் பாதையாகக் கருதப் படுகின்றது.




## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### முன்னாள் மத்திய அமைச்சர் ஜஸ்வந்த் சிங் மறைவு

- ஜஸ்வந்த் சிங் இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் (1998), பாதுகாப்புத் துறை அமைச்சர் (2001) மற்றும் நிதி அமைச்சர் (2002) ஆகிய பொறுப்புகளில் பணியாற்றி உள்ளார்.
- நாட்டில் மிக நீண்ட காலமாக பணியாற்றிய பாராளுமன்றவாதிகளில் இவரும் ஒருவராவார்.
- இவர் 2012 ஆம் ஆண்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார்.
- 1998 ஆம் இந்திய அணு ஆயுதச் சோதனைக்குப் பின்பு தடைபட்டிருந்த அமெரிக்காவுடனான உறவுகளை மிகச் சிறப்பாகக் கையாண்டதற்காக மிகப்பெரிய அளவில் இவர் அறியப்படுகின்றார்.



## சாந்தி ஸ்வரூப் பட்னாகர் விருது 2020

- 2020 ஆம் ஆண்டின் சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது உயிரியல், சுற்றுச்சூழல் அறிவியல், பொறியியல், கணிதம், மருத்துவம் மற்றும் இயற்பியல் ஆகிய 7 துறைகளில் சிறந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்ட 45 வயதுக்குட்பட்ட இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப் படுகின்றது.

### *வெற்றியாளர்கள்*

| துறைகள் | விருது பெறுபவர்கள் |
|---|---|
| **உயிரியல் அறிவியல்** | 1) டாக்டர் சுபாதீப் சட்டர்ஜி<br>2) டாக்டர் வத்சலா திருமலை |
| **வேதியியல் அறிவியல்** | 1) டாக்டர் ஜோதிர்மயி தாஸ்<br>2) டாக்டர் சுபி ஜேக்கப் ஜார்ஜ் |
| **புவி, வெப்பமண்டல, பெருங்கடல் மற்றும் கிரக அறிவியல்** | 1) டாக்டர் அபிஜித் முகர்ஜி<br>2) டாக்டர் சுர்யேந்து துட்டா |
| **கணித அறிவியல்** | 1) டாக்டர் யு.கே. ஆனந்தவர்த்தனன்<br>2) டாக்டர் ரஜாத் சுப்ரா ஹஸ்ரா |
| **மருத்துவ அறிவியல்** | 1) டாக்டர் புஸ்ரா அட்டீக்<br>2) டாக்டர் ரித்தீஷ் அகர்வால் |
| **இயற்பியல் அறிவியல்** | 1) டாக்டர் ராஜேஷ் கணபதி<br>2) டாக்டர் சுராஜித் தாரா |

## குவைத்தின் அமீர் மறைவு

- குவைத்தின் ஆட்சியாளரான ஷேக் சபாஹ் அல்-அகமது-அல் சபாஹ் சமீபத்தில் காலமானார்.
- சிற்றரசரின் இறப்பைத் தொடர்ந்து, அந்நாட்டின் இளவரவசரான 83 வயது நிரம்பிய ஷேக் நவாப் அல் அகமது அல் சபா சபாஹ் அந்நாட்டின் மன்னராக, அல்-அகமதுவின் இடத்தில் நியமிக்கப்பட வேண்டி அந்நாட்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப் பட்டுள்ளார்.
- ஷேக் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 29 அன்று அந்நாட்டு மன்னராகப் பதவியேற்றார்.
- தேசிய சபையின் ஆதரவைத் தொடர்ந்து தான் இறக்கும் வரை, அதாவது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 அன்று வரை அந்நாட்டின் ஆட்சியாளராக அவர் பணியாற்றினார்.
- ஈராக் நாட்டுப் படைகளால் குவைத் ஆக்கிரமிக்கப்பட்ட 1990-91 வளைகுடாப் போரின் போது, ஈராக்கிற்கு ஆதரவளித்த நாடுகளுடனான நட்புறவை மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட தனது முயற்சிகளுக்காக வேண்டி அவர் "அரபிய உறவின் டீன்" (dean of Arab Diplomacy') என்று அழைக்கப்படுகின்றார்.



## சிட்டிசன் டிப்ளமசி விருது

- ❖ இந்தியாவின் சேகல் அறக்கட்டளையானது (Sehgal Foundation) மதிப்பு மிக்க சிட்டிசன் டிப்ளமசி விருதின் (Citizen Diplomacy Award) இரண்டாம் இடத்தைப் பகிர்ந்து கொண்டு உள்ளது.
- ❖ அந்நிறுவனம் மனித உரிமைகள் மற்றும் கிராமப்புற இந்தியச் சமூகங்களில் பெண்களின் அதிகாரமளித்தல் போன்ற அதன் பணிக்காக இந்த விருதைப் பெறவுள்ளது.
- ❖ நான்காவது வருடாந்திர சிட்டிசன் டிப்ளமசி விருதானது ஆவெரேஜ் முகமதுவின் (Average Mohamed) நிறுவனர், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனரான முகமது அமீன் அகமதுவுக்கு வழங்கப்பட உள்ளது.
- ❖ இந்த மதிப்புமிக்க வருடாந்திர விருதின் இரண்டாம் இடத்தைப் பகிர்ந்து கொள்பவை செகல் அறக்கட்டளை, டெம்பி சிஸ்டர்ஸ் சிட்டிஸ் (Tempe Sister Cities) ஆகியனவாகும்.

## சையதா அன்வாரா தைமூர் மறைவு

- ❖ அசாமின் ஒரே பெண் முதலமைச்சரான சையதா அன்வாரா தைமூர் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- ❖ அவர் அசாமின் ஒரே பெண் முஸ்லீம் முதல்வராகவும், மற்றும் மற்ற அனைத்து மாநிலங்களைப் பொருத்த வரையிலும் முதல் பெண் முஸ்லீம் முதல்வராகவும் இருந்தார்.
- ❖ தைமூர் இந்திய தேசிய காங்கிரசின் உறுப்பினராகவும் நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.
- ❖ அவர் டிசம்பர் 6, 1980 முதல் ஜூன் 30, 1981 வரை முதல்வராக இருந்தார்.
- ❖ 1983 முதல் 1985 வரை பொதுப் பணித்துறை அமைச்சராகப் பணியாற்றினார்.
- ❖ 1988 ஆம் ஆண்டில், அவர் மாநிலங்களவைக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.



## 2020 ஆம் ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசு

- 2020 ஆம் ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசின் ஒரு பாதியானது ரோஜர் பென்ரோஸ் என்பவருக்கும் அதன் மற்றொரு பாதியானது ஆண்டிரியா கெஸ் மற்றும் ரெய்ன்ஹார்டு ஜென்ஜெல் ஆகியோருக்கும் கூட்டாக வழங்கப் படுகின்றது.
- இந்த விருதானது அந்த 3 ஆராய்ச்சியாளர்களுக்கும் அவர்களுடைய புகழ்பெற்ற கருந்துளை குறித்த கண்டுபிடிப்புகளுக்காக வழங்கப் படுகின்றது.
- முதன்முதலில் இந்த விருதானது 1901 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டதிலிருந்து தற்பொழுது வரை சமீபத்திய வெற்றியாளரான ஆண்டிரியா கெஸ் உள்ளிட்ட 4 பெண்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

### *கண்டுபிடிப்புகள்*

- பென்ரோஸ்: கருந்துளை உருவாக்கம் என்பது சார்பியலின் பொதுக் கோட்பாட்டிற்கான ஒரு வலுவான கணிப்பு என்பது குறித்த ஒரு கண்டுபிடிப்பாகும்.
- கெஸ் மற்றும் ஜென்ஜெல் : கண்ணுக்குப் புலப்படாத மற்றும் மிகவும் கடுமையான பொருளானது நமது விண்மீனின் மையத்தில் நட்சத்திரங்களின் சுற்று வட்டப் பாதையை நிர்வகிக்கின்றது. ஒரு மிகப்பெரிய கருந்துளை என்பது மட்டுமே நமக்கு தற்பொழுது மிகவும் அறிந்த ஒரு தகவலாகும்.



## சுவச் பாரத் விருதுகள், 2020

- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சரான கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் 2020 ஆம் ஆண்டின் சுவச் பாரத் விருதுகளை வழங்கினார்.
- இந்த விருதுகள் தூய்மைப் பிரிவு மற்றும் குடிநீர் பிரிவுகளின் கீழ் வழங்கப் பட்டுள்ளன.
- இந்த விருதுகள் பின்வரும் 3 பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.
    - சுவச் சுந்தர் சமுதாயக் சவுச்சாலயா (SSSS - Swachh Sundar Samudayik Shauchalaya) பிரச்சாரம்
    - சமுதாயக் சவுச்சாலயா அபியான் (Samudayik Shauchalaya Abhiyan)
    - கண்டகி செ முக்த் (GMS - Gandagi Se Mukt) பிரச்சாரம்
- SSSS பிரச்சாரத்தின் கீழ் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டன.
    - சிறந்த மாநிலம் : குஜராத்
    - சிறந்த மாவட்டம் : திருநெல்வேலி, தமிழ்நாடு
    - சிறந்த வட்டாரம் : காச்ரோடு, உஜ்ஜைன், மத்தியப் பிரதேசம்
    - சிறந்த கிராமப் பஞ்சாயத்து : சின்னூர் (சேலம்)
- SSA-ன் கீழ் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டன.
    - சிறந்த மாநிலம் : உத்தரப் பிரதேசம் (Garib Kalyan Rojgar Abhiyaan) மற்றும் குஜராத் (Non-Garib Kalyan Rojgar Abhiyaan)
    - சிறந்த மாவட்டம் : பிரயாக்ராஜ் (Garib Kalyan Rojgar Abhiyaan) மற்றும் பரேலி (Non-Garib Kalyan Rojgar Abhiyaan)
    - சிறந்த கிராமப் பஞ்சாயத்து : போரிகோன், பொங்காய்கோன், அசாம்
- GMBயில் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டன.
    - சிறந்த மாநிலம் : தெலுங்கானா, ஹரியானா
    - சிறந்த மாவட்டம் : மோகா (பஞ்சாப்)

## சரியான வாழ்வாதார விருது 2020

- சரியான வாழ்வாதார விருது அமைப்பானது 2020 ஆம் ஆண்டின் சரியான வாழ்வாதார விருதின் 4 வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- இது ஸ்டாக்ஹோமின் மாற்று நோபல் பரிசு என்று அழைக்கப்படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டில் இந்த 4 வெற்றியாளர்கள் சமத்துவம், ஜனநாயகம், நீதி மற்றும் சுதந்திரத்திற்கான தங்களது பங்களிப்புகளுக்காக இந்த விருதைப் பகிர்ந்து கொண்டு உள்ளனர்.



- அலெஸ் பயலியாட்ஸ்கி – பெலாரஸ்
- நஸ்ரின் சோட்டோடெஹ் – ஈரான்
- பிரயான் ஸ்டவென்சன் – அமெரிக்கா
- லோட்டி கன்னிங்கம் ரென் – நிகரகுவா

## UNSDG செயல்திட்ட நடவடிக்கை விருது 2020

- பயிர்ச் சக்கை மேலாண்மை மீதான சிஐஐ அமைப்பின் பணிக்கு வேண்டி ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் ஐக்கிய நாடுகள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் விருதானது அந்த அமைப்பிற்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது, "ஒருங்கிணைப்பு, இணைதல், தொழிற்துறையில் கூட்டு நடவடிக்கை மற்றும் முழுமையான தீர்விற்கான அணுகுமுறை" என்ற பிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ளது.

## 2020 ஆம் ஆண்டின் காந்தி விருது

- மாநிலங்களவை உறுப்பினரும் ஆம் ஆத்மி கட்சியின் ஒரு தலைவருமான சஞ்சய் சிங் அவர்கள் காந்தி விருது 2020 என்ற விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த விருதானது மகாத்மா காந்தி தேசிய அமைப்பினால் நிறுவப்பட்டுள்ளது.
- இவர் இஸ்ரேலில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தின் மது பாட்டில்களின் மீது பொறிக்கப்பட்ட மகாத்மா காந்தியின் உருவத்தை நீக்குவதற்காக வேண்டி எடுக்கப் பட்ட இந்தியாவின் ராஜதந்திர ரீதியிலான நடவடிக்கையில் முக்கியப் பங்கு வகித்தார்.

## அமைதிக்கான நோபல் பரிசு 2020

- 2020 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசானது உலக உணவுத் திட்டத்திற்கு (WFP - World Food Programme) வழங்கப் படுகின்றது.
- இது பட்டினியை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் முயற்சிகளையும் பிரச்சினை ஏற்பட்டுள்ள பகுதிகளில் அமைதிக்கான நிலையை ஏற்படுத்துவதில் அதன் பங்களிப்பையும் அங்கீகரிக்கின்றது.
- இது பட்டினியைப் போர் மற்றும் பிரச்சினையின் ஆயுதமாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான முயற்சியின் உந்து சக்தியாகத் திகழ்கின்றது.
- இந்தத் திட்டமானது 1960 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட உணவு மற்றும் வேளாண் அமைப்பின்படி 1963 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இது அவசரகாலச் சூழ்நிலைகளில் உணவு உதவியை அளிப்பதையும் உணவுப் பாதுகாப்பிற்கான தாங்கு தன்மையைக் கட்டமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2008 ஆம் ஆண்டில், WEP ஆனது செயல்பாட்டிற்கான கொள்முதல் என்ற ஒரு திட்டத்தை ஒருங்கிணைத்தது.
- இது வேளாண் சந்தையை அணுகுவதற்குச் சிறுநில விவசாயிகளுக்கு வாய்ப்பளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## வேதியியலுக்கான நோபல் பரிசு

- ❖ பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த இமானுவேல் சர்பென்டையர் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஜெனிபர் டோட்னா ஆகியோருக்கு 2020 ஆம் ஆண்டிற்கான வேதியிலுக்கான நோபல் பரிசானது வழங்கப் படுகின்றது.
- ❖ இவர்கள் சிஆர்ஐஎஸ்பிஆர் எனப்படும் மரபணு மாற்றம் குறித்த ஒரு முறையின் வளர்ச்சிக்காக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ சிஆர்ஐஎஸ்பிஆர் என்பது முறையாகத் தொகுக்கப்பட்ட இடைவெளி கொண்ட மீண்டும் ஏற்படும் சிறு பாலின்ட்ரோம் (Clustered Regularly Interspaced Short Palindromic Repeats - CRISPR) என்பதைக் குறிக்கின்றது. இது 2012 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- ❖ இது மரபணு மாற்றத்தை மிகவும் எளிய முறையில் மாற்றுவதையும் அதே வேளையில் மிகவும் திறனுள்ளதாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இதனை விரும்பத்தகாத மரபணு மாற்றத்தின் மூலம் ஏற்படும் பல்வேறு வகையான புற்றுநோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வாகப் பயன்படுத்த முடியும்.
- ❖ வரலாற்றில் முதன்முறையாக வேதியியல் நோபல் பரிசானது பெண்கள் இருவருக்கு இணைந்து வழங்கப் பட்டுள்ளது.



## தேசிய ஸ்டார்ட் அப் விருதுகளின் முதலாவது பதிப்பு

- தேசிய ஸ்டார்ட் அப் விருதுகளின் (2020) முதலாவது பதிப்பானது மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது விவசாயம், கல்வி, தொழில்நிறுவனத் தொழில்நுட்பம் (Enterprise Technology), ஆற்றல், நிதி, உணவு, சுகாதாரம், தொழிற்துறை 4.0, விண்வெளி, பாதுகாப்பு, சுற்றுலா மற்றும் நகர்ப்புற சேவைகள் உள்ளிட்ட 12 துறைகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.
- இந்த விருதுகள் அந்த 12 துறைகளில் 35 பிரிவுகளில் தலா 1 என்ற வீதமும் 3 சிறப்புப் பிரிவுகளிலும் சேர்த்து மொத்தமுள்ள 38 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன.

## மருத்துவம் அல்லது உடலியலுக்கான நோபல் பரிசு

- இரண்டு அமெரிக்க விஞ்ஞானிகள் ஹார்வி ஜே ஆல்டர் மற்றும் சார்லஸ் எம் ரைஸ் மற்றும் ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானி மைக்கேல் ஹொாவ்க்டன் ஆகியோருக்கு மருத்துவம் அல்லது உடலியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டு உள்ளது.
- ஹெபடைடிஸ் சி வைரஸைக் கண்டுபிடித்ததற்காக அவர்களுக்கு இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- ஹெபடைடிஸ் ஏ மற்றும் பி வைரஸ்களால் விளக்க முடியாத இரத்தத்தில் பரவும் ஹெபடைடிஸின் முக்கிய ஆதாரத்தை விளக்க இந்த மூவரின் பணி உதவி இருக்கின்றது.
- இவர்களது கண்டுபிடிப்பின் காரணமாக, வைரஸிற்கான அதிக உணர்திறன் வாய்ந்த இரத்தப் பரிசோதனைகள் இப்போது கிடைக்கின்றன. இவை அடிப்படையில் உலகின் பல பகுதிகளிலும் பரிமாற்றத்திற்குப் பிந்தைய ஹெபடைடிஸை (Post-transfusion hepatitis) நீக்கி, உலக ஆரோக்கியத்தைப் பெரிதும் மேம்படுத்தி வருகின்றன.
- இவர்களின் கண்டுபிடிப்பானது ஹெபடைடிஸ் சி வைரஸிற்கு எதிரான மருந்துகளின் விரைவான வளர்ச்சியை அனுமதித்துள்ளது. மேலும் வரலாற்றில் முதல் முறையாக, தற்போது இந்த நோயைக் குணப்படுத்த இயலும்.

### *ஹெபடைடிஸ் பற்றி:*

- ஹெபடைடிஸ் என்பது கல்லீரலின் ஒரு அழற்சியாகும்.
- இந்த நிலை தானாகக் குறையலாம் அல்லது இழைநார்ப் பெருக்கம் (ஃபைப்ரோஸிஸ்), கல்லீரல் இழைநார் வளர்ச்சி (சிரோசிஸ்) அல்லது கல்லீரல் புற்றுநோய் என்ற நிலைக்கு முன்னேறலாம்.
- ஹெபடைடிஸ் வைரஸ்களே ஹெபடைடிஸ் நோயிற்குப் பொதுவான ஒரு காரணமாகும். ஆனால் பிற நோய்த்தொற்றுகள், நச்சுப் பொருட்கள் மற்றும் தன்னுடல் தாக்குநோய்களும் (auto immune diseases ) ஹெபடைடிஸை ஏற்படுத்தும்.
- ஹெபடைடிஸ் வைரஸ்களில் ஐந்து முக்கிய வகைகள் உள்ளன. அவை ஏ, பி, சி, டி மற்றும் ஈ ஆகும்.
- ஹெபடைடிஸ் ஏ மற்றும் ஈ பொதுவாக கேடான உணவு அல்லது அசுத்தமான தண்ணீரை உட்கொள்வதால் ஏற்படுகின்றன.
- ஹெபடைடிஸ் பி, சி மற்றும் டி ஆகியவை பாதுகாப்பற்ற இரத்தப் பரிமாற்றம் அல்லது அசுத்தமான ஊசிகள், உடலுறவு அல்லது தாயிடமிருந்து குழந்தைக்கு ஆகிய முறைகளில் பரவுகின்றன.

- ஹெபடைடிஸ் ஏ மற்றும் பி ஆகிய இரண்டும் தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடியவை ஆகும்.
- ஆனாலும் ஹெபடைடிஸ் சி-க்கு தடுப்பூசி ஏதும் இல்லை.
- இருப்பினும், இது வைரஸ் தடுப்பு மருந்துகளால் சிகிச்சையளிக்கப் படலாம்.




## 2020 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு

- 2020 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசானது 77 வயது நிரம்பிய அமெரிக்க கவிஞரான லூய்சி க்ளுக் (Louise Glück) என்பவருக்கு வழங்கப் படுகின்றது.
- கடுமையான அழகுத் தன்மையானது தனிப்பட்ட உலகளாவிய இருப்பை ஏற்படுத்தும் என்ற அவருடைய மென்மையான (தவறு இழைக்காத) கவிதைக் குரலை இப்பரிசு அங்கீகரித்துள்ளது.
- இவர் கவிதைக்கான புலிட்சர் விருது (1993), பொல்லிங்கன் பரிசு (2001), அமெரிக்கக் கவிதை விருது (2003-2004), தேசியப் புத்தக விருது (2014), தேசிய மனித நேய விருது (2015) உள்ளிட்ட பலவேறு விருதுகளை வென்றுள்ளார்.



## உலக வர்த்தக அமைப்பிற்கான (WTO) முதலாவது பெண் இயக்குநர்

- WTO அமைப்பின் தேர்வுக் குழுவானது தென்கொரியாவின் யோ மியுங்-ஹீ மற்றும் நைஜீரியாவின் கோசி ஒகோன்ஜோ இவியாலா (Yoo Myung-hee and Nigeria's Ngozi Okonjo Iweala) ஆகிய இரண்டு நபர்களைத் அடுத்தப் பொது இயக்குநருக்கான பதவிக்காக இறுதி செய்துள்ளதாக அறிவித்துள்ளது.
- WTO ஆனது 1995 ஆம் ஆண்டில் மரக்கேஷ் ஒப்பந்தத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.
- WTO-ன் உயரிய அதிகார அமைப்பு அமைச்சரவை மாநாட்டு அமைப்பாகும்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த அமைச்சரவை சந்திப்பின் முதலாவது மாநாடானது சிங்கப்பூரில் நடத்தப்பட்டது.



## ராம் விலாஸ் பஸ்வான் மறைவு

- சமீபத்தில் மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சராக இருந்த (2014 ஆம் ஆண்டு மே 26லிருந்து) ராம் விலாஸ் பஸ்வான் காலமானார்.
- பஸ்வான் 1969 ஆம் ஆண்டில் பீகார் சட்டசபையில் உறுப்பினராகப் பதவிப் பொறுப்பேற்றார்.
- இவர் 1977 ஆம் ஆண்டில் ஜனதா கட்சியின் உறுப்பினராக முதன்முறையாக மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் தேர்தலில் அதிக வித்தியாசத்தில் வெற்றி பெற்றதற்கான உலக சாதனையை கைவசம் கொண்டுள்ளார்.
- இவர் தொடர்ந்து 5 முறை பீகாரில் உள்ள ஹாஜிப்பூர் தொகுதியிலிருந்து ஒவ்வொரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் 2000 ஆம் ஆண்டில் லோக் ஜன்சக்தி கட்சியை ஏற்படுத்தினார்.
- இவர் முதலாவது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் (2001-2002) மத்திய சுரங்கத் துறை அமைச்சராகப் பணியாற்றினார்.



- இவர் 2004 ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இணைந்து, 2009 ஆம் ஆண்டு வரை மீண்டும் மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.

## பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு

- இரண்டு அமெரிக்கப் பொருளாதார அறிஞர்களான பால் R மில்குரோம் மற்றும் ராபர்ட் B வில்சன் ஆகியோர் இந்த ஆண்டின் பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசினைக் கூட்டாக வென்றுள்ளனர்.
- இந்த விருதானது இவர்களின் ஏலக் கோட்பாடு மற்றும் புதிய ஏல வடிவங்களின் கண்டுபிடிப்புகளுக்காக வேண்டி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இவர்கள் ரேடியோ அதிர்வெண்கள் போன்ற பாரம்பரியமான முறையில் பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதற்கு கடினமாக உள்ள வடிவத்திற்குப் பதிலாக ஒரு புதிய ஏல வடிவத்தை வடிவமைத்ததற்காக தங்களது கண்ணோட்டத்தைப் பயன்படுத்தி உள்ளனர்.
- இவர்களது கண்டுபிடிப்புகள் உலகம் முழுவதும் உள்ள விற்பனையாளர்கள், நுகர்வோர்கள் மற்றும் வரிசெலுத்துவோர்களுக்குப் பயனளித்து இருக்கின்றன.




## "பூமியைச் சரி செய்தல்" (Earthshot Prize) என்ற விருது

- பிரிட்டனின் இளவரசரான, கேம்பிரிட்ஜின் பிரபுவான வில்லியம் 50 மில்லியன் பவுண்டு மதிப்புடைய "பூமியைச் சரி செய்தல்" என்ற ஒரு பரிசை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இது உலகை மிகவும் அச்சுறுத்தி வரும் சில சுற்றுச்சூழல் சவால்களுக்கு வேண்டிய புத்தாக்கத் தீர்வுகளுக்குத் தேவையான நிதியினை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "பூமியைச் சரி செய்தல்" என்ற விருதானது நமது கோளிற்கு மிகவும் இலக்காக உள்ள 5 "எர்த் ஷாட்களை" மையமாகக் கொண்டுள்ளது.
- இயற்கையைப் பாதுகாத்தல் & மீட்டெடுத்தல், நமது காற்றைத் தூய்மையாக்குதல், நமது கடலை மீட்டெடுத்தல், கழிவுகளற்ற உலகைக் கட்டமைத்தல், நமது காலநிலையை நிர்ணயித்தல் ஆகியவை இந்த வாரத்தில் வெளியிடப் பட்ட 5 எர்த் ஷாட்டுகளாகும்.

❖ இந்த விருதானது "பூமியைச் சரி செய்வதை" அடைவதற்காக வேண்டி குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஏற்படுத்திய எந்தவொரு சிறப்புமிகு தீர்வுகளைக் கண்டுபிடித்தவர்களுக்கும் வழங்கப்பட இருக்கின்றது.

## ப்ளீட் விருது 2020

❖ இது விசாகப்பட்டினத்தில் உள்ள இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியத்தின் செயல்பாட்டுச் சுழற்சியின் வெற்றிகரமான உச்ச நிலையைக் குறிப்பதற்காக வேண்டி ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.

❖ இதற்காக 16 கோப்பைகளானது பல்வேறு செயல்பாட்டுப் பகுதிகளில் சிறப்புமிகு தன்மையை அங்கீகரிப்பதற்காக வழங்கப் பட்டுள்ளது.

❖ சிறந்த கப்பலுக்கான மிகவும் புகழ்பெற்ற கோப்பையானது இதர சிறந்த தலைமைத்துவமான கப்பல்களிடையே ஐஎன்எஸ் சஹயாத்ரி என்ற கப்பலுக்கு வழங்கப் பட்டுள்ளது. மேலும் இந்த விருது பாதுகாப்புக் கப்பல்கள் மற்றும் அதே வகுப்பைச் சேர்ந்த மற்ற இதர கப்பல்களுள் ஐஎன்எஸ் கோரா என்ற கப்பலுக்கும் வழங்கப் பட்டுள்ளது.

❖ இந்தியக் கடற்படைக் கப்பல்களான ஐராவத் மற்றும் கில்டன் ஆகியவை கூட்டாக சவாலான திட்டங்களை மேற்கொண்டதற்காகவும் சிறப்புமிகு உற்சாக உணர்வை வெளிக் காட்டியதற்காகவும் "சிறந்த உற்சாக உணர்வு கொண்ட கப்பல்" என்ற விருதை வென்றுள்ளன.



## விஜய ராஜே சிந்தியாவின் நினைவாக புதிய ரூ.100 மதிப்புள்ள நாணயம்

❖ இந்தியப் பிரதமர் அவர்கள் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 12 அன்று, விஜய ராஜே சிந்தியாவின் 100வது பிறந்த தின நினைவன்று, அவரது நினைவாக ரூ.100 நாணயத்தை வெளியிட்டுள்ளார்.

❖ குவாலியரின் ராஜமாதா என்று வெகு சிறப்பாக அறியப்படும் விஜய ராஜே சிந்தியா, பாரதிய ஜனதா கட்சியின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராவார்.

❖ இவர் குவாலியரின் கடைசி ஆட்சியாளரான மகாராஜா ஜிவாஜி ராவ் சிந்தியாவின் மனைவி ஆவார். இவர் அந்நில ப்பகுதியில் உயரிய மதிப்புடைய அரச குடும்பத்தினரில் ஒருவராக மதிப்பிடப் பட்டுள்ளார்.

❖ இவர் இந்தியப் பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.




## அமெரிக்காவில் வாழ்நாள் சாதனையாளர் விருது

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மனித நேயப் பற்றாளரான ஹரீஷ் கோடேசா அவர்களுக்கு சந்திரா நீஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது என்ற ஒரு விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இது ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ததற்காக வேண்டி அமெரிக்காவில் அவருடைய பணியை அங்கீகரிக்கின்றது.
- சந்திரா நீஸ் வாழ்நாள் சாதனையாளர் விருதானது ஒவ்வொரு வருடமும் வழங்கப் படுகின்றது.
- இது அனைத்து குழந்தைகளும் பாதுகாப்பு, இருப்பிடம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றைப் பெறுவதற்காக வேண்டி ஓய்வின்றிப் பணியாற்றுபவர்களைக் கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## 2020 ஆம் ஆண்டின் வனவுயிர் புகைப்படக் கலைஞர் விருது

- மகாராஷ்டிராவின் ஐஸ்வர்யா ஸ்ரீதர் என்பவர் இந்த விருதை வென்ற முதல் இந்தியர் ஆவார்.
- அவரது புகைப்படம் 'லைட்ஸ் ஆஃப் பேஷன்' (Lights of Passion) என்று பெயரிடப் பட்டது.
- இந்தப் புகைப்படமானது மேற்குத் தொடர்ச்சி மலையின் உட்பகுதியில் அருகிவரும் மின்மினிப் பூச்சிகளை மையமாகக் கொண்டுள்ளது.
- இவர் 'முதுகெலும்புகளற்ற உயிரினங்களின் நடத்தை' (Behaviour-Invertebrates) எனும் பிரிவின் கீழ் இவ்விருதை வென்றார்.
- இது லண்டனின் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்திற்குச் சொந்தமான ஒரு வருடாந்திர பன்னாட்டு வனவுயிர் (வனவிலங்கு) புகைப்படம் எடுத்தல் போட்டி ஆகும்.



## 50 மிகவும் செல்வாக்கு மிக்க இந்தியர்கள் 2020

- இந்தப் பட்டியலில் இடம் பிடித்த ஒரு சில அதிகாரிகளுள் பிரவீர் கிருஷ்ணாவும் (இ.ஆ.ப) ஒருவர்.
- தற்போது அவர் இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூட்டமைப்பின் (Tribal Cooperative Marketing Development Federation of India) நிர்வாக இயக்குநராக பணியாற்றி வருகிறார்.
- இந்த பட்டியல் ஃபேம் இந்தியா பத்திரிகை, ஆசியா போஸ்ட் மற்றும் பி.எஸ்.யூ வாட்ச் ஆகியவற்றால் தொகுக்கப் பட்டுள்ளன.

## செசல்ஸ்ஸின் புதிய அதிபர்

- இந்தியாவில் பிறந்த வேவல் ராம்கலாவன் அவர்கள் செசல்ஸின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இவரது தாத்தா இந்தியாவின் பீகாரைச் சேர்ந்தவராவார்.
- செசல்ஸ் என்பது இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு தீவுக் கூட்டமாகும்.



# விளையாட்டுச் செய்திகள்

## 2020 ரஷ்ய கிராண்ட் பிரிக்ஸ்



- 2020 ஆம் ஆண்டு ரஷ்ய கிராண்ட் பிரிக்ஸ் ஆனது ரஷ்யாவில் நடத்தப்பட்டது.
- இந்தப் போட்டியில் மெர்சிடஸ் அணியின் வால்டேரி போட்டாஸ் முதல் இடத்தையும் ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டப்பன் இரண்டாவது இடத்தையும் லீவிஸ் ஹாமில்டன் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

## பிரெஞ்சு ஓபன் 2020



- ரபேல் நடால் (ஸ்பெயின்) நோவாக் ஜோகோவிக் (செர்பியா) என்பவரை வீழ்த்தி 2020 ஆம் ஆண்டின் பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்றுள்ளார்.
- இது அவரது 13வது பிரெஞ்சு ஓபன் ஆண்களுக்கான ஒற்றையர் பட்டம் மற்றும் 20வது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும்.
- 2020 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபனின் மகளிர் பிரிவில், இகா ஸ்வியாடென் என்பவர் இறுதிப் பட்டத்தை வென்றுள்ளார்.
- கிராண்ட் ஸ்லாம் பட்டத்தைப் பெறும் போலந்து நாட்டைச் சேர்ந்த முதலாவது வீரர் இவராவார்.

## லீவிஸ் ஹாமில்டனின் சாதனை

- 6 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற லீவிஸ் ஹாமில்டன் மிகவும் வெற்றிகரமான பார்முலா ஒன் ஓட்டுநராக உருவெடுத்துள்ளார்.
- பிரிட்டிஷ் வீரரான லீவிஸ் ஹாமில்டன் 92வது பார்முலா 1 வெற்றியுடன் ஜெர்மனியின் மைக்கேல் சுமேக்கர் என்பவரை முந்தியுள்ளார்.
- மெர்சிடஸ் ஓட்டுநரான இவர் போர்ச்சுக்கல் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் பெராரி ஓட்டுநரான மைக்கேல் சுமேக்கர் என்பவரை முந்தி உள்ளார்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மூத்த குடிமக்கள் தினம் – அக்டோபர் 01

- 2020 ஆம் ஆண்டானது சர்வதேச மூத்த குடிமக்கள் தினத்தின் 30வது நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- இது மூத்த குடிமக்களின் வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவர்களின் பங்களிப்பு குறித்தும் அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கொள்ளை நோய் : வயது மற்றும் வயதாவது குறித்த விவகாரங்களை நாம் அணுகுவதை அது எவ்வாறு மாற்றும்?" (Pandemics: Do They Change How We Address Age and Ageing?) என்பதாகும்.




## தேசிய போதை மருந்து அடிமை எதிர்ப்பு தினம் – அக்டோபர் 02

- இது போதை மருந்துப் பயன்பாட்டைக் கண்டனம் செய்த காந்தியின் பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக கொண்டாடப் படுகின்றது.
- இத்தினத்தின் முக்கிய நோக்கம் போதை மருந்தற்ற இந்தியாவை உருவாக்குவதும் அதன் திறனைப் பாதுகாப்பதும் ஆகும்.




## உலக விண்வெளி வாரம் - அக்டோபர் 4 முதல் 10 வரை

- உலக விண்வெளி வாரம் என்பது பூமியின் விண்வெளி குறித்த ஒரு மிகப்பெரிய நிகழ்வாகும்.
- உலக விண்வெளி வாரமானது அக்டோபர் 4, 1957 அன்று தொடங்கப்பட்டது.
- மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் புவிச் செயற்கைக்கோள் ஸ்புட்னிக் 1 என்பது விண்ணிற்கு ஏவப்பட்டதைக் குறிக்க இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- சோவியத் யூனியனால் 1957 ஆம் ஆண்டில் விண்வெளியில் செலுத்தப்பட்ட மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைக்கோள் ஸ்புட்னிக் ஆகும்.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவானது "செயற்கைக்கோள்கள் வாழ்க்கையை மேம்படுத்துகின்றன" என்பதாகும்.




## உலக ஆசிரியர்கள் தினம் – அக்டோபர் 05

- உலக ஆசிரியர்கள் தினமானது ஆசிரியர்களின் நிலை குறித்து விவரிக்கும் 1966 ஆம் ஆண்டின் ஐஎல்ஓ/யுனெஸ்கோ பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டதின் நினைவு தினத்தை அனுசரிக்கின்றது.
- இத்தினமானது 1994 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 05 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- உலக ஆசிரியர்கள் தினமானது யுனிசெப், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, சர்வதேசக் கல்வி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து அனுசரிக்கப்படுகின்றது.

## உலகக் கட்டிடக் கலை தினம் – அக்டோபர் 05

- உலகக் கட்டிடக் கலை தினமானது ஐக்கிய நாடுகளின் உலக வாழ்விட தினத்துடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் அக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கள் அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது 1985 ஆம் ஆண்டில் ஒன்றிய சர்வதேச டெஸ் கட்டிடக் கலை அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “சிறந்த நகர்ப்புற எதிர் காலத்தை நோக்கி” என்பதாகும்.



## உலக வேளாண் விலங்குகள் தினம் – அக்டோபர் 02

- இது ஆசிய விலங்குகள் கூட்டிணைவுடன் சேர்ந்து சர்வதேச விலங்குகள் நல அமைப்பு மற்றும் உலக விலங்குகள் பாதுகாப்பு அமைப்பால் அனுசரிக்கப் பட்டது.
- இது தீவிர வேளாண் விவசாயம் மற்றும் வேளாண் விலங்குகளை மிக மோசமாக நடத்துதல் ஆகியவை மனிதர்களுக்கு மிகப் பெரிய அளவில் அச்சுறுத்தலாக அமையும் என்பது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது 1983 ஆம் ஆண்டு முதல் வேளாண் விலங்கு உரிமைகள் அமைப்பினால் ஒருங்கிணைக்கப் படுகின்றது.

## உலக பார்வை தினம் – அக்டோபர் 08

- இது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் 2வது வியாழனன்று அனுசரிக்கப் படுகின்றது. இந்த ஆண்டு இத்தினமானது அக்டோபர் 08 அன்று நிகழ்ந்தது.
- இத்தினமானது பார்வைக் குறைபாடு மற்றும் பார்வை இழப்பு ஆகியவை குறித்து ஒரு உலகளாவிய கவனத்தை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பார்வைக் குறைபாட்டைத் தடுப்பதற்கான சர்வதேச நிறுவனமானது உலகம் முழுவதும் வருடாந்திர உலக பார்வை தினத்தை அனுசரிப்பதில் முக்கியமான ஒரு தலைமைத்துவப் பண்பைக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பார்வையில் நம்பிக்கை" என்பதாகும்.




## இந்திய விமானப் படை தினம் – அக்டோபர் 08

- இது அக்டோபர் 08 அன்று அனுசரிக்கப் படுகின்றது. இந்த ஆண்டானது இந்திய விமானப் படை தினத்தின் 88வது நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- இந்திய விமானப் படை தினமானது முதன்முதலில் 1932 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இது அலுவல்பூர்வ மற்றும் பொது வெளியில் தேசியப் பாதுகாப்பின் எந்தவொரு அமைப்பிலும் இந்திய விமானப் படையின் விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய விமானப் படையானது, "பாரதிய வாயு சேனா" எனப்படுகின்றது.
- இது 5 செயல்பாட்டு மற்றும் 2 பணிக் கட்டுப்பாட்டகங்களாக வகைப்படுத்தப் பட்டு உள்ளது.

- இதனால் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் மேகதூத் நடவடிக்கை, விஜய் நடவடிக்கை-கோவா ஆக்கிரமிப்பு, கற்றாழை நடவடிக்கை, பூமாலை நடவடிக்கை ஆகியனவாகும்.
- இந்திய விமானப் படை "பெருமையுடன் ஆகாயத்தை வலம் வருதல்" என்ற முழக்கத்துடன் பணி புரிகின்றது




## அதி விரைவுப் படை எழுச்சி தினம் – அக்டோபர் 09

- அதிவிரைவுப் படையானது (RAF - Rapid Action Force) 1992 ஆம் ஆண்டில் சிஆர்பிஎப் படையின் ஒரு சிறப்புப் பிரிவாக உருவாக்கப் பட்டது.
- இது குறைவான வீரர்களைக் கொண்டு விரைவாகச் செயல்படுவதுடன் கலவரம் மற்றும் கலவரம் போன்ற நிகழ்வுகள் ஆகிய சூழ்நிலைகளைக் கையாளுவதற்காக வேண்டி பணியமர்த்தப் படுகின்றது.
- இது பொதுவாக சுழிய நேர எதிர்வினைப் படை என்றறியப் படுகின்றது.
- RAF ஆனது "உணர்திறன் காவல் துறையுடன் மனித இனத்திற்குப் பணியாற்றுதல்" என்ற முழக்கத்துடன் செயல்படுகின்றது.




## உலக முட்டை தினம் – அக்டோபர் 09

- இந்தத் தினமானது முட்டையின் பயன்கள் குறித்தும் மனிதனுக்கான ஊட்டச் சத்தில் அதன் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தத் தினமானது 1996 ஆம் ஆண்டில் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச முட்டை ஆணையத்தின் கருத்தரங்கில் ஏற்படுத்தப்பட்டது.

- இத்தினத்தில், உலக முட்டை தினமானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் 2வது வெள்ளியன்று அனுசரிக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துரு 'இன்றும் ஒவ்வொரு தினமும் உங்கள் முட்டையைச் சாப்பிடுங்கள்' என்பதாகும்.




## உலக அஞ்சல் தினம் – அக்டோபர் 09

- இது உலகம் முழுவதும் உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தின் உருவாக்கத்தின் நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- UPU (Universal Postal Union) ஆனது 1874 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் பெர்லினில் ஆரம்பிக்கப் பட்டது.
- இது 1969 ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற UPU காங்கிரஸினால் உலக அஞ்சல் தினமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நாங்கள் எப்போதும் தபாலைச் சேர்த்திருக்கிறோம்" (We Have Always Delivered) என்பதாகும்.
- இந்திய அரசானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 09 முதல் 15 வரை தேசிய அஞ்சல் வாரத்தை அனுசரிக்கின்றது.



## மரண தண்டனைக்கெதிரான உலக தினம் – அக்டோபர் 10

- இந்தத் தினமானது மரண தண்டனையின் ஒழிப்பு குறித்து விவாதிக்கின்றது. மேலும் இத்தினமானது மரண தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் கைதிகளின் நிலைமை மற்றும் சூழ்நிலைகள் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் உலக மரண தண்டனைக்கு எதிரான கூட்டமைப்பினால் அனுசரிக்கப்பட்டது.
- 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று, ஐரோப்பிய ஆணையமானது செப்டம்பர் 10 ஆம் தேதியை மரண தண்டனைக்கு எதிரான ஐரோப்பிய தினமாக அறிவித்து உள்ளது.




## உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07




*Source: Ministry of Agriculture, GoI*

- உலகப் பருத்தி தினமானது அக்டோபர் 7, 2019 ஆம் ஆண்டு முதல் உலகளவில் அனுசரிக்கப் படுகிறது.
- ஐந்து கண்டங்களில் 75க்கும் மேற்பட்ட நாடுகளில் வளர்க்கப்படும் ஒரு உலகளாவிய பண்டமாகப் பருத்தியின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜெனீவாவில் உள்ள உலக வர்த்தக அமைப்பினால் இந்நாள் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் தினத்தை 4 நாடுகள் அடங்கிய பருத்திக் குழுவான பெனின், புர்கினா பாசோ, சாட் மற்றும் மாலி ஆகியோர் இணைந்து தொடங்கினர்.

- உலக உற்பத்தியில் 80 சதவீதம் அளவிற்குப் பருத்தியானது பிரேசில், சீனா, இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வருகிறது.
- உலகப் பருத்தி உற்பத்தியில் இந்தியா சுமார் 23% உள்ளடக்கி உள்ளது.

## உலக மன நல தினம் – அக்டோபர் 10

- இது உலகம் முழுவதும் மனநலப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் மன நலத்திற்கு ஆதரவான முயற்சிகளை ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது மனநலப் பிரச்சினைகள் குறித்துப் பணியாற்றி வரும் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் அவர்களது பணியைக் குறித்துப் பேசுவதற்கும் உலகம் முழுவதும் வாழும் மக்கள் ஒரு ஆரோக்கியமான மன நலத்தைப் பெறுவதற்கு இன்னும் என்னனென்ன மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்துப் பேசுவதற்கும் வேண்டிய வாய்ப்புகளை வழங்குகின்றது.
- இத்தினமானது முதல்முறையாக உலக மன நலக் கூட்டமைப்பின் முன்முயற்சியினால் 1992 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான மன நலம்" மற்றும் மனநலத்தில் ஒரு அதிகரிக்கப்பட்ட முதலீடு என்பதாகும்.

## உலக வலசை போகும் (இடப் பெயர்வு) பறவைகள் தினம் – அக்டோபர் 10

- உலக வலசை போகும் பறவைகள் தினமானது உலகம் முழுவதும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது வலசை போகும் பறவைகள் மற்றும் அவற்றின் வாழிடங்களின் பாதுகாப்பு குறித்து உலகளாவிய அளவிலான கவனத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த உலகளாவிய திட்டமானது பறவைகளினால் எதிர் கொள்ளப்படும் பல்வேறு அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுகின்றது.
- 2006 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளானது மே மற்றும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை ஆகிய 2 குறிப்பிட்ட தினங்களை உலக வலசை போகும் பறவைகளின் தினமாக அனுசரிக்க முடிவு செய்தது.
- இந்த ஆண்டு இத்தினமானது மே 09 மற்றும் அக்டோபர் 10 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பறவைகள் நமது உலகத்தை இணைக்கின்றன" என்பதாகும்.



## சர்வதேச பெண் குழந்தைகள் தினம் – அக்டோபர் 11




- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று அக்டோபர் 11 ஆம் தேதியை சர்வதேச பெண் குழந்தைகள் தினமாக அறிவித்தது.
- இந்தத் தினமானது சர்வதேச அளவில் பெண் குழந்தைகளின் நலனுக்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டு இத்தினத்தின் கருத்துரு, "எனது குரல், எங்கள் சமத்துவ எதிர்காலம்" (My Voice, Our Equal Future) என்பதாகும்.

## உலக மூட்டு வீக்க (மூட்டு அழற்சி) தினம் – அக்டோபர் 12

- உலக மூட்டு வீக்க தினமானது உலகம் முழுவதும் மூட்டு வீக்கம் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "இது உங்கள் கைகளில் உள்ளது. நடவடிக்கை எடுங்கள்" என்பதாகும்.
- மூட்டு வீக்கம் என்பது ஒரு ஒற்றை நோய் அல்ல. இது எலும்பு இணைப்புகள், அந்த இணைப்புகளைச் சுற்றியுள்ள திசுக்கள் மற்றும் இதர இணைப்புத் திசுக்கள் ஆகியவற்றை பாதிக்கக் கூடிய 100 பல்வேறு நிலைகளுக்கு மேற்பட்டவற்றின் தொகுப்பாகும்.




## சர்வதேசப் பேரிடர் அபாயக் குறைப்பு தினம் – அக்டோபர் 13

- இது உலகம் முழுவதும் உள்ள மக்கள் மற்றும் சமூகங்கள் தாங்கள் பேரிடர்களுக்கு உட்படுவதை எவ்வாறு குறைக்கின்றனர் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அவர்கள் எதிர்கொள்ளும் அபாயங்களின் நிலையின் முக்கியத்துவம் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "எல்லாம் ஆளுகையைப் பொறுத்தது" (it's all about governance) என்பதாகும்.




## உலகத் தரங்கள் தினம் – அக்டோபர் 14, 2020

- இது சர்வதேசத் தரங்கள் என வெளியிடப்பட்ட தன்னார்வத் தொழில்நுட்பங்களை மேம்படுத்திய உலகம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான வல்லுநர்களின் கூட்டு முயற்சிக்கு மரியாதை செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது நுகர்வோர்கள், ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் தொழிற்துறையினரிடையே உலகப் பொருளதாரத்திற்கு தேவைப்படும் தரநிலையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 1970 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தரங்களுடன் கோளைக் காத்தல்" (Protecting the planet with standards) என்பதாகும்.




## சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் – அக்டோபர் 15

- முதலாவது சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினமானது 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 15 அன்று அனுசரிக்கப்பட்டது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தொலைநோக்குப் பார்வையைப் பூர்த்தி செய்வதற்கு கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கோவிட் – 19 நோய்த் தொற்று காலத்தில் கிராமப்புறப் பெண்களின் உறுதித் தன்மையைக் கட்டமைத்தல்" என்பது ஆகும்.

## உலக மாணவர்கள் தினம் – அக்டோபர் 15

- உலக மாணவர்கள் தினமானது ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவரான ஏபிஜெ அப்துல் கலாமின் பிறந்த தினமான அக்டோபர் 15 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- 2010 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் அக்டோபர் 15 ஆம் தேதியை உலக மாணவர்கள் தினமாக அறிவித்தது.
- இவர் இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார் (2002 - 2007).
- அரசியல் தலைவராக இருந்த போதும் இவர் ஒரு விஞ்ஞானி மற்றும் ஆசிரியர் ஆவார்.
- இவர் 1998 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அணு ஆயுதச் சோதனை “பொக்ரான்-II” என்ற சோதனையில் ஒரு முக்கியப் பங்காற்றினார். அதனால் இவர் இந்தியாவின் ஏவுகணை மனிதர் என்று அழைக்கப் படுகின்றார்.




## உலக உணவு தினம் – அக்டோபர் 16

- உலக உணவு தினமானது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO - Food and Agriculture Organization) நிறுவப்பட்டதை நினைவு கூறுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 17 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இதன் நோக்கம் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து உணவு முறையை உறுதி செய்வதாகும்.
- இது 1945 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டு FAO-ன் 75வது நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “வளர்ச்சியடை, ஊட்டமளித்தல், நீடித்தல், ஒன்றிணைதல்” என்பதாகும்.



## உலக கைகழுவுதல் தினம் – அக்டோபர் 15

- இந்த உலகளாவியப் பிரச்சாரமானது நோய்த் தடுப்பில் முக்கியப் பங்கு வகிக்கும் சோப்புகளைக் கொண்டு கைகழுவுதல் என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- முதலாவது உலகக் கைகழுவுதல் தினமானது 2008 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான உலக கைகழுவுதல் தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான கை சுகாதாரம்" என்பதாகும்.




## சர்வதேச மின்னணுக் கழிவு தினம் – அக்டோபர் 15

- மூன்றாவது சர்வதேச மின்னணுக் கழிவு தினமானது 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இந்தத் தினமானது 2018 ஆம் ஆண்டு முதல் கழிவு மின் மற்றும் மின்னணு மன்றத்தினால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இந்த ஆண்டில் இத்தினத்தின் கருத்துரு, "கல்வி" என்பதாகும்.

## ராஷ்டிரிய மகிளா கிஷான் திவாஸ் – அக்டோபர் 15

- இது வேளாண் துறையின் பல்வேறு கோணங்களில் பெண் விவசாயிகளின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக கொண்டாடப் படுகின்றது.
- ராஷ்டிரிய மகிளா கிசான் திவாஸ் ஆனது 2016 ஆம் ஆண்டு முதல் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தினால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இந்தக் கொண்டாட்டத்தின் போது, "முன்னேறும் முனைப்பு கொண்ட பெண் விவசாயிகளின் ஊக்கமளிப்புக் கதைகள்" குறித்த ஒரு மின்னணுப் புத்தகமும் வெளியிடப் பட்டுள்ளது.
- "மகிளா கிரிஷக் மற்றும் வேளாண் துறையில் அவரின் பங்களிப்புகள்" மற்றும் "வெற்றி பெற்ற பெண் விவசாயிகளின் உலக உதாரணங்கள்" என்ற 2 குறும்படங்களும் இதில் வெளியிடப் பட்டுள்ளன.

## உலக ஒவ்வாமை விழிப்புணர்வு நாள் - அக்டோபர் 16

- ❖ இது நம் சமூகங்களில் ஒவ்வாமையின் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஒவ்வாமை என்பது நோயெதிர்ப்பு மண்டலத்தின் மிகையுணர் திறன் (ஹைபர்சென்சிட்டிவிட்டி) கோளாறு ஆகும்.
- ❖ ஒரு நபரின் நோயெதிர்ப்பு அமைப்பானது பொதுவாக சுற்றுச்சூழலில் பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்களுடன் வினை புரியும் போது அவருக்கு ஒவ்வாமை ஏற்படலாம்.

## வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினம் - அக்டோபர் 17

- ❖ வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினத்தைப் பின்நோக்கிய வாக்கில் 1987 ஆம் ஆண்டின் அக்டோபர் 17 ஆம் தேதியன்று பாரீஸில் காணலாம்.
- ❖ 1992 டிசம்பர் 22 அன்று, பொதுச் சபையானது அக்டோபர் 17 ஆம் தேதியை வறுமை ஒழிப்புக்கான சர்வதேச தினமாக அறிவித்தது.
- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "அனைவருக்கும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் நீதியை அடைய வேண்டி ஒன்றிணைந்துச் செயல்படுவது" என்பதாகும்.




## தேசியப் பாதுகாப்புப் படை (NSG) நிறுவன தினம் – அக்டோபர் 15

- ❖ தேசியப் பாதுகாப்புப் படையானது (NSG - The National Security Guard) மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சிறப்பு வாய்ந்த ஒரு தீவிரவாத எதிர்ப்பு அமைப்பு ஆகும்.
- ❖ இது புளு ஸ்டார் நடவடிக்கை, தங்கக் கோவில் தாக்குதல் மற்றும் இந்திரா காந்தி படுகொலை ஆகியவற்றைத் தொடர்ந்து 1984 ஆம் ஆண்டு அக்டோபர் 15 அன்று ஏற்படுத்தப் பட்டது.
- ❖ இது "தீவிரவாத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுதல் மற்றும் உள்நாட்டுப் பிரச்சினைகளிலிருந்து மாநிலங்களைப் பாதுகாத்தல்" ஆகிய முக்கியப் பணிகளை மேற்கொள்கின்றது.
- ❖ NSG வீரர்கள் "கருப்புப் பூனைப் படை வீரர்கள்" என்றறியப் படுகின்றனர்.
- ❖ NSG ஆனது தனது பிராந்திய அமைப்பின் கீழ் மும்பை, சென்னை, ஹைதராபாத், கொல்கத்தா மற்றும் காந்தி நகர் ஆகிய 5 இடங்களில் தனது பிராந்திய மையங்களை அமைத்துள்ளது.
- ❖ இதன் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் பிளாக் தண்டர், அஸ்வமேத், ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், வஜ்ரசக்தி மற்றும் பிளாக் டோர்னாடோ ஆகியனவாகும்.

## அறிவுசார் சொத்துரிமைக் கல்வி வாரம் – அக்டோபர் 15 முதல் 23

- அறிவுசார் சொத்துரிமைக் கல்வி வாரமானது அக்டோபர் 15 முதல் அக்டோபர் 23 வரை அனுசரிக்கப் படுகின்றது.
- இது அறிவுசார் சொத்துரிமைத் துறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்தியக் கல்வி அமைச்சகத்தின் நிறுவனப் புத்தாக்க ஆணையமானது (IIC - Institution Innovation Council) அறிவுசார் சொத்துரிமைக் கல்வி வாரத்தை அனுசரிக்கின்றது.
- இந்த ஆணையமானது IIC 2.0 என்ற வருடாந்திர அறிக்கையையும் சமர்ப்பித்து இருக்கின்றது.
- மேலும் IIC 3.0 என்ற அறிக்கையின் வெளியீடும் நடத்தப் பட்டது.

## 14வது இந்திய-சர்வதேச உணவு மற்றும் வேளாண் வாரம்

- இந்திய-சர்வதேச உணவு மற்றும் வேளாண் வாரமானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 16 முதல் அக்டோபர் 22 வரை அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த இந்திய-சர்வதேச உணவு மற்றும் வேளாண் வாரத்தை அனுசரிப்பதன் நோக்கம் வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளில் பங்காளர்களின் பயன்பாடுகளுக்காக வேண்டி ஒரு தளத்தை உருவாக்குவதாகும்.
- இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பானது (CII - Confederation of Indian Industry) 'CII ஹைவ் காணொலி தளத்தில்' (CII HIVE virtual platform) தனது முதலாவது 'CII வேளாண் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் : இந்திய-சர்வதேச உணவு மற்றும் வேளாண் கருத்தரங்கு' என்ற ஒன்றை நடத்தியது.




## 3வது உலகப் புள்ளியியல் தினம் – அக்டோபர் 20

- 2010 ஆம் ஆண்டு பிப்ரவரி அன்று, ஐக்கிய நாடுகள் புள்ளியியல் ஆணையமானது உலகப் புள்ளியியல் தினத்தைப் பரிந்துரைத்தது.
- இது உலகின் முன்னேற்றத்திற்காக வேண்டி புள்ளியியலின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் தேதியன்று முதலாவது உலகப் புள்ளியியல் தினமானது அனுசரிக்கப் பட்டது.
- இது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அனுசரிக்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நாம் நம்பக் கூடிய தரவுடன் உலகை இணைத்தல்" என்பதாகும்.




## தேசிய ஒற்றுமை தினம் – அக்டோபர் 20

- இத்தினமானது நமது விரிவான எல்லைகளைப் பாதுகாக்கும் ஆயுதப் படை வீரர்களைக் கௌரவிப்பதற்காக வேண்டி அனுசரிக்கப்படுகின்றது.
- மேலும் இது சீனாவிற்கு எதிரான இந்திய – சீனப் போரின் போது இந்தியர்களால் வெளிக்காட்டப்பட்ட தேசிய ஒருங்கிணைப்பை நினைவு கூர்வதற்காகவும் வேண்டி அனுசரிக்கப் படுகின்றது.
- 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று சீன இராணுவம் இந்தியாவைத் தாக்கிய போது, இந்திய-சீனப் போர் தொடங்கியது.




## உலக எலும்புத் துளை நோய் தினம் – அக்டோபர் 20

- இந்தத் தினமானது எலும்புத் துளை நோய் மற்றும் வளர்சிதை மாற்ற எலும்பு நோய் ஆகியவற்றைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- இது சர்வதேச எலும்புத் துளை நோய் அமைப்பினால் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "THAT'S OSTEOPOROSIS" என்பதாகும்.
- எலும்புத் துளை நோயானது எலும்புகளை வலுவற்றதாகவும் எளிதில் உடையக் கூடியதாகவும் மாற்றுகின்றது. எனவே அவை சிறிய அளவில் விழுதல், மோதுதல், தும்மல் மற்றும் திடீர் இயக்கம் ஆகிய நிகழ்வுகளின் போது எளிதில் உடைகின்றன.



## சர்வதேச தலைமைச் சமையல்காரர்கள் தினம் – அக்டோபர் 20

- இந்தத் தினமானது ஆரோக்கியமான உணவினை உண்ணுவது குறித்து உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் புகழ்பெற்ற சமையற்கலைத் தொழிலைக் கௌரவித்து அதைக் கொண்டாடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்தப் பிரச்சாரத் தினத்தின் கருத்துரு, “எதிர் காலத்திற்கான ஆரோக்கியமான உணவு” என்பதாகும்.
- சர்வதேசத் தலைமை சமையல்காரர்கள் தினமானது 2004 ஆம் ஆண்டில் புகழ்பெற்ற தலைமை சமையற்காரர் மற்றும் உலக தலைமை சமையற்காரர்கள் சமூகக் கூட்டமைப்பின் தலைவரான டாக்டர் பில் காலாஹெர் (Dr Bill Gallagher) என்பவரால் உருவாக்கப் பட்டது.

## தேசியக் குடற்புழு நீக்கல் தினம் – அக்டோபர் 20

- தேசியக் குடற்புழு நீக்கல் தினமானது இந்தியாவில் பிப்ரவரி 10 மற்றும் அக்டோபர் 20 ஆகிய தினங்களில் அனுசரிக்கப்படுகின்றது.
- இது மண்ணின் மூலம் பரவும் புழுவினம் மற்றும் அதன் நோய்த் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மண்ணின் மூலம் பரவும் புழுவினங்களின் அபாயத்தில் உலகளவில் 1 முதல் 14 வயதுக்குட்பட்ட மொத்த குழந்தைகளில் 28% குழந்தைகள் இந்தியாவில் உள்ளனர்.
- இந்தியாவில் 68%ற்கும் மேற்பட்ட குழந்தைகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.




## அயோடின் குறைபாட்டு (பற்றாக்குறை) பிரச்சினைகள் தினம் – அக்டோபர் 21

- உலக அயோடின் பற்றாக்குறைத் தினமானது (IDD - Iodine Deficiency Day) உலக அயோடின் பற்றாக்குறை பிரச்சினைகள் தடுப்பு தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்தத் தினத்தின் நோக்கம் அயோடினின் போதுமான பயன்பாடு குறித்தும் அயோடினின் பற்றாக்குறையின் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பதாகும்.

- அயோடின் ஆனது நமது உடலில் தைராய்டு சுரப்பியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.
- இது ஒரு தேவையான உணவு கனிமப் பொருளாகும்.
- 1993 ஆம் ஆண்டில், IDDஐக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி உலகளாவிய உப்பு அயோடினாக்கமாத்தின் (salt iodization) ஒரு முதன்மை இடையீட்டு உத்தியானது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## காவல் துறை நினைவு தினம் – அக்டோபர் 21

- இந்தத் தினமானது நமது தேசத்திற்காக வேண்டி காவல் துறையினர் மேற்கொண்ட அர்ப்பணிப்பு (விசுவாசம்) மற்றும் பிரத்தியேக தியாகம் ஆகியவற்றைக் கௌரவிப்பதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது லடாக் பகுதியில் 1959 ஆம் ஆண்டில் வசந்த காலத்தின் போது சீன நாட்டு வீரர்களால் மறைந்திருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த சிஆர்பிஎப் வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.

## உலக ஆற்றல் நாள் - அக்டோபர் 22

- உலகளாவிய அளவில் ஆற்றல் தொடர்பான சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டி இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இது முதலில் 2012 ஆம் ஆண்டின் உலக ஆற்றல் மன்றம் என்ற மாநாட்டில் அறிவிக்கப் பட்டது.
- இந்த ஆண்டின் உலக ஆற்றல் வாரமானது 'ஆற்றல் சமூகங்களை இணைத்தல்' (Connecting Energy Societies) என்ற கருத்துருவின் கீழ் அக்டோபர் 7 முதல் 9 வரை ஒரு இணைய வழி நிகழ்வாக மட்டுமே நிகழ்ந்தது.

## பன்னாட்டுத் திக்குவாய் விழிப்புணர்வு நாள் - அக்டோபர் 22

- திக்குதல் என்பது ஒரு தகவல்தொடர்பு கோளாறு ஆகும். இதில் மீண்டும் மீண்டும் - அல்லது ஒலிகள் மற்றும் வார்த்தைகளின் அசாதாரண நிறுத்தங்கள் – போன்றவை பேச்சின் ஓட்டத்தை உடைக்கின்றன.
- கடல் பச்சை வண்ண நாடாவானது திக்குவாய் குறித்த விழிப்புணர்வைக் குறிக்க பயன்படுத்தப் படுகிறது.
- இந்த ஆண்டின் கருத்துருவானது "சொற்களின் பயணம் - பின்னடைவு மற்றும் மீளுதல்" (Journey of Words - Resilience and Bouncing Back) என்பதாகும்.



## தேசிய மோல் தினம் - அக்டோபர் 23

- இது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 23 அன்று காலை 6:02 மணி முதல் மாலை 6:02 மணி வரை கொண்டாடப்படுகிறது.
- 2020 ஆம் ஆண்டிற்கான மோல் தினத்தின் (Mole day) கருத்துரு 'மோல்ஜில்லா (MOLEzilla)' என்பது ஆகும்.
- இந்நாள் அவகாட்ரோவின் எண்ணை (6.02 x 1023) நினைவு கூர்கிறது.
- இது வேதியியலில் அளவிடப் பயன்படும் ஒரு அடிப்படை அலகாகும்.
- இது எந்தவொருப் பொருளின் ஒற்றை மோலில் இருக்கும் துகள்களின் எண்ணிக்கையை வரையறுப்பதாகும்.
- ஏழு அடிப்படை எஸ்ஐ (SI) அலகுகளில் மோலும் ஒன்றாகும்.




## சர்வதேசப் பனிச் சிறுத்தை நாள் - அக்டோபர் 23

- பனிச்சிறுத்தையானது மனிதனின் சிறந்த நண்பன் என்று அழைக்கப் படுகிறது.
- கிர்கிஸ்தானின் பிஸ்கேக்கில் (Bishkek) நடைபெற்ற முதல் உலகளாவிய பனிச் சிறுத்தை மன்றத்தில் இது அறிவிக்கப் பட்டது.
- உலகளாவிய பனிச்சிறுத்தை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டம் கிர்கிஸ்தான் அரசால் துவங்கப் பட்டது ஆகும்.
- இந்தத் திட்டமானது "2020 ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பான 20" (Secure 20 by 2020) என்ற முயற்சியின் கீழ் பனிச் சிறுத்தைக்கான 20 நிலப்பரப்புகளைப் பாதுகாக்கிறது.
- இந்தியாவானது இந்த திட்டத்தில் கையொப்பமிட்ட ஒரு நாடாகும்.
- இந்தத் திட்டத்தில் கையெழுத்திட்ட மற்ற நாடுகள் சீனா, உஸ்பெகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், மங்கோலியா, கஜகஸ்தான், பூடான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகியனவாகும்.
- இந்த நாடுகள் அனைத்தும் பனிச் சிறுத்தை வாழிடங்களை கொண்டுள்ளன.
- இந்த நாடுகள் பிஸ்கேக் பிரகடனத்தில் (Bishkek Declaration) கையொப்பமிட்டுள்ளன.
- 2015 ஆம் ஆண்டானது சர்வதேச பனிச் சிறுத்தையின் ஆண்டாக அறிவிக்கப் பட்டு இருந்தது.
- உலகளாவிய பனிச் சிறுத்தை எண்ணிக்கையில் இந்தியாவில் பத்து சதவீதம் உள்ளது.
- இது இந்தியாவின் வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டம், 1972 என்ற சட்டத்தின் அட்டவணை ஒன்றின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இந்தியாவில் பனிச் சிறுத்தை பாதுகாப்புத் திட்டமானது 2009 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- பனிச் சிறுத்தைகள் காணப்படும் மாநிலங்களில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

- அவை அருணாச்சலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், சிக்கிம், உத்தரகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியனவாகும்.




## ஐக்கிய நாடுகள் தினம் – அக்டோபர் 24

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இத்தினமானது நடைமுறைக்கு வந்த ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டானது (2020) ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெற்றிகரமான செயல்பாட்டின் 75வது ஆண்டைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நமக்கு தேவையான எதிர்காலம், நமக்குத் தேவையான ஐக்கிய நாடுகள் : பலதரப்பிற்கான நமது கூட்டுப் பொறுப்புடைமையை உறுதி செய்தல்" என்பதாகும்.
- இந்தத் தினமானது இரண்டாம் உலகப் போரின் நேச நாடுகள் தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- உலகப் போரின் நேச நாடுகள் 1942 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பை ஏற்படுத்த முயற்சி செய்தன.
- நேச நாடுகளின் முடிவுகள் ஐக்கிய இராஜ்ஜியம், சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்காவினால் கட்டுப்படுத்தப் படுகின்றன.
- இந்த மூன்று நாடுகளும் "மிகப்பெரிய 3 நாடுகள்" என்றும் அழைக்கப்படுகின்றன.



- சீனாவுடன் சேர்த்து இந்த 4 நாடுகளும் "ஐக்கிய நாடுகளின் 4 காவலர்கள்" என்று அழைக்கப் படுகின்றன.
- ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகியவை அச்சு நாடுகளாகும்.

## ஒலி ஒளிப் பாரம்பரியத்திற்கான உலக தினம் – அக்டோபர் 27

- இது நமது எதிர்காலத் தலைமுறையினருக்கு வேண்டி நமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் ஒலி-ஒளிப் பாதுகாப்புத் தொழில்சார் வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோரைக் கௌரவிப்பதற்காக ஒலி-ஒளி சார்பான ஆவணக் காப்பக ஒத்துழைப்பு ஆணையம் மற்றும் யுனெஸ்கோ ஆகிய இரண்டின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உலகிற்கான உனது சாளரம்" என்பது ஆகும்.




## காலாட் படை தினம் – அக்டோபர் 27

- காலாட் படை தினமானது 1947 ஆம் ஆண்டில் ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தானிற்கு எதிரான இந்திய இராணுவத்தின் காலாட் படை பிரிவின் முக்கியமான தியாகங்களை அனுசரிப்பதற்காக வேண்டி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 27 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது காலாட் படை நடவடிக்கை இதுவாகும்.
- மேலும் இத்தினமானது காலாட் படையின் தனித்துவமான துணிவு மற்றும் நாட்டிற்கான அர்ப்பணிப்புச் சேவை ஆகியவற்றையும் அனுசரிக்கின்றது.



## உலக போலியோ (இளம்பிள்ளை வாதம்) தினம் - அக்டோபர் 24

- 2020 ஆம் ஆண்டின் உலக போலியோ தினத்திற்கான கருத்துரு 'முன்னேற்றக் கதைகள்: கடந்த காலமும் நிகழ்காலமும்' என்பதாகும். மற்றும் சில இடங்களில் அது 'போலியோவுக்கு எதிரான வெற்றி உலக ஆரோக்கியத்திற்கு கிடைத்த வெற்றி' என்றும் உள்ளது.
- ரோட்டரி இன்டர்நேஷனல் என்ற நிறுவனத்தால் ஜோனாஸ் சால்க் என்பவர் பிறந்ததை நினைவு கூரும் வகையில் இது நிறுவப் பட்டுள்ளது
- இவர் போலியோமைலிடிஸுக்கு எதிராக தடுப்பூசி ஒன்றை உருவாக்கிய முதல் குழுவிற்கு தலைமைத் தாங்கியவர் ஆவார்.
- 1988 ஆம் ஆண்டில், ரோட்டரி இன்டர்நேஷனல் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்புகளால் உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியானது தொடங்கப்பட்டது.
- போலியோ பெரும்பாலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கிறது.
- போலியோ வைரஸில் மூன்று வகைகள் உள்ளன (வகை 1, வகை 2 மற்றும் வகை 3).
- வகை 2 மற்றும் வகை 3 வைரஸ்கள் உலகளவில் ஒழிக்கப்பட்டு விட்டதாக அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- உலகில் 3 நாடுகள் மட்டுமே போலியோ தொற்றைக் கொண்டுள்ளன.
- அவை பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகும்.
- 2014 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்து இந்தியா போலியோ நீக்கப் பட்டதற்கானச் சான்றிதழைப் பெற்றது.

## ஜம்மு காஷ்மீர் இணைப்பின் 73வது நினைவு தினம் – அக்டோபர் 26

- ஜம்மு காஷ்மீர் மக்கள் இந்திய ஒன்றியத்துடன் ஜம்மு காஷ்மீர் இணைக்கப் பட்டதின் 73வது நினைவு தினத்தைக் கொண்டாடியுள்ளனர்.
- இந்தத் தினமானது ஜம்மு காஷ்மீரின் அப்போதைய ஆட்சியாளரான மகாராஜா ரஞ்சித் சிங் அவர்கள் அப்பகுதியை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பதற்காக ஒரு இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வகையில் இந்த தினம் இந்திய வரலாற்றில் ஒரு பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட ஒரு தினமாகக் குறிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டில் இத்தினமானது விடுதலை பெற்றதிலிருந்து முதன்முறையாக ஒரு பொது விடுமுறை தினமாக அனுசரிக்கப்பட்டது.



## உலக ஆயுதப் பரவல் குறைப்பு வாரம்

- இது ஐக்கிய நாடுகள் சபை நிறுவப் பட்டதை நினைவில் கொண்டு அக்டோபர் 24 முதல் 30 வரை கொண்டாடப்படுகிறது.
- இது ஆயுதக் குவிப்பு பிரச்சினைகள் மற்றும் அவற்றின் குறுக்கு வெட்டு விவகாரங்கள் மீதான முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வின் சிறந்த புரிதல் ஆகியவற்றை ஊக்குவிக்க முற்படுகிறது.

## லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் – 2020

- லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரமானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 27 முதல் நவம்பர் 02 வரை அனுசரிக்கப்பட உள்ளது.
- இந்த வாரமானது குடிமக்கள் பங்கேற்பின் மூலம் பொது வாழ்வில் நேர்மை மற்றும் கடமை தவறாமையை நோக்கிய பொறுப்புடைமை ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, “சட்டாரக் பாரத், சம்ரித் பாரத்” என்பதாகும்.
- இது விழிப்புணர்வு இந்தியா, வளமான இந்தியா என்பதைக் குறிக்கின்றது.




## 59வது ITBPயின் உருவாக்க தினம் – அக்டோபர் 24

- இந்தோ – திபெத்திய எல்லைக் காவல் துறை (Indo-Tibetan Border Police - ITBP) என்பது திபெத்துடன் இந்தியா பகிர்ந்துள்ள எல்லையைப் பாதுகாக்கும் இந்தியாவின் முதன்மையான எல்லை ரோந்து அமைப்பாகும்.
- ITBP ஆனது 1962 ஆம் ஆண்டில் சீனாவின் ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் ஏற்படுத்தப் பட்டது.
- இது சிஆர்பிஎப் சட்டத்தின் கீழ், 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று ஏற்படுத்தப் பட்டது.
- இது இந்தியாவின் மத்திய ஆயுதக் காவல் படைகளில் அல்லது துணை இராணுவப் படைகளில் ஒன்றாகக் கருதப் படுகின்றது.
- இந்தியாவில் சிஏபிஎப் (CAPF) என்பது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் 5 பாதுகாப்புப் படைகளின் ஒரு பொதுவான பெயராகக் குறிக்கப் படுகின்றது.
- இவற்றின் முக்கியப் பணி உள்நாட்டு அச்சுறுத்தல்களுக்கு எதிராக தேச நலனைப் பாதுகாப்பதாகும்.
- இதர மற்ற படைகள் பின்வருமாறு : சாஸ்திரா சீமா பால், எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வ் காவல் படை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை, இந்தோ-திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படை, அசாம் ரைபில்ஸ் மற்றும் தேசியப் பாதுகாப்புப் படை ஆகியவையாகும்.




## சர்வதேச தூதர்கள் தினம் – அக்டோபர் 24

- இது ஐக்கிய நாடுகள் தினமாகவும் அனுசரிக்கப் படுகின்றது.
- இது முதன்முதலில் 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று பிரேசிலியாவில் அனுசரிக்கப் பட்டது.
- இது முதன்முறையாக இந்தியக் கவிஞர் தூதரான அபய்.K அவர்களால் முன்மொழியப் பட்டது.
- இந்தியா அக்டோபர் 09 ஆம் தேதியை இந்திய அயல்நாட்டுச் சேவை தினமாக அனுசரிக்கின்றது.
- இத்தினமானது 1946 ஆம் ஆண்டு இந்திய அமைச்சரவையால் அயல்நாட்டுப் பணி ஏற்படுத்தப் பட்ட தினத்தை நினைவு கூர்வதற்காக அனுசரிக்கப் படுகின்றது.

## உலக பக்கவாத தினம் – அக்டோபர் 29

- பக்கவாதமானது உலகில் ஏற்படும் இறப்புகளுக்கு 2வது மிகப்பெரிய காரணமாக விளங்குகின்றது.
- இதன் வருடாந்திர நிகழ்வானது உலகப் பக்கவாத அமைப்பால் (World Stroke Organization - WSO) 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- WSO ஆனது 2010 ஆம் ஆண்டில் பக்கவாதத்தை ஒரு பொதுச் சுகாதார அவசர நிலையாக அறிவித்தது.

## சர்வதேச இணைய தினம் - அக்டோபர் 29

- இது 1969 ஆம் ஆண்டில் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்கு முதல் மின்னணு செய்தி அனுப்பப்பட்ட தினத்தைக் குறிக்கிறது.
- லாஸ் ஏஞ்சல்சில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் மாணவரான சார்லி கிலைன் என்பவர் முதன்முதலில் ஒரு மின்னணுச் செய்தியை அனுப்பினார்.
- அவர் அனுப்பிய அந்தச் செய்தி "உள்நுழைவு" (login) என்ற ஒரு வார்த்தையாகும்.

## உலக சிக்கன தினம் / சேமிப்பு தினம் – அக்டோபர்30

- இத்தாலியின் மிலனில் 1924 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதலாவது சர்வதேச சிக்கன மாநாட்டின் இறுதியில் அக்டோபர் 31 ஆம் தேதியானது உலக சிக்கன தினமாக அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவில் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று அப்போதையப் பிரதமரான இந்திரா காந்தி மறைந்ததையடுத்து இத்தினமானது அக்டோபர் 30 அன்று அனுசரிக்கப் படுகின்றது.

- இது நாட்டின் பொருளாதாரம் மற்றும் தனிநபர்களுக்கான சேமிப்பின் முக்கியத்துவத்தை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “நீங்கள் சிறிதாகச் சேமித்தால், பெரிய நிகழ்வுகள் உங்களைப் பின்தொடரும்” என்பதாகும்.




## உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31

- சீனாவின் ஷாங்காயில் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று இத்தினம் தொடங்கப் பட்டதிலிருந்து இந்த ஆண்டு (2020) அதன் ஏழாவது உலகளாவியக் கொண்டாட்டம் ஆகும்.
- 2020 ஆம் ஆண்டிற்கான கருத்துரு ‘எங்கள் சமூகங்களையும் நகரங்களையும் மதிப்பிடுதல்’ என்பதாகும்.

## தேசிய ஒற்றுமை தினம் - அக்டோபர் 31

- இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இது 2014 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இவர் சுதந்திர இந்தியாவின் முதல் துணைப் பிரதமரும் முதல் உள்துறை அமைச்சரும் ஆவார்.
- ஏறக்குறைய 560 சுதேச மாநிலங்களை இந்தியாவுடன் ஒருங்கிணைப்பதில் படேல் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தார்.
- 2018 ஆம் ஆண்டில் படேலின் 143வது ஆண்டு விழாவில், பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தில் ஒற்றுமைக்கான சிலையைத் திறந்து வைத்தார்.
- இது உலகின் மிக உயரமான சிலை ஆகும். இது 182 மீட்டர் (597 அடி) உயரம் கொண்டது ஆகும்.
- இது நர்மதை ஆற்றில் கெவடியா பகுதியில் அமைந்துள்ளது. மேலும் இது சர்தார் சரோவர் அணையைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது.



# இதரச் செய்திகள்

## உலக அபாய அறிக்கை 2020

- உலக அபாய அறிக்கை 2020 (WRI - World Risk Index) என்ற அறிக்கையின் படி மொத்தமுள்ள 181 நாடுகளில் இந்தியா 89வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டு உள்ளது.
- WRI ஆனது ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் மனிதப் பாதுகாப்பு மையத்துடன் இணைந்து மேம்படுத்தப் பட்டுள்ளது. இது அமைதி மற்றும் ஆயுதப் புரட்சிக்கான சர்வதேச சட்ட அமைப்பினால் கணக்கிடப்படுகின்றது.
- இதில் வனுாட்டுவா மற்றும் டோங்கா ஆகிய நாடுகள் முன்னிலையிலும் கத்தார் நாடு கடைசி இடத்திலும் உள்ளன.
- WRI என்பது "கட்டாய இடமாற்றல் மற்றும் இடப்பெயர்வு" மீது சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் உலக அபாய அறிக்கை 2020 என்ற அறிக்கையின் ஒரு பகுதி ஆகும்.
- இந்தியாவானது கடுமையான பேரிடர்கள், ஏற்றுக் கொள்ளும் திறனில் உள்ள குறைபாடு, பேரிடர்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் இருக்கும் குறைபாடு ஆகிய வரிசையில் இலங்கை, பூடான், மாலத் தீவுகள் ஆகிய நாடுகளுக்குப் பின்னால் உள்ளது.
- ஓசானியா, தென்கிழக்கு ஆசியா, மத்திய அமெரிக்கா, மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்கா ஆகியவை உலகளாவிய அளவில் முக்கியமான பகுதிகளாகும்.

## என்எஸ்ஓ நேரப் பயன்பாட்டுக் கள ஆய்வு 2019

- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் வரை முதலாவது நேரப் பயன்பாட்டுக் கள ஆய்வை நடத்தி உள்ளது.
- இந்த ஆய்வின்படி, 92% இந்தியப் பெண்கள் மற்றும் 27% ஆண்கள் மட்டுமே வேலைவாய்ப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.
- 22% பெண்கள் மட்டுமே வேலைவாய்ப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### *பங்கேற்பு குறித்த தரவு*

- வேலைவாய்ப்பு தொடர்பான நடவடிக்கைகள்
  - ஊரகப் பகுதி – ஆண்கள் 69.7% மற்றும் பெண்கள் 22.5%
  - நகர்ப்புறப் பகுதி – ஆண்கள் 73% மற்றும் பெண்கள் 19.9%
- ஊதியமற்ற வீட்டு வேலைகள்
  - ஊரகப் பகுதி – ஆண்கள் 29.2% மற்றும் பெண்கள் 93.2%
  - நகர்ப்புறப் பகுதி – ஆண்கள் 22.2% மற்றும் பெண்கள் 38.8%
- அசாம், கோவா, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஊதியமற்ற வீட்டு வேலைகள் சதவீதமானது அதிகமாக உள்ளது.




## இந்தியாவில் குற்றங்கள் குறித்த அறிக்கை

- தேசியக் குற்ற ஆவணக் காப்பகமானது "இந்தியாவில் குற்றங்கள் 2019" என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களானது 7.3% என்ற அளவில் அதிகரித்துள்ளது.

### *மேற்கோள்கள்*

- உத்தரப்பிரதேச மாநிலமானது, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பட்டியல் வகுப்பினருக்கு எதிரான குற்றங்கள் ஆகிய 2 பிரிவுகளிலும் அதிக எண்ணிக்கையிலான குற்ற நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

- மேலும், உத்தரப் பிரதேசமானது போக்சோ சட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளுக்கு எதிரான அதிக எண்ணிக்கையிலான குற்றங்களைப் பதிவு செய்துள்ளது. இதற்கு அடுத்து மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இது குறித்து அதிக எண்ணிக்கையிலான குற்றங்களைப் பதிவு செய்துள்ளன.
- உத்தரப் பிரதேசமானது அதிக எண்ணிக்கையிலான அமில வீச்சு செயல்களைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து மேற்கு வங்காளமானது அதிக அளவிலான அமில வீச்சு செயல்களைக் கொண்டுள்ளது.
- உத்தரப் பிரதேசமானது அதிக எண்ணிக்கையிலான பட்டியல் இனத்தவருக்கு எதிரான குற்றங்களைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து இராஜஸ்தான், பீகார் ஆகியவை அதிக அளவிலான பட்டியல் இனத்தவருக்கு எதிரான குற்றங்களைக் கொண்டுள்ளது.
- மேலும் உத்தரப் பிரதேசமானது அதிக அளவிலான வரதட்சணை நிகழ்வுகளைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து பீகார் அதிக அளவிலான வரதட்சணை நிகழ்வுகளைக் கொண்டுள்ளது.
- அசாம் ஆனது பெண்களுக்கு எதிரான அதிக குற்ற விகிதங்களைக் கொண்டுள்ளது.
- இராஜஸ்தான் ஆனது பட்டியல் இனத்தவருக்கு எதிரான அதிகக் குற்ற விகிதத்தைக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், குற்ற விகிதமானது 58.8% ஆக இருந்தது. இது 2019 ஆம் ஆண்டில் 62.4% ஆக அதிகரித்துள்ளது.
- தலித் பெண்களுக்கு எதிரான அதிக எண்ணிக்கையிலான வன்புணர்வு விகிதமானது இராஜஸ்தான் மாநிலத்தில் பதிவாகியுள்ளது. இதற்கு அடுத்த உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவு வன்புணர்வு நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

## இந்தியாவில் சுகாதாரம் குறித்த ஆய்வு

- மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகமானது "இந்தியாவில் சுகாதாரம்" என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் சுகாதாரத் துறை குறித்த அடிப்படையான அளவு சார்ந்த தகவலைத் திரட்டுவது என்பது இதன் முக்கிய நோக்கமாகும்.
- இதன் படி, பார்சி சமூகமானது உடல் பாதிப்பிற்கு எளிதில் (31.1%) உள்ளாகக் கூடியவர்களாக உள்ளனர்.
- இதர சமூகங்களுக்கான இந்த எண்ணிக்கை ஆனது சமணர்கள் 11.2%, சீக்கியர்கள் 11%, கிறிஸ்துவர்கள் 10.5%, முஸ்லீம்கள் 8.1%, பவுத்தர்கள் 8%, இந்துக்கள் 7.2% என்று உள்ளது.
- இந்த ஆய்வின்படி ஏறத்தாழ 7.5% இந்தியர்கள் உடல் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடியவர்களாக உள்ளனர்.

| Religion | Male | Female | Person |
|---|---|---|---|
| Hindu | 65 | 79 | 72 |
| Muslim | 70 | 93 | 81 |
| Christian | 89 | 122 | 105 |
| Sikh | 94 | 127 | 110 |
| Jain | 109 | 115 | 112 |
| Buddhist | 45 | 113 | 80 |
| Zoroastrian | 257 | 359 | 311 |
| Others | 83 | 54 | 69 |
| All | 67 | 83 | 75 |

Number per 1,000 persons reporting ailments (PAP) during the last 15 days by religion (Source: Survey report)

## CPCB-யின் 46வது நிறுவன தினம்

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது நீர் (மாசுக் கட்டுப்பாடு & தடுப்பு) சட்டம், 1974 என்பதின் கீழ் 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று ஏற்படுத்தப்பட்டது.
- இது காற்று (மாசுக் கட்டுப்பாடு & தடுப்பு) சட்டம், 1981 என்பதின் கீழ் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளைப் பெறுகின்றது.
- இது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 என்ற சட்டத்தின் விதிமுறைகளின் கீழ், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்குத் தொழில்நுட்ப சேவைகளை அளிப்பதற்காகவும் பகுதிகளை உருவாக்குவதற்காகவும் வேண்டி பணியாற்றுகின்றது.

## மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் 2020 – அக்டோபர் 1 – 30

- அக்டோபர் மாதமானது மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இது மார்பகப் புற்று நோயின் ஆரம்ப காலக் கண்டுபிடிப்பு, அதன் சிகிச்சை முறைகள், உயிரைக் காப்பாற்ற உதவும் தடுப்பு முறைகள் ஆகியவவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி செய்கின்றது.
- மேமோகிராபி என்பது மார்பகத்தில் இருக்கும் எந்தவொரு பிரச்சினையையும் கண்டறிய உதவும் ஒரு X-கதிராகும்.

## கார்பன் சமத்துவமின்மையை எதிர்கொள்தல் அறிக்கை

- ஆக்ஸ்பேம் சர்வதேச நிறுவனம் மற்றும் ஸ்டாக்ஹோம் சுற்றுச்சூழல் நிறுவனம் ஆகியவை “கார்பன் சமத்துவமின்மையை எதிர்கொள்தல்” என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

**Figure 1: Share of cumulative emissions from 1990 to 2015 and use of the global carbon budget for 1.5C linked to consumption by different global income groups**




Per capita income threshold (SPPP2011) of richest 1%: $109k; richest 10%: $38k; middle 40%: $6k; and bottom 50%: less than $6k.
Global carbon budget from 1990 for 33% risk of exceeding 1.5C: 1,205Gt.

### *1990லிருந்து 2015 வரையிலான தரவுப் பகுப்பாய்வு*

- மனித இனத்தின் செல்வமிக்க 1% மக்கள் ஒட்டுமொத்தமாக 15% உமிழ்வுகளுக்குப் பொறுப்பாக உள்ளனர். ஆனால் 50% ஏழை மக்கள் 7% உமிழ்வுகளுக்கு மட்டுமே பொறுப்புடையவர்களாக உள்ளனர்.
- செல்வமிக்க 10% மக்கள் உலகளாவிய அளவில் 31% கார்பன் பட்ஜெட்டை அழித்துள்ளனர். ஆனால் ஏழை மக்களில் 50% நபர்கள் 4% அளவில் மட்டுமே கார்பன் பட்ஜெட்டைப் பயன்படுத்தியுள்ளனர்.
- கார்பன் பட்ஜெட் என்பது ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையை வரம்பிற்குள் வைத்திருப்பதற்காக குறிப்பிட்ட காலத்திற்குள் அனுமதிக்கப்படும் ஒட்டுமொத்த கார்பன் டை ஆக்ஸைடின் ஒரு அலகாகும்.
- செல்வமிக்க 10% நபர்கள் 46% அளவிற்கு உமிழ்வு வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளனர். ஆனால் ஏழைகளில் 50% நபர்கள் 6% உமிழ்வுகளுக்குக் காரணமாக உள்ளனர்.

### *இந்தியா மற்றும் இதர நாடுகள்*

- ஒரு இந்தியர் வருடாந்திரமாக 1.97 டன்கள் அளவிற்கு கார்பன் டை ஆக்ஸைடை உமிழ்கின்றார். மாறாக அமெரிக்கா மற்றும் கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள் 16 டன்களுக்கு மேலான $CO_2$ வாயுவை உமிழ்கின்றனர்.
- செல்வமிக்க 10% இந்தியர்களின் தலா $CO_2$ உமிழ்வுகளானது 2018 ஆம் ஆண்டில் 4.4 டன்களாக இருந்தது.
- மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் செல்வமிக்க 10% அமெரிக்கர்களின் தலா உமிழ்வுகளானது 52.4 டன்களாகவும், அது செல்வமிக்க இந்தியர்களை விட 12 மடங்கு அதிகமாகவும் உள்ளது.
- இந்தியாவில் தலா தனிநபர் உமிழ்வுகளானது ஐரோப்பிய ஒன்றியத்தின் (6.78 டன்கள் $CO_2$) உமிழ்வில் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே உள்ளது. அது இந்தியாவை உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளிடையே மிகக் குறைந்த தலா உமிழ்வாளராக ஆக்குகின்றது.
- சீனாவின் தலா உமிழ்வுகளானது 7.95 டன்கள் $CO_2$ உமிழ்வு/ஒரு நபர் என்ற அளவில் உள்ளது

## "இந்தியா என்ன உணவு உட்கொள்கின்றது" அறிக்கை

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் தேசிய ஊட்டச்சத்து மையம் ஆகியவை இணைந்து சமீபத்தில் "இந்தியா என்ன உணவு உட்கொள்கின்றது" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளன.

### *முக்கியக் கண்டுபிடிப்புகள்*

- இந்தியாவின் நகர்ப்புற மையங்கள் ஒரு நாளைக்கு 51.6 கிராம் கொழுப்பை உட்கொள்கின்றன.
- ஊரக மையங்கள் ஒரு நாளைக்கு 36 கிராம் கொழுப்பை உட்கொள்கின்றன.
- ஒட்டுமொத்த உடல் பருமனானது நகர்ப்புறப் பகுதிகளில் 12.5% ஆகவும் ஊரகப் பகுதிகளில் 4.8% ஆகவும் உள்ளது.
- ஏறத்தாழ 31.4% நகர்ப்புறத்தினர் அதிக எடைகொண்டவர்களாக உள்ளனர். ஆனால் ஏறத்தாழ 16.6% ஊரகப் பகுதியினர் மட்டுமே அதிக எடை கொண்டவர்களாக உள்ளனர்.

## தரவு ஆளுகை தரக் குறியீட்டு ஆய்வு

- சமீபத்தில் நிதி ஆயோக் மற்றும் வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகமானது (DMEO - Development Monitoring and Evaluation Office) தரவு ஆளுகை தரக் குறியீட்டு ஆய்வை நடத்தியது.
- மத்திய உரங்கள் துறையானது (மத்திய இரசாயன மற்றும் உரங்கள் துறை அமைச்சகம்) 65 அமைச்சகங்கள்/துறைகளிடையே 3வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- இது அவற்றிகிடையே ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்துவதையும் சிறந்த நடைமுறைகளிலிருந்து கற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியர்களின் உடல் எடைக் குறிப்பு

- சமீபத்தில் தேசிய ஊட்டச்சத்து மையமானது ஆண்கள் மற்றும் பெண்களின் சீர்மை உடல் எடைக் குறிப்பை அதிகரித்துள்ளது.
- இந்தியர்களின் சராசரி உடல் எடையானது 5 கிலோ கிராம் அதிகரிக்கப் பட்டுள்ளது.
- எனவே இந்தியர்களின் தற்போதைய சீர்மை, எடை ஆண்களுக்கு 65 கிலோகிராம் ஆகவும் பெண்களுக்கு 55 கிலோ கிராம் ஆகவும் உள்ளது.
- இதற்கு முன்பு, இந்திய ஆண்களின் சீர்மை எடை 60 கிலோ கிராமாகவும் இந்தியப் பெண்களின் சீர்மை எடை 50 கிலோ கிராமாகவும் இருந்தது.

## வனவிலங்கு வாரம் - அக்டோபர் 02/08

- இந்தியாவின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைக் காத்துப் பாதுகாக்கும் நோக்கில் வனவிலங்கு வாரமானது ஆண்டுதோறும் அக்டோபர் 2 முதல் 8 வரை இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- முதல் வனவிலங்கு வாரம் 1957 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் வனவிலங்கு வாரமானது 66வது வனவிலங்கு வாரத்தைக் குறிக்கிறது.
- இது 'RoaR (Roar and Revive - கர்ஜனை மற்றும் புத்துயிர்) – மனித விலங்கு உறவுகளை ஆராய்தல்' என்ற கருத்துருவின் கீழ் கொண்டாடப் பட்டது.

## வறுமை மற்றும் பகிரப்பட்ட அபிவிருத்தி அறிக்கை 2020

- "வறுமை மற்றும் பகிரப்பட்ட அபிவிருத்தி அறிக்கை 2020 : செல்வ வளத்தின் தலைகீழ்" Poverty and Shared Prosperity 2020: Reversals of Fortune" எனப்படும் இது உலக வங்கியினால் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படும் அறிக்கையாகும்.
- இது உலகளாவிய வறுமை மற்றும் பகிரப்பட்ட அபிவிருத்தியில் உள்ள போக்குகள் குறித்து சமீபத்திய மற்றும் துல்லியமான கணிப்புகளுடன் உலகக் கண்ணோட்டத்தை அளிக்கின்றது.

### *சிறப்பம்சங்கள்*

- சராசரி வறுமை நிலையானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக 3 முதல் 10 ஆண்டுகளுக்குப் பின்னடைவை நோக்கிச் செல்லவிருப்பதாக இந்த ஆய்வானது கண்டறிந்துள்ளது.

- கோவிட் – 19 நோய்த் தொற்றானது கூடுதலாக 88 மில்லியன் முதல் 115 மில்லியன் மக்களை இந்த வருடம் மிகக் கடுமையான வறுமையில் தள்ளும் என்று கணித்து உள்ளது.
- கொள்ளை நோய் மற்றும் பொருளாதார மந்த நிலையானது 1.4% உலக மக்கள் தொகையை மிகக் கடுமையான வறுமையில் தள்ள உள்ளது.
- உலகளாவிய மிகக் கடுமையான வறுமை விகிதமானது 2020 ஆம் ஆண்டில் 1.3% முதல் 9.2% வரை அதிகரிக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இந்த நோய்த் தொற்று இல்லையென்றால், வறுமை விகிதமானது 2020 ஆம் ஆண்டில் 7.9% ஆகக் குறையும் என்று கணிக்கப் பட்டிருந்தது.
- ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதி மற்றும் ஆசியா ஆகியவை உலக வங்கியின் கணிப்பின் படி மிக மோசமான நிலையைச் சந்திக்கவுள்ளன.

COVID-19, CLIMATE CHANGE AND POVERTY

FIGURE 1.4 Nowcasts of the Global Poverty Rate and Number of Poor at the US$1.90-a-Day Poverty Line, 2015–21




## ஐக்கிய நாடுகளின் "குழந்தை இறந்து பிறத்தல்" அறிக்கை

- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் "ஒரு புறக்கணிக்கப்பட்ட நிகழ்வு : குழந்தை இறந்து பிறத்தலின் உலகளாவிய சுமை" என்பது குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இந்த அறிக்கையானது யுனிசெப், உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- குழந்தை இறந்து பிறத்தல் (குறைப் பிரசவம்) என்பது 28 வார கால பிரசவத்தில் உயிர் வாழ்வதற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் இறந்து பிறக்கும் ஒரு குழந்தையைக் குறிக்கின்றது.
- குழந்தை இறந்து பிறக்கும் ஒரு நிகழ்வானது ஒவ்வொரு 16 வினாடிகளுக்கும் ஒருமுறை நடக்கின்றது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்த நிகழ்வுகளில் 84% குறைந்த மற்றும் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நிகழ்கின்றது.
- ஐக்கிய நாடுகளில் குழந்தை இறந்து பிறத்தல் குறித்த அறிக்கை வெளியிடப் படுவது இதுவே முதல்முறையாகும்.

### *இந்தியாவின் நிலை*

- உலகம் முழுவதும் நிகழ்ந்துள்ள 19 மில்லியன் குழந்தை இறந்து பிறத்தலில், இந்தியாவின் பங்கு 0.34 மில்லியன் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

- இந்தியா மற்றும் நைஜீரியா, காங்கோ, பாகிஸ்தான், சீனா மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகள் உலகில் பாதிக்கும் மேற்பட்ட குழந்தை இறந்து பிறத்தலைப் பதிவு செய்துள்ளன அல்லது அதற்குக் காரணமாக உள்ளன.
- இந்தியாவில் குழந்தை இறந்து பிறத்தல் நிகழ்வின் குறைப்பானது கடந்த 20 ஆண்டுகளில் மேம்பட்டுள்ளது.
- குழந்தை இறந்து பிறத்தல் விகிதமானது 2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010ல் 2.7% என்ற அளவில் மேம்பட்டு இருக்கின்றது.

## ஆக்ஸ்பேம் அமைப்பின் "சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான பொறுப்புடைமை" (CRI) என்ற குறியீடு

- இந்தியாவானது 2020 ஆம் ஆண்டின் CRI (Commitment to Reducing Inequality) குறியீட்டில் மொத்தமுள்ள 158 நாடுகளிடையே 129 வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டு உள்ளது.
- இந்தக் குறியீட்டின் 3வது பதிப்பானது கோவிட் – 19 நோய்த் தொற்றுக் காலத்தில் சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடுவதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் CRI குறியீட்டில் நார்வே முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் 158வது இடத்தில், அதாவது கடைசி இடத்தில் தெற்கு சூடான் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது தனிச் சுதந்திர வல்லுநர்களிடமிருந்து தரவுகளைப் பெற்று, சர்வதேச நிதி மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேச அறக்கட்டளை அமைப்பான "ஆக்ஸ்பேம் சர்வதேசம்" என்ற மையத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது பொதுச் சேவைக் கூறு, செயல்பாட்டு வரிக் கூறு, தொழிலாளர் உரிமைகள் கூறு ஆகிய 3 கூறுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளது.
- இந்தியாவானது கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட பொதுச் சேவைகள் மீதான செலவழிப்பாளர்களில் கடைசியில் உள்ள 10 இடங்களில் 5வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

**Table 1: CRI Index ranking of 158 countries – the top 10**

| COUNTRY | PUBLIC SERVICES RANKING | TAX RANKING | LABOUR RANKING | CRI RANKING |
|---|---|---|---|---|
| Norway | 14 | 21 | 1 | 1 |
| Denmark | 8 | 28 | 2 | 2 |
| Germany | 5 | 17 | 11 | 3 |
| Belgium | 7 | 37 | 8 | 4 |
| Finland | 2 | 61 | 4 | 5 |
| Canada | 26 | 8 | 20 | 6 |
| France | 3 | 47 | 16 | 7 |
| New Zealand | 21 | 11 | 34 | 8 |
| Austria | 10 | 50 | 18 | 9 |
| Sweden | 11 | 78 | 7 | 10 |

**Table 2: Top three low-income (LIC) and lower-middle-income (LMIC) countries**

| COUNTRY | INCOME | PUBLIC SERVICES RANKING | TAX RANKING | LABOUR RANKING | CRI RANKING |
|---|---|---|---|---|---|
| Ukraine | LMIC | 24 | 58 | 39 | 28 |
| Kyrgyz Republic | LMIC | 48 | 14 | 61 | 37 |
| Togo | LIC | 133 | 2 | 112 | 82 |

## சுகாதாரச் செலவிடல் குறியீடு

- ஆக்ஸ்பேம் ஆனது 2020 ஆம் ஆண்டிற்கான சுகாதார செலவிடல் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆய்வு, இந்தியாவானது சுகாதாரத்திற்காக தனது நிதிநிலை அறிக்கையின் அளவில் 4%ற்கும் குறைவான தொகையையே செலவிடுகின்றது என்று கூறுகின்றது. இந்தக் குறியீட்டில் இந்தியா 155வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- மேலும், ஆய்வு செய்யப்பட்ட 158 நாடுகளில் 26 நாடுகள் மட்டுமே பரிந்துரைக்கப் பட்டுள்ள சுகாதாரத்திற்காக வேண்டி தனது நிதிநிலை அறிக்கையில் 15% தொகையைச் செலவிடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**HOW THE SAARC NATIONS FARE**

| Country | Public services ranking* | Tax ranking | Labour ranking | Overall ranking |
|---|---|---|---|---|
| India | 141 | 19 | 151 | 129 |
| Pakistan | 148 | 71 | 116 | 128 |
| Bangladesh | 142 | 32 | 109 | 113 |
| Nepal | 120 | 16 | 130 | 112 |
| Bhutan | 124 | 130 | 141 | 146 |
| Afghanistan | 153 | 6 | 113 | 102 |
| Sri Lanka | 106 | 91 | 86 | 94 |

*Health + education + social protection

## பேரிடர்களின் மனித விலை 2000-2019 அறிக்கை

- இந்த அறிக்கையானது பேரிடர் அபாயக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது உயிரியல் பேரிடர்கள் மற்றும் கொரானா நோய்த் தொற்று போன்ற நோய் தொடர்பான பேரிடர்களை ஆய்வு செய்யவில்லை.

### *சிறப்பம்சங்கள்*

- காலநிலையானது கடந்த 20 ஆண்டுகளில் இயற்கைப் பேரிடர்கள் இரட்டிப்பாவதற்குக் காரணமாக இருந்துள்ளது.
- 2000 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே ஏற்பட்ட 7348 பேரிடர் நிகழ்வுகள் 4.2 பில்லியன் மக்களைப் பாதித்துள்ளது.
- 4212ற்கு மேற்பட்ட இயற்கைப் பேரிடர்கள் 1980 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே நிகழ்ந்துள்ளன.
- 6681 காலநிலை தொடர்பான பேரிடர்கள் 2000-19 காலத்தில் பதிவாகியுள்ளன. இதற்கு முந்தைய 20 ஆண்டு காலத்தில் 3656 நிகழ்வுகள் பதிவாகியிருந்தன.
- முக்கியமான வெள்ள நிகழ்வுகள் இரட்டிப்பாகி, 3254 ஆக உள்ளன. கடந்த 20 ஆண்டு காலத்தில் புயல்கள் 1457 ஆக அதிகரித்து (முன்பு இருந்ததை விட) 2034 ஆக உள்ளன.
- சீனாவிற்கு அடுத்து வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட 2வது நாடு இந்தியாவாகும்.
- கடுமையான வெப்பம் மிகக் கொடுமையான ஒன்றாக உள்ளது.
- இந்தியாவில் 2015 ஆம் ஆண்டின் அனல் காற்றினால் 2248 இறப்புகள் ஏற்பட்டுள்ளன.
- இந்த தரவானது ஆசியாவானது கடந்த 20 ஆண்டில் 3068 பேரிடர்களுடன் அதிக எண்ணிக்கையிலான பேரிடர்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றது. இதற்கு

அடுத்து அமெரிக்கா 1756 பேரிடர்களுடனும் ஆப்பிரிக்கா 1192 பேரிடர்களுடனும் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

- பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் 577 பேரிடர்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து 467 பேரிடர்களுடன் அமெரிக்காவும் 321 பேரிடர்களுடன் இந்தியாவும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

## ஆரோக்கிய வாழ்வுத் திட்டம்

- ஆரோக்கிய வாழ்வு என்ற ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்காக எச்டிஎப்சி வங்கி மற்றும் அப்போலோ மருத்துவமனை ஆகியவை கைகோர்த்துள்ளன. அந்த வகையில் இதே வகையைச் சேர்ந்த நாட்டின் முதலாவது முன்னெடுப்பு இது ஆகும்
- இது அப்போலோ 24/7 என்ற அப்போலோவின் டிஜிட்டல் தளம் மூலமாக அணுகக் கூடிய மற்றும் செலவு குறைந்த வகையில் ஆரோக்கிய வாழ்வை ஏற்படுத்தும் ஒரு முழுமையான சுகாதார நலத் தீர்வாகும்.

## காலநிலைச் சேவைகளின் நிலை அறிக்கை - 2020

- உலக வானிலை அமைப்பானது காலநிலைச் சேவைகள் 2020 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அக்டோபர் 13 அன்று பேரிடர் அபாயக் குறைப்புக்கான பன்னாட்டு நாளை முன்னிட்டு இது வெளியிடப் பட்டது.




### *சிறப்பம்சங்கள்*

- மூன்று பேரில் ஒருவர் முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பு முறைகளால் (Early warning systems) போதுமான பாதுகாப்புடன் இல்லை.
- கடந்த 50 ஆண்டுகளில், 11,000க்கும் மேற்பட்ட பேரிடர்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் இவை வானிலை, காலநிலை மற்றும் நீர் தொடர்பான ஆபத்துகளை ஏற்படுத்தி உள்ளன.
- இதில் 2 மில்லியன் உயிரிழப்புகள் மற்றும் 3.6 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இழப்புகள் உள்ளடங்கும்.
- 2030 ஆம் ஆண்டு வாக்கில் பன்னாட்டு மனிதாபிமான முறையை (international humanitarian system) எடுத்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை ஒரு ஆண்டுக்கு சுமார் 20 பில்லியன் அமெரிக்க டாலர் செலவில் 50% அதிகரிக்கும்.

### *உலக வானிலை அமைப்பு*

- இந்த அமைப்பானது 1873 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பன்னாட்டு வானிலை அமைப்பின் (International Meteorological Organization) கீழ் நிறுவப்பட்டது.

- 1947 ஆம் ஆண்டின் உலக வானிலை ஒப்பந்தமானது முறையாக உலக வானிலை அமைப்பை நிறுவியது.
- உலக வானிலை அமைப்பானது 193 நாடுகள் மற்றும் பிரதேசங்களை உள்ளடக்கியதாகும். மேலும் இது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.
- இது வளிமண்டல அறிவியல், நீர்நிலை, காலநிலை மற்றும் புவி இயற்பியல் தொடர்பான பன்னாட்டு ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் பொறுப்பை உடையது.

## ஊழல் குறித்த டிரான்ஸ்பரென்சி சர்வதேச நிறுவனத்தின் அறிக்கை

- டிரான்ஸ்பரென்சி நிறுவனமானது "ஊழலை ஏற்றுமதி செய்தல் 2020 – ஓஇசிடியின் லஞ்ச எதிர்ப்புப் பிரகடனத்தின் அமலாக்கத்தை மதிப்பிடுதல்" என்ற ஒரு அறிக்கையை சமீபத்தில் வெயிட்டுள்ளது.
- இதில் ஆய்வு செய்யப்பட்ட சீனா, ஜப்பான், இந்தியா, தென் கொரியா, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய 6 ஆசிய நாடுகளும் 4 பிரிவுகளில் கீழ் நிலையில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்த 6 நாடுகளும் அரசாங்கத்தின் அயல்நாட்டு அலுவலர்களின் லஞ்சத்திற்கு எதிரான எந்தவொரு அமலாக்கத்தையும் "சிறிதளவோ அல்லது முழுமையாகவோ" கொண்டிருக்க வில்லை.
- இது இந்தியா அதன் ஏற்றுமதியாளர்கள் மீது அயல்நாட்டு அலுவலர்களால் வாங்கப் படும் லஞ்சத்திற்கு எதிரான ஒரு நடவடிக்கையை போதிய அளவில் செயல்படுத்த வில்லை என்று கூறுகின்றது.
- அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், சுவிட்சர்லாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய 4 நாடுகள் மட்டுமே முன்னிலைப் பிரிவான "செயல்திறன்மிக்க அமலாக்கம்" என்ற பிரிவில் இடம் பிடித்துள்ளன.

**Enforcement against foreign bribery**

| Level | Selected countries/territories |
|---|---|
| Active | U.S., U.K., Switzerland, Israel |
| Moderate | Germany, France, Australia, Brazil, Sweden |
| Limited | Netherlands, Canada, South Africa, Chile, New Zealand |
| Little or no | China, Japan, South Korea, Hong Kong, India, Singapore, Belgium, Finland |

*47 economies scored based on number of investigations launched, other enforcement performance from 2016 to 2019*
*Source: Transparency International*

## உலகப் பட்டினிக் குறியீடு 2020

- உலகப் பட்டினிக் குறியீடானது வெல்ஹங்கர் லைப் மற்றும் கன்சர்ன் வேர்ல்டுவைடு (Welhunger life and Concern Worldwide) ஆகியவற்றினால் கூட்டாகத் தயாரிக்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது உலக நாடுகளை ஊட்டச்சத்துக் குறைபாடு, உயரத்திற்கு ஏற்ற எடை இல்லாதது, எடைக்கேற்ற உயரம் இல்லாதது மற்றும் குழந்தை இறப்பு ஆகிய 4 குறிகாட்டிகளின் அடிப்படையில் அந்த நாடுகளைத் தரவரிசைப் படுத்துகின்றது.

**Where India stands**

The Global Hunger Index score is computed using four indicators – undernourishment, child wasting, child stunting and child mortality. A country's GHI score is classified by severity – low ( ), moderate ( ) and serious ( )



| RANK | COUNTRY | 2020 SCORE |
|---|---|---|
| 1-17* | China | <5 |
| 64 | Sri Lanka | 16.3 |
| 73 | Nepal | 19.5 |
| 75 | Bangladesh | 20.4 |
| 78 | Myanmar | 20.9 |
| 88 | Pakistan | 24.6 |
| **94** | **India** | **27.2** |
| 99 | Afghanistan | 30.3 |

**17 countries have scores of less than 5 and are collectively ranked 1-17*

### *சிறப்பம்சங்கள்*

- இந்த அறிக்கையானது இந்தியாவை "கடுமையான பிரிவின்" கீழ் வைத்துள்ளது. மேலும் அது இந்தியாவிற்கு 27.2 மதிப்பெண்களைத் தந்து இருக்கின்றது.
- இந்த ஆண்டில் மொத்தமுள்ள 107 நாடுகளிடையே இந்தியாவானது 94வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் நேபாளம் 73வது இடத்திலும் வங்கதேசம் 75வது இடத்திலும் பாகிஸ்தான் 88வது இடத்திலும் இதில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இதற்கு முன்பு 2018 ஆம் ஆண்டில் இந்தியா 103வது இடத்திலும் 2019 ஆம் ஆண்டில் 102வது இடத்திலும் தரவரிசைப்படுத்தப்பட்டு இருந்தது.
- இந்தியாவில் 0–5 வயதுக் குழுவினரிடையே எடைக்கேற்ற உயரம் இல்லாத விகிதமானது 37.4% ஆகப் பதிவாகியுள்ளது.
- உயரத்திற்கேற்ற எடை இல்லாத விகிதமானது 17.3% ஆகப் பதிவாகியுள்ளது.
- இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாட்டு விகிதமானது 14% ஆகப் பதிவாகியுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, குழந்தை இறப்பு விகிதமானது 3.7% ஆக உள்ளது.

### *குறிப்பு*

- "உயரத்திற்கு ஏற்ற எடை" என்பது "உயரத்திற்கேற்ற அளவில் இல்லாது குறைந்த அளவில் எடையை" கொண்டிருப்பதைக் குறிக்கின்றது.
- "ஊட்டச்சத்துக் குறைபாடு" என்பது தேவைக்குக் குறைவான கலோரியை எடுத்துக் கொள்ளும் மக்கள் தொகையின் பங்காகும்.
- "எடைக்கேற்ற உயரம்" என்பது குழந்தையானது அதன் எடைக்கேற்ற உயரத்தைக் கொண்டு இருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## அர்டான் கேபிடலின் கடவுச் சீட்டுக் குறியீடு

- உலகில் மிகவும் சக்திமிக்க கடவுச்சீட்டு கொண்ட நாடாக நியூசிலாந்து உருவெடுத்துள்ளது.
- அந்நாட்டின் குடிமக்கள் 129 நாடுகளுக்கு நுழைவு இசைவு அற்ற பயணத்தை மேற்கொள்கின்றனர்.
- ஜப்பான் ஆனது 2வது இடத்திலும் ஜெர்மனி, ஆஸ்திரியா, லக்ஸம்பெர்க், சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, தென்கொரியா, ஆஸ்திரேலியா ஆகியவை அதற்கு அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- ஸ்பெயின் நாடானது சுவீடன், பெல்ஜியம், பிரான்சு, பின்லாந்து மற்றும் இத்தாலி ஆகியவற்றுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

- ❖ இந்தியக் கடவுச் சீட்டானது 52 நாடுகளில் நுழைவு இசைவு அற்ற அணுகல் (18 நாடுகளில் நுழைவு இசைவு அற்ற அணுகல் மற்றும் 34 நாடுகளில் தங்கள் பயணத்தின் போது உடனடி நுழைவு இசைவு வசதியினைப் பெறுதல்) வசதியுடன் 58வது இடத்தில் அந்தப் பட்டியலில் தரவரிசையில் உள்ளது.
- ❖ இந்தக் குறியீட்டில் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் ஆகியவை இரண்டும் 31வதாக தரவரிசைப் படுத்தப் பட்டு, கடைசி இடத்தில் உள்ளன.

## உலக காச நோய் (TB) அறிக்கை 2020

- ❖ சமீபத்தில் உலக சுகாதார நிறுவனமானது உலக காச நோய் அறிக்கை, 2020 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கை கோவிட் – 19 தொற்றானது உலகில் காச நோய் தொடர்பான இறப்புகளை 8 ஆண்டுகளுக்குப் பின்நோக்கி இழுத்துச் சென்று விடும் என்று கூறுகின்றது.
- ❖ வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இது TB (Tuberculosis) இறப்புகளை 0.2 லிருந்து 0.4 மில்லியனாக அதிகரிக்கக் கூடும் என்று தெரிகின்றது.

### *சிறப்பம்சங்கள்*

- ❖ பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, தென் ஆப்பிரிக்கா ஆகியவை உலகில் 44% காச நோய் நிகழ்வுகளுக்குக் காரணமாக விளங்குகின்றன.
- ❖ மருந்து எதிர்ப்பு கொண்ட காச நோயினை அதிகம் கொண்டுள்ள மூன்று நாடுகள் இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகியனவாகும்.
- ❖ உலகில் மூன்றில் 2 பங்கு காச நோய் நிகழ்வுகளுக்குத் தாயகமாக இருக்கும் 8 நாடுகள் இந்தியா, இந்தோனேஷியா, சீனா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், நைஜீரியா, வங்க தேசம் மற்றும் ரஷ்யா ஆகியனவாகும்.
- ❖ 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டத்தில், 9% TB நிகழ்வுகள் குறைந்துள்ளன மற்றும் 14% TB இறப்புகள் குறைந்துள்ளன.
- ❖ இந்தியாவானது உலகில் அதிக TB நிகழ்வுகளைக் கொண்டுள்ளது.
- ❖ மொத்த உலக TB நிகழ்வுகளில் 26% நிகழ்வுகள் இந்தியாவில் ஏற்படுகின்றன.
- ❖ இந்தியாவானது 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் TB நிகழ்வுகளை அறிவிக்கச் செய்வதில் 85% என்ற அளவிற்கு ஒரு சரிவை ப் பதிவு செய்துள்ளது.
- ❖ TB இறப்புகள் 2,00,000 மற்றும் 4,00,000 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட அளவில் இருக்கும்.

## இந்திய அறிவுசார் சொத்து அறிக்கை 2018-19

- ❖ அறிவுசார் சொத்து குறித்த இந்திய வருடாந்திர அறிக்கையானது இந்திய அரசினால் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ இதனுடன், 2018-19 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரத் தரவரிசையானது இந்திய அரசின் தலைமைக் காப்புரிமை, வடிவமைப்பு மற்றும் முத்திரை அலுவலகத்தினால் இறுதி செய்யப் பட்டுள்ளது.

- இதில் இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிடையே, சண்டிகர் காருன் பல்கலைக்கழகம் (Chandigarh University Gharuan) முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இது ஒரு ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான காப்புரிமைகளை (336 காப்புரிமைகள்) தாக்கல் செய்ததற்காக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்து 239 காப்புரிமைத் தாக்கல்களுடன் டாடா ஆலோசக சேவைகள் நிறுவனம் இடம் பிடித்துள்ளது.
- சிஎஸ்ஐஆர் (CSIR) 202 காப்புரிமைத் தாக்கல்களுடன் 3வது இடத்திலும் பிஎச்இஎல் (BHEL) ஆனது 173 காப்புரிமைத் தாக்கல்களுடன் 4வது இடத்திலும் உள்ளன.
- ஒட்டுமொத்த காப்புரிமைத் தாக்கல் பிரிவில், 27 இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் 557 காப்புரிமைகளைத் தாக்கல் செய்துள்ளன.

### *மாநிலத்தின் செயல்பாடுகள்*

- பஞ்சாப் மாநிலமானது முதன்முறையாக ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறையில் இந்தியாவின் முதல் 10 மாநிலங்களில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் 507 காப்புரிமைத் தாக்கல்களுடன் ஹரியானா இரண்டாம் இடத்திலும் 193 காப்புரிமைத் தாக்கல்களுடன் இமாச்சலப் பிரதேசம் 3வது இடத்திலும் உள்ளது.

## நாஸ்கா வரி பூனை – வரைபடம்

- பெருவைச் சேர்ந்த தொல்லியல் அறிஞர்கள் பெருவின் புகழ்பெற்ற நாஸ்கா வரிகளில் 37 மீட்டர் நீளம் கொண்ட ஒரு பூனை வரைபடத்தைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- இது ஓர் உலகம் அறிந்த யுனெஸ்கோ பாரம்பரியத் தளமாகும்.
- நாஸ்கா வரிகளானது 2000 ஆண்டுகளுக்கு முந்தைய நூற்றுக்கணக்கான மிகப்பெரிய புவியியல் வரைபட அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட இந்தப் பூனையின் வரைபடமானது இதற்கு முன்பு கண்டுபிடிக்கப் பட்டதை விட மிகப் பழமையானதாகும்.
- இந்தப் பூனை வரைபடமானது 37 மீட்டர் நீளம் கொண்டதாகவும் பராகஸ் சகாப்தமான கி.மு. 500 முதல் கி.பி. 200 என்ற ஒரு காலக்கட்டத்தைச் சார்ந்ததாகவும் உள்ளது.
- நாஸ்கா வரிகள் என்பவை சரளைக் கல், கற்கள் அல்லது மரம் வெட்டுத் தூசு போன்ற புவியியல் கூறுகளைப் பயன்படுத்தி நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள புவியியல் வரைபடத் தோற்றங்களின் ஒரு குழுவாகும்.
- இந்த வரிகள் 1927 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டன.
- இது 1994 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ பாரம்பரியத் தளமாக அறிவிக்கப் பட்டது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★